# INTRODUCTION.

No enterprise is so praiseworthy at present as an attempt however humble to add to vernacular literature. There is no doubt that with the exception of a few missionary bodies overzealous in the cultivation of the languages of the country in which their life-work is cast and of the Government vaguely interested in preventing the undue sacrifice of the vernaculars to English, the cause of vernacular education in this country is suffering a great deal for want of stout championing It is true that occasionally appeals have been made to the public by devoted gentlemen and public bodies for active co operation in raising the vernaculars from their moribund condition. But the endeavours they have called forth have indeed been so feeble that they are not calculated to counter-act such potent causes of deterioration; as the great in-sufficiency of demand for high vernacular schalarship and the consequent want of public regard for it as is evidenced in the miserable salary of vernacular pundits in schools and colleges. But apart from what the Government can further do to help a great people in their earnest endeavours to elevate their native language I believe the cause will greatly be strengthened if every educated gentleman devotes a part of his leisure hours to improve his knowledge of the mother tongue and leads in the diffusion of this knowledge among the members of his family. Suitable and interesting books in the vernacular are quite necessary for this purpose, both literary and scientific, providing food for thought and assimilation for both men and women young and old; and so the importance of any voluntary contribution in this direction can never be overated.

There are three kinds of Tamil Literature in which our ancients are said to have excelled; namely, Poetry, Songs and Dramas. Of these only the first has come and done to us in some form but the other two have been entirely lost to us. In recent years, efforts have been made to add to the former and revive the latter. Poetry being the gift of the few and inconsistent with the dull mechanical life of an advanced age has received but little substantial additions either as epic or as dramatic composition. On the other hand dramas in prose have been attempted to some extent, whereas songs sung to music are chiefly confined to the stage, are made to suit the tastes of a demoralised audience and have therefore no claim to be classed with literature [illegible]

A new field of activity has however been opened by the introduction of Novels from the West. As the name implies, it must have been of comparatively recent origin even in the west. Though at first intended to be a fictitious narrative professing to be conformed to life, and intended to exhibit the operations of human passions, especially love, sense was gradually widened so to include besides 'Romance' in which highly improbable incidents are introduced, novels of historical, philosophical, and scientific interest. As the matter in those novels generally contain much that appeal to the deepest feelings of man, they easily find their way into Tamil Literature.

Much caution is, however needed on the part of those who undertake a work of this kind. Our passions are wild and need to be tamed if they should have moral value. An indiscriminate appeal to the ungoverned sentiments of the readers is prone to bring about a contrary effect. It is indeed a pity that the most fundamental principles of the working of the human mind should be neglected by some authors who pander to the public taste in their feverish anxiety to interest and so to invite the attention of the readers. Love is often degraded though from no conscious motive may be, and, what is worse, pictures are brought in quite incongruous and most revolting to the moral sense of cultured public. Novels should be true to life; and authors may justly expose evils in the social and private life of a community. But this principle is often too literally understood, and it is not difficult in our days to meet with authors who take rambling walks into forbidden paths of private life and take trouble to describe scenes which should never be committed to the pen at all or suggest ideas which has great moralising effect. It seems as if these writers imagine that there is nothing in the daily life of a man that cannot be opened to public gaze, and believe that, the more they are labouring for the exposition of such hidden vices, the more are they labouring for the cause of humanity. The world moves more by suggestions than the sermons.

The language of a novel should necessarily be of a high standard, except where the author has introduced characters representing low life who may be made to speak in their own colloquial language to give the scene a realistic effect, and to break the sententious effect of the language of the author. But how often are the limits for the use of such dialogues transgressed in some of our vernacular novels, in which they are either dragged in or overdone, with no other

motive than that of popularising them. Such a prediliction on the part of an author cannot fail to produce an unwholesome effect on the language of his work. In some Novels which purport to be translations of foreign ones the matter is sometimes an adaptation of the original without regard to their suitability to native conditions. In most cases the language is translatory.

From the foregoing remarks it should not however be inferred that all the productions of the kind of our literature are of little value. There are indeed many good ones already in the field such as "Pramakalavatheeyam" "Pathmavathy" etc., but Novels such as those of Scott, or Dickens, or Thackeray or George Elliot have yet to be written. In fact the best productions seem to be the earliest, and this may be due to the fact that the character and the aims of the authors themselves have gone down to a considerable extent. It will be desirable that authors have always a settled theme to work upon and facts are woven round it, which though foreign and borrowed, may be assimilated and made indigenous by being invested with a native garb. Ponmandalamannan a Tamil novel by "Athreya Sree Krishna Sastriyar" is an adaptation of the "Count of Monte christo" by Alexander Dumas" and is the second novel published by him, his first novel being "Venivathy" published in 1909 It is written in easy and good Tamil, and brings out clearly the moral of the original which shows how a man of wealth can make use of it for the good of the society, for the correction of vice and the upkeep of order. The author is highly qualified for the task by reason of his proficiency in three languages Tamil, Sanskrit, and English; and his extraordinary powers of composition both in prose and in verse in Tamil. His characteristic assiduity and earnestness well known to all his friends are clearly seen in the attempt in which he has tried to make his characters as Dravidian as possible without at the same time detracting from the grandeur and merit of the theme in the original In the course of his work the author has tried to solve such difficult social problems as "Widow re-marriage", "Marriage after puberty", Reforms in religious observences" etc. and his moral instructions to the young of both the sexes by means of conversations are highly valuable. His work, therefore, I dare say will not go unappreciated.

Tinnevelly,
4th March 1918

N. R. SUNDRAM AIYER M.A. L.T.
*Head Master, Govt. Training School,*
*Tinnevelly.*

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
XV B: 33.



# பொன்மண்டல மன்னன்.

## அத்தியாயம் க.

### -அபிராமன்-

"அழகிய நக்ஷத்திரங்களால் வானம் அலங்கரிக்கப்படுவது போல் பார்க்க விநோதமாய்ப் பூமியிலுள்ள பூச்செடிகளெல்லாம் மலர்களால் அலங்கரிக்கப்படுவது எப்பொழுது? சிவப்பு நிறத்தை எங்கும் பரவச்செய்து, குளங்களுக்கு அழகாய் மலர்ந்து மணம் வீசுகின்ற செந்தாமரை மலர்களைக் கண்டு களித்திருக்கும் பாக்யம் நமக்குக் கிட்டுவதெப்பொழுது? குயில்கள் கூவுவதையும், கிளிகள் கொஞ்சுவதையும், நாகணவாய்ப்புட்கள் பேசுவதையும், இவ்வண்ணமே எல்லாப் பறவைகளும் இனிமையாய்ப் பாடக் கேட்பதெப்பொழுது? சிவப்புக் கற்களைப் பச்சைக் கற்களாக மாற்றக்கூடிய ஜால வித்தைக்காரரைப்போல் சிவந்த தளிர்களைப் பச்சையிலைகளாக வஸந்தகாலம் மாற்றுவதைக்கண்டு இறுமாந்திருப்பது எப்பொழுது? எனக் கவலையுற்றிருந்த வுலகம், வஸந்த தேவா, உனக்கு நல்வரவு அளிக்கின்றது. மெல்லிய தளிர்களோடு கூடிய பூங்கொடிகளாலாகிய கவசமணிந்து, வண்டுகளாலாகிய கடிவாளம் பூட்டிய மந்தமாருதமேயான குதிரைமேல் நீ ஏறிவருவது கண்டு, சிசிரருதுவாகிய உனது எதிரியின் படையெல்லாம் அழிவது போல் மரங்களில் நிறைந்திருந்த இலைகள் உதிர்கின்றன. வரிசை வரிசையாகக் காணப்படுகிற வெளுத்த

பூங்கொத்துக்கள் முத்துமாலையாகவும், பூக்களிலிருந்து தேனுடன் கலந்து ஒழுகுகின்ற பூந்தாதுக்குழம்புகள் சந்தனப்பூச்சாகவும், தளிர்களோடு கூடிய பூமொட்டுக்கள் ரத்நாபரணங்களாகவும், நன்றாக மலர்ந்து பற்பல நிறங்களுள்ள புஷ்பங்கள் சித்திரப் பட்டாடையாகவும் அணிந்து, உனக்காக வந்த பெண்மணியோ வென்றெண்ணுமாறு வனதேவதை விளங்குகின்றாள்! காம்பு அற்று வீழ்ந்து தரையிற் படிந்திருக்கிற வெண்மை நிறமுள்ள மலர்கள் கோலம் போட்டிருப்பதுபோல் மேன்மை பெற்றிருக்கின்றதையும், நன்றாய்ப் பழுத்த பழங்களை வயிறாரத் தின்று அணியணியாயுட்கார்ந்திருக்கிற கிளிகள் தோரணங்கட்டியது போல் விளங்குகின்றதையுங் காணுங்கால், உனக்காக அலங்கரிக்கப்பட்ட கொலு மண்டபங்களோ என்றெண்ணுமாறு பூந்தோட்டங்கள் விளங்குகின்றன!'' என இளவேனிற் பருவத்தை மெச்சிக்கொண்டும், புதிதான பல பண்டங்களால் நிறைந்துள்ள ஓர் கப்பலைக் கடற்கரையோரமாய் ஓட்டிக்கொண்டும் ஓர் வேளாளச் சிறுவன் சென்றான்.

அளவிறந்த செல்வங்கொண்டும், க்ரீடாதிபதியாயும், ஸந்தானங்களால் நிறைந்துமுள்ள ஒருவன், மனக்கவலையுறுங்காரணமுளதோ?

அந்தரங்கத்தை யாராயுங்கால், அன்னவன் மனத்திலும் ஏதேனும் கவலை குடிகொண்டிராமல் இருப்பதில்லை. மிகப் பணக்காரர்கட்கு அப்பணத்தைப் பாதுகாப்பதன் பொருட்டும், க்ரீடாதிபதிக்குப் பல நாடுகளை வென்று ராஜ்யத்தை விசாரிப்பதிலும், ஸந்தானம் நிறைந்தவர்க்கு அக்குழந்தைகளின் அரோகதிடகாத்ரத்தைப்பற்றியும் அளவிறந்த க்லேசமுண்டாவது உலக வழக்கமல்லவா?

தற்காலம், கப்பலோட்டிச் செல்கிற அபிராமன் என்றவாலிபன் கப்பலில் இருக்கிற யந்திரத்திற்குக் கரியள்ளிக் கொட்டுகிற கேவலமான தொழிலில் இருந்தான். தனது நற்குண நற்செய்கைகளாலும், கப்பலோட்டுந் தொழிலை ஊக்கத்தோடு பயின்றதாலும் யந்திரத்திற் கையாளுந் தொழிலுக்கு இச்சிறுவன் உயர்த்தப்ப-

டான். அயல் நாடுகளிலிருந்து திரும்பும்பொழுது திடீரென்று மரணமடைந்து வயது சென்ற பழய மாலுமித் தலைவன், தனது உத்யோகத்தை இவனிடம் ஒப்புவித்திருக்கின்றான். மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளங் கிடைக்கக்கூடிய அப்பெரும் பதவியை இவன் பெற்றிருக்கிறான். ஜீவகோடிகள் அனைத்தும் உல்லாசமடையத்தக்க வஸந்தகாலமும் ஒத்திருக்கும் பொழுது இவன் அளவிறந்த வானந்தமடைய வேண்டியிருக்க, இவனுக்குங் கவலைகளுண்டாயின.

கூடகோபுரங்களாலும், உந்நதமான மாளிகைகளாலும், பூந்தோட்டங்களாலும், விசாலித்த கடைவீதிகளாலும், மனோரஞ்சிதமான பற்பல காட்சிகளாலும் நிறைந்துள்ள பெருந்துறை என்ற நகரத்தில், குணசீலன் என்றழைக்கப்படும் ஒருவனது வீட்டின் பக்கமாய் அமைக்கப் பெற்ற ஓர் குடிசையில், தான் விட்டுவந்த வயதுசென்ற தனது பெற்றோரைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம், இச்சிறுவன் அடைந்த கவலையை அளவிடக் கூடுமோ?

“ஆம் என்னருமைத்தாயைப் பிரிந்து முந்நூற்றறுபத்தைந்து தினங்களாயினவே! ஒருகாசுக்கும் வகையின்றி விட்டு வந்தேனே! அவள் எவ்வாறு துன்புறுகின்றனளோ? தெய்வமே! யான் காணும் வரையிலாவது எனது பெற்றோரை ஜீவதசையில் இருக்குமாறு செய்வீராக! நான் கப்பற்பிரயாணத்திற்கு புறப்பட்டபொழுது என் தந்தை தள்ளாடி நின்று கண்ணீர் வார்த்ததும், என்னன்னை என்னைக் கட்டித் தழுவிமுத்தமிட்டதும் என் மனத்தினின்றும் விலகுமோ? என்னை யீன்றெடுத்து வளர்த்த தாய்தந்தையர்க்கு வயோதிக காலத்தில் என்னாற்கூடியவுதவி புரியாவிடின், இச்சரீரம் எடுத்ததன் பயன்யாதாகும்?” எனக் கவலையுடன் எண்ணமிட்டுக்கொண்டு கப்பலைத் துரிதமாய்ச் செலுத்தினான். பெற்றோரிடத்தில் அபிராமன் வைத்திருந்த அன்பு எவ்வளவு துரிதமாய்ப் பெருந்துறைக்குச் சென்றதோ அவ்வாறே கப்பலுந் துறைமுகம் வந்து நின்றது.

இப்பெருநகரத்திற்குப்பெருந் துறையெனப் பெயரிட்டிருப்பது அதன் துறைமுகத்தாலென்றே சொல்லவேண்டும். கப்பல்

கள் நிற்பதற்கும், ஸாமான்களையேற்றியிறக்குவதற்கும், யாத்திரை செய்பவர் தங்குவதற்கும் தனித் தனியிடங்களும், தூரத்தில் வருங்கப்பல்களுக்கு அறிகுறியாக உன்னதமான வொருதீபஸ்தம்பமும், பார்த்தோர் புகழுமாறு இத்துறைமுகம் அமைக்கப்பெற்றிருக்கின்றது. அயல் நாடுகளுக்கு அனுப்பப்படும் நவதானியங்கள் அடங்கியபொதிகளை மலைபோற் குவித்திருப்பார்கள். கப்பல்கள் வருங்காலத்தில் ஒரு பெரியமணியை நகரெங்கும் கேட்டிடும்படி முழக்குவார்கள். அப்பொழுது இறக்குமதி செய்யுஞ் செட்டிமார் ஏறிப்பார்ப்பதற்கென்று உயர்ந்தவொருமேடை அவ்விடம் கட்டப்பட்டிருந்தது. அபிராமனோட்டுங் கப்பல்கரை சேர்ந்தபொழுது "நமது சிலீமுகம் வந்துவிட்டது" எனச் சொல்லிக்கொண்டு ஒருவன் அம்மேடையிலேறினான். முப்பது வயதுள்ளவனும், ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் இவன் விளங்கினான். இச்சீமான் ஸோனைத்தலைவர் என்ற மறுபெயர் கொண்ட இலைவாணியர் ஜாதியிற்பிறந்தவன். இச்சாதியார், இக்காலத்திலும் நேட்டால், மோரீஸ் முதலிய அயல் நாடுகளுக்குச் சென்றுவாணிபஞ் செய்கிறார்கள்.

இச்செட்டியார், பதினாறு கப்பல்களுக்குச் சொந்தக்காரர். அயல்நாடுகளுக்குச் சென்ற எல்லாக்கப்பல்களுந் துறைமுகம் வந்து சேர்ந்து பலதினங்கள் சென்றும், நமது அபிராமன் ஓட்டுகிற சிலீமுகம் என்ற ஒரு கப்பல் மாத்திரம் ஒருவருஷமாய் வாராதிருந்ததுபற்றி இச்சீமான் கவலையுற்றிருந்தார். இதுவும் வந்து சேர்ந்தகால் ஐம்பதாயிரம் ரூபாய் லாபமும், யாத்திரை சென்றவர்களின் க்ஷேமமும், இவருக்கு ஸந்தோஷத்தை விளைவித்தன. தனக்குச் சொந்தமான வேறு கப்பல்களுக்கு வெவ்வேறு பெயர்களிட்டிருக்க, இக்கப்பலுக்குச் சிலீமுகம் என்ற பெயரை இவர் இட்டிருப்பதற்குக் காரணம் உண்டு. சிலீமுகம் என்ற பதத்திற்கு அம்பு, என்பது பொருள்; ராமபாணம் போல் அதிவேகமாய்ச் செல்லும் இதன் மேன்மை பற்றியன்றோ இதனுக்கு அப்பெயர் வழங்குகின்றது.

மேடையிலேறிய இச் செட்டியாரின் பக்கத்தில், கத்தரித்து அழகு செய்த குடுமியும், நெற்றியில் வாஸனைச் சாந்தும், ஒய்யார

மான மீசையும், சிவப்புச் சாயமேற்றியவுடையும், அதன் மேல் தொங்கியாடுகிற கொத்துச்சாவியும், கையில் கோணலான ஓர் பிரம்புங் கொண்டு பதினெட்டு வயதுள்ள ஓர் வாலிபன் நின்றான். வன், அச்செட்டியாரை நோக்கி, 'அத்தான், நமது சிலீமுகம் இம்மாதிரி சாமஸித்ததுமில்லை, இதற்குமுன் இத்தகைய கம்பீரமாய் வந்துநின்றமிதுல்லை! அதோதெரிகிற பெயரைக் கண்டல்லவா சிலீமுகம் என்று அறிகின்றோம்! பெயரெழுதப்படாவிடில் வேறுயாதோ ஒரு கப்பலென்றே ஊகிக்கவேண்டியிருக்கும். இக்கப்பலில் அல்லவா யாத்திரை செய்ய வேண்டும்' என, அபிராமன் ஓட்டும்பொழுது அக்கப்பல் புதிதாகக் காணப்பட்ட விசேஷத்தைத்தனது ஆசையை வெளியிடுகிறமுகக் குறியோடு சொன்னான்.

கப்பலுங்கிட்டிவிட்டது. அதிலுள்ளவர் கைகொட்டியானந்தித்தார்கள். பெரிய எழுத்துக்களாலெழுதப்பட்ட அக்கப்பலின் பெயரும், சிறு எழுத்துக்களால் குறிக்கப்பட்ட உதயமார்த்தாண்டன் செட்டியார், என்ற அதன் சொந்தக்காரரின் பெயரும் தூரத்திலுள்ளவைகளைப்பார்க்க உபயோகிக்கும் கண்ணாடியில்லாமலே எல்லோரும் பார்க்கக்கூடியபடி அவ்வளவு ஸமீபமாய்க் கப்பற்கிட்டியது.

தூற்றுக்குடி முதலிய கடல் துறைகளைப்போல் அரைக் காதத்திற்கப்பால் கப்பல் நிற்க, படகுகளைக்கொண்டு பண்டங்களை யிறக்குவது போலல்லாது கப்பல் வரக்கூடியபடி நிரம்ப ஆழமுள்ளவிடம் வரையில் கடலின் குறுக்கே ஓர் வாராவதியையுடையது இப்பெருந்துறை! இவ்வழகை முன்னமே சொல்ல மறந்துவிட்டோம். நமது செட்டியாரும், இவரது மாமன்மகனான வீரன் செட்டியும், இவ்வாராவதியின் வழியாய்க் கப்பலினருகிற் சென்றார்கள். அங்கு நெருங்கிய சிலீமுகத்தின் மேல் தட்டில் தலைமை மாலுமிகளுக்கேற்ற வுடையணிந்து, நமது மாலுமிச்சிறுவன் விளங்கினான். அபிராமன் என்ற பெயருக்கேற்ற வழகும், கம்பீரமும் அவனது முகத்தில் பிரகாசித்தன. கப்பலை நிறுத்திய விச்சிறுவன், யஜமானனாகிய செட்டியாருக்கு வந்தனஞ் செய்தான். செட்டியார், பதில் வந்தனமளித்து,

அளவிறந்த மகிழ்ச்சியோடு அச்சிறுமாலுமித் தலைவனை நல்வரவேற்றினார். கிழத்தனமடைந்த பழயமாலுமி யிறந்ததையும், சாகுந்தருணத்தில் அவனது உத்யோகத்தை அபிராமனுக்களித்ததையும், அவ்வேலையில் வேறொருவரை நியமித்தல் கூடாதென அம்மாலுமித் தலைவர் எழுதிவைத்த மரண சாஸனத்தையும், கப்பலில் வந்திறங்கியவர்களாலும், அபிராமனாலும் நமது செட்டியார் தெரிந்துகொண்டார். வேறு நாடுகளில் யாத்திரை செய்த பொழுது நேர்ந்திருக்கக்கூடிய பற்பல விசேஷங்களைப்பற்றியும், கப்பலில் வந்து இறக்கிக் குவிக்கப்பட்டிருக்கிற பல பண்டங்களைப்பற்றியும், அவைகளைப் பெற்றுக்கொள்ள வந்து கூடிய வ்யாபாரிகளைப் பற்றியும் விவரித்துப் புத்தகத்தின் பக்கங்களை வீணே நிரப்பவில்லை. பிறகு, அபிராமனும், உதயமார்த்தாண்டன் செட்டியாரும், வீரன் செட்டியாரும் இரண்டு குதிரைகள் கட்டிய ஓர் அழகிய வண்டியிலேறிப் பெருந்துறையின் கடலோரமாயுள்ள விசாலமான சாலைமார்க்கமாய் ஸவாரி செய்தார்கள். பிறகு முன்புறம் வாஸனை வீசுகின்ற மலர்ந்த மலர்களாலும், இனிய பழந்தரும் தருக்களாலும், சடசடவென்றோடுகின்ற ஓடைகளாலும், மனதைக் கவரத்தக்க உத்யான வனத்தையும், இதற்கப்பால், அந்திவானம்போற் சிவந்த நிறத்தை வானமெங்கும் பரவச் செய்கிற எட்டுத் தங்கக்கலசங்களையுடைய மாளிகையையுங் கொண்ட செட்டியாரின் வீட்டில் இம்மூவரும் வந்து இறங்கினார்கள். விநோதமான படங்களாலும், அழகிய கண்ணாடி விளக்குகளாலும், பட்டு மெத்தைகளோடு இணைக்கப்பெற்ற நாற்காலிகளாலும், விசித்ரமாகச் சிங்கம், யாளி இவைகளையொப்ப வேலைசெய்த கால்களையுடைய மேஜைகளாலும், நடப்பவர் கால்களுக்கு மிருதுவாயிருக்குமாறு ரத்ந கம்பளங்களால் விரிக்கப்பெற்றும் விளங்குகிற மாடியின்மேல் தனித்தனி ஆஸனங்களில் இம்மூவருமுட்கார்ந்தார்கள். பல வேலையாட்கள், பற்பல தின்பண்டங்களையும், தங்கக்கிண்ணங்களில் இனிய பல பானங்களையும் மிகுந்த மரியாதையுடன் இவர்களுக்குக் கொடுத்திருந்தபொழுது, ஒருவராலுமசைக்கப்படாமல் தானாகவே ஓர் பங்கா ஆடிக்கொண்டிருந்தது. முகவசீகரமும், வாக்சாதுர்யமும், மிகுந்த ஸாமர்த்யமுங்கொண்ட அபிராமனுக்குச் செட்டி

யார், கப்பல் தலைவன், என்ற பட்டங்கொடுத்தும், பல ரத்நாபரணங்களையும், மாலுமிகளுக் கேற்ற புதிய பல உடைகளையும் இனாமாகக்கொடுத்தும், கணக்கிடக்கூடாச் செல்வந் தந்தும் மரியாதை செய்தார். தானளித்த பட்டத்தாலும், பரிசுகளாலும் மிகக்களித்திருந்தும், ஓராண்டிற்கு முன் விட்டுப்பிரிந்த தன்னருமைப் பெற்றோரைப் பார்ப்பதில் அதிக தூரிதமாயிருந்த விச்சிறுவனைச் செட்டியார், அவனது இருப்பிடமனுப்பினர்.

அபிராமனது பெற்றோர்கள் மகனைக் கண்டானந்தித்து, அவனுக்குக் கிடைத்த பட்டத்தாலும், பரிசுகளாலும் மனமகிழ்ந்து, தங்களுடைய வறுமைப்பிணியை நீக்கிச் சுகிக்கச் செய்த செட்டியாரை வாயார வாழ்த்தினார்கள். அபிராமன் அப்பட்டினத்தில் ஓர் பெரிய மாடி வீடு வாங்கி, அவ்வீட்டிற்குத் தக்கவாறு பல வேலையாட்களை நியமித்தான்.

மாஸம் ஆயிரம் ரூபாய் சம்பளங் கிடைக்கக்கூடிய ந்யாயாதிபதியாய் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். மிகுந்த ஏழையாயிருந்து இவ்வுத்யோகங்கிடைத்ததால் டம்பமும், தன்னை உயர்த்திப் பேசும் ஸ்வபாவமுங்கொண்ட இவர், ஓர் ஸமயம் மற்றொரு உத்யோகஸ்தரோடு இவரது வீட்டுக் கூடத்தில் பேசிக்கொண்டிருந்த பொழுது ஒரு கிழவர், ஆற்றில் மூழ்கிப் பட்டை பட்டையாய் விபூதியணிந்து அக்கூட்டத்தின் வழியே சென்றார். இதனைக் கவனித்த டம்பக்காரரான ந்யாயாதிபதி, "பார்த்தீர்களா, காலையிலெழுந்தவுடன் காப்பி குடிக்காவிட்டால் நமக்கொன்றும் ஸரிப்படுகிறதில்லை. எனது முன்னோர், பூஜை செய்யக் கணக்கிடக்கூடாத லிங்கங்களை டப்பி டப்பியாய் நிரப்பி வைத்திருக்கின்றார்கள். நமக்கோ, பூஜையுந் தெரியாது; வேதத்தின் வாசனையு மறிந்ததில்லை. ஆகையால், அப்பூஜைக்கென்றே மாஸம் ஐந்து ரூபாய் சம்பளங்கொடுத்தும், தினந்தோறும் ஒரு வேளையாகாரமளித்தும், ஒரு வைதீகரை நியமித்திருக்கின்றேன். இப்பொழுது உள்ளே சென்றவர் அவர்தான்" என மற்றவரிடம் உரைத்தார். குடுமியைக் கத்தரித்தும், மீசையைக் காதுவரையில் வாய்க்குடுமியாக வளர்த்தும், அந்தணர்களுக்குரிய நித்யகர்மாநுஷ்டானங்களை முற்றிலும் மறந்துமிருப்பவர்களில் இவர் ஒருவர். தட்

டான், கோமுட்டி, பட்டுநூற்காரர் முதலிய பலரணிந்திருக்கும் பூணூலுக்கும், மஹா ரிஷியின் கோத்ரத்திற் பிறந்து, அப்பரிசுத்தரின் பெயரைக்கெடுத்து வருகிற தான் அணிந்திருக்கும் பூணூலுக்கும் பேதம் யாதுமில்லையென இவர், வெளிப்படையாய்க் காட்டுகின்றாரல்லவா? உள்ளே சென்ற கிழவர், பூஜை சாஸ்திரிகள், எனச் சொல்லியதைக் கேட்டுவிட்டதால், தான் வைத்திருந்த தீர்த்த பாத்ரம், மடிவேஷ்டிகள் வைக்கும் கம்பளிப்பை முதலியவைகளைக் கீழே வைத்துக் கூடத்தில் நுழைந்து, "ஐயா, நான் பூஜை சாஸ்த்ரிகள் என்றது பொய்யல்ல. தினந்தோறும் பூஜை செய்து இவர் வீட்டில் உண்பதும் வாஸ்தவமே. ஆனால், இவரது அன்னைக்கும் எனக்கும் நீடித்த காலமாக ஸ்நேஹமுண்டு. ஸ்நேஹமென்றால், ஏதோ ஸாதாரணப் பழக்கம், என்று நினைத்துவிடக்கூடாது. பெரிய உத்யோகம் வஹித்து விளங்கும் இவரது பதவியை யோசிக்குங்கால் அதனைச் சொல்ல என் வாய் கூசுகின்றது. நான் செய்வதென்ன? சொல்லித் தீர வேண்டியதாயிற்றே? இதோ சொல்லிவிடுகின்றேன்; சாந்தமாய்க் கேளுங்கள். இவரது அன்னைக்கும் எனக்குமுள்ள நட்பு, இரவிலும் இணைபிரியாது சயனித்துக்கொள்ளும் நட்பாம்! இவர் ர்தான், என் ஸத்புத்ரர்!" எனக் கோபாவேசத்தாலாடிக் கொண்டும், இருகைகளையும் வீசிக்கொண்டும் சொன்னார். இக்கடுமொழியைக் கேட்டுச் சும்மா விருந்த ந்யாயாதிபதியின் முகவிலாசத்தை வர்ணிக்கவும் வேண்டுமோ! இப்படிப் புகழ் பெறும் புதுப் பணக்காரர் இவ்வுலகிற் பலர் உளர்.

'தந்தைதாய்ப்பேண்', 'அன்னையும பிதாவும் முன்னறிதெய்வம்,' என்ற முதுமொழிகளை அதிபால்யத்திற் கற்று, இவ்வயது முதல் அப்பழமொழிகளின்படி நடக்கும் உத்தமனல்லவா நமதபிராமன்!? இவன், காலையிலெழுந்தவுடன் தாய் தந்தையரை வணங்கி அவர்களுக்காக வேண்டிய பணிகளை யியற்றி, ஆஸனத்திலிருக்கச் செய்த பிறகு தனது காலைக்கடன்களை முடித்து ஆஹாராதிகளை யெடுத்துக் கொள்வான். பல வேலையாட்களிருந்தும், தனது ஈன்றோர்களுக்காக வேண்டிய பணிவிடைகளைத் தானே புரிந்து வருவான்.

அயல் நாடுகளுக்குச் சென்று திரும்பிய மாலுமிகள், தங்கள் தங்களூர்களிற் சில மாஸங்கள் தங்கியிளைப்பாறுவதை யநுஸரித்து, அபிராமனுஞ் சிலீமுகத்தைத் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சிப் பெருந்துறையிற் சில காலந்தங்கினான்.

## அத்யாயம் ௨.

### பொறாமை.

பெருந்துறையிலுள்ள அழகியவோர் பூஞ்சோலையின் ருகுக்கே சலசலவென்றோடுகின்ற ஓர் ஓடையின் கரையோரமாயமைக்கப்பட்ட மேடையின்மேலுட்கார்ந்து ஒரு வாலிபன் மனக்கவலையுற்றிருந்தான். இவன், தனக்குத்தானே சொல்லிக்கொண்டிருந்த விஷயங்களைக் கேட்கக் கூடாதபடி அச்சோலையிலுள்ள மலர்களில் ஒழுகிப் பெருகுகிற தேனைப் பருகுகிற வண்டுகள் ரீங்காரஞ் செய்துகொண்டிருந்தன. அப்படியிருந்தும், இவனது எண்ணங்கள் விளங்காமற் போகா. பளிங்குக் கல்லானது தான் மறைத்திருக்கும் பண்டங்களை யெப்படிக்காட்டுகின்றதோ அப்படியே, மனதையடுத்திருக்கிற வெண்ணங்களை முகமாகிய பளிங்குக்கல் விளக்கிவிடுமல்லவா? அவ்வாலிபனது முகத்தை நன்றாய் நோக்குங்கால், அவனது எண்ணங்களனைத்தையும் விசதமாயறிந்துவிடலாம். அவை பின்வருமாறு குறிக்கப்படுகின்றன:—

“எனது வாழ்வும், பெருமையும் யானடுத்திருக்கும் கனவானின் ஜீவகாலம் வரையிலல்லவா? அவர், ஒரு நாள் திரும்பாத வழியிற் செல்வார் என்பது திண்ணம். அப்பொழுது எனது கதி யாதாகும்? ஒருவராலுமாதரிக்கப்படாமலும், பணம் ஸம்பாதிக்கும் வழியறியாமலுங் கஷ்டப்படவேண்டியிருக்குமல்லவா? புதிதாக வரப்போகிற வறுமையை யெவ்வாறு ஸகிப்பேன்! எனக்குப் பயத்தை விளைவிக்கின்றதே! ஐயோ! பால்யம் முதற் சுகமே வாழ்ந்து திடீரெனத் தரித்திரமடையப்போகிற

யான் யாது செய்வேன்?" எனக் கவலையுற்ற இவ்வாலிபன், உதய மார்த்தாண்டன் செட்டியாரின் மாமன் மகனை வீரன் செட்டியென் நாம் நிச்சயிக்கின்றோம். வீரனது எண்ணங்கள் ஸமாப்தியடையவில்லை. மேலும் மேலுமெண்ணுகின்றான். "எனது பால்யத்தை வீணே கழித்துவிட்டேனே! அதனைப்பற்றி இனிக் கவலைப்படுவதிற் பயன் யாது? அயல்நாடுகளுக்குச் சென்று வாணிபஞ் செய்து எனது அத்தானைப்போல் பல கப்பல்களுக்கு முதலாளியாகலாமென்றெண்ணி, மனப்பால் குடித்திருந்தேனே! ஏதோ, ஒரு ஸமயம், அதிகக் கொந்தளிப்பாயிருந்த கடலிற் போகப் பயந்தேனுதலின், யான் எதிர்பார்த்திருந்த மாலுமித் தலைவன் வேலையை, எனது அத்தான், என்னிடம் ஒப்புவிக்காமல், யாரோ ஒரு அநாமதேயப் பேர்வழிக்குச் செய்துவைத்தார். எப்பாடுபட்டாவது அவ்வுத்யோகத்தை நான் ஏற்றுக்கொள்வது ஸர்வ நிச்சயம். தற்காலம் நியமிக்கப்பட்டிருக்கிற அம்மாலுமிக்கு யூர் இடையூறு விளைவிப்பேன், எப்படியாவது அவ்வேலையை ஸம்பாதித்துக்கொள்ளச் சக்தியிலாவிடில் எனக்கு வீரத்தனம் உண்டோ? வீரனென்ற பெயர்தானேற்குமோ?" எனத் தனதெண்ணங்களை ஒருவாறு முடிவுசெய்துகொண்டு, அபிராமனுக்கு எவ்வித இடையூறு விளைவிக்கலாமென யோசித்துக்கொண்டே வீடுபோய்ச் சேர்ந்தான்.

இவ்வீரன்செட்டியிருந்த வேழைக் குடும்பத்திற் பிறந்து, பிள்ளை வயதிலேயே பெற்றோர்களை யிழந்தவன். பந்து ப்ரீதியுள்ள உதயமார்த்தாண்டன் செட்டியார் இவனை யாதரித்து வருகின்றார். எவரும் வெறுக்கத் தக்க குணதிசயமுள்ள இவனை, அச்செட்டியாருக்குப் பிறகு, ஆதரிக்க எவரும் முன்வரமாட்டாரென இவன் ஊஹித்தது வாஸ்தவம். முன்கோபமும், கெட்ட எண்ணங்கள் குடிகொண்ட மனதும் உடையவர்களில் இவன் முதல்வன். கிழட்டுத்தனமடைந்து இறக்குந் தருணத்திலிருந்த பழய மாலுமியின் சாவை இவன் எதிர்பார்த்திருந்தான். இவ்வாறு அவ்வேலைக்கு ஆசை வைத்திருந்த இவன், திடீரென்று ஏமாற்றப்பட்டானல்லவா? இவ்வீரனுக்கு நமதபிராமனிடம் விரோதம் விளையக் காரணமிதுதான். இவ்விரோதத்தை வளர்த்துவருகிற வீரனையவ்விடம் விட்டுவிட்டோம்.

பெருந்துறையின் மற்றோர் பாகத்தில், விசாலமானதும், பெரிய மாளிகைகளால் நிறைந்ததுமான ஓர் வீதியுண்டு. அத்தெருவிலுள்ள ஓர் வீட்டின் பின்புறம் அழகியவோர் பூஞ்சோலையும், அச்சோலையின் மத்தியில் தாமரை மலர்களால் நிறைந்து தெளிந்தவொரு குளமும், அத்தடாகத்தின்கரையில் சிறிய ஒரு கட்டிடமுமிருந்தன. அக்கட்டிடத்தின் உள்ளேயிருந்தவோர் நாற்காலியில் ஓர் பெண் உட்கார்ந்திருந்தாள். நீருண்ட மேகம்போற் கறுத்த அவளது கூந்தலில் மின்னற்கொடிபோல ஆபரணங்கள் விளங்கின. அங்குமிங்குந் திரும்பும்போது அவளது முகம், மேகங்களுக்கிடையே மறைந்து மறைந்து தோன்றுகின்ற முழுமதியைப் பரிஹஸித்தது. மூக்கில் இட்டிருக்கும் மூக்கணியின் நுனியில் தொங்குகிற முத்தானது, இவளது பற்களுக்குள்ள அழகு தனக்கில்லையென, அப்பற்களின் முன்னிலையிலேயே தூக்கிட்டுச் சாகின்றதெனச் சொல்லுமாறு அவளுடைய பற்கள் அவ்வளவு வெண்மையாயும், வரிசையாயும் அமைந்திருந்தன. வைரப்பதக்கத்தோடு ஒளிவீசுகின்ற அட்டிகையும், ரத்நங்களிழைத்த ஒட்டியாணமுங் கொண்டு எவராலும் வர்ணிக்கக் கூடாதபடி நிரம்பிய அழகுள்ளவள் இவ்வங்கனை. இவள், தன்கெதிரிற் போடப்பட்டிருந்த ஒரு மேஜையின் மேல் கம்பராமாயணத்தை வைத்துப் பிரித்துப் படித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது, ஞானசுந்தரி, என்றழைத்துக்கொண்டு ஒருவாலிபன் அக்கட்டிடத்துள் நுழைந்தான். பார்வைக்கு இருபத்தைந்து வயதுள்ளவனும், முறுக்கிய மீசையும், நெற்றியில் சாந்தும், அதன் கீழ்க் குங்குமமும் பொட்டாயிட்டவனும் இருந்தான். பேசும்பொழுது, இவன் பானம் செய்திருக்கிற மதுவின் வாஸனை வீசியதென்றால், இவனது குணாதிசயங்களை வர்ணித்துத் தலைவலியுண்டாக்கக் கருதினோமல்லோம். உள்ளே நுழைந்த இவ்வாலிபன், அங்ஙனமிருந்த கட்டிலில் கால்களை நீட்டிப்படுத்து, 'கண்மணீ, எல்லோரும் வியக்கத்தக்க வுனது அறிவுக்கும், ஞானிகளையும் மயக்குகிற அழகுக்கும் பொருந்துமாறு உனக்கு ஞானசுந்தரி யென்ற பெயர் அமைந்திருக்கின்றது!' என, உரத்திச் சொன்னான். படிக்கும்பொழுது கவனத்தைப் பலவிடங்களிற் செலுத்துகிற சிற்சில மாணாக்கர்களைப்போலல்லாது, இவ்வாலிபன

நுழைந்ததையும், கட்டிலிற் பொட்டெனப் படுத்ததையும், [illegible] வார்த்தைகளையும் ஞானசுந்தரி கவனிக்கவில்லை. [illegible] திரும்பிப் பாராமலும் புத்தகத்தையே கவனி[illegible]ருந்த இவளைக்கண்டு படுத்திருந்த வாலிபன் குப்[illegible]றெழுந்து, அப்புத்தகத்தைத் தன் கையால் மூடினான். [illegible] விழித்தவள்போல் பரபரப்புடன் எழுந்து நின்ற இவ்வநிதை, 'குமாரா, எப்பொழுது வந்தாய்? உட்கார்; கம்பராமாயணத்தில் வாலிவதைப்படலம்படிக்கின்றேன்.' எனச் சொல்லி முன்போலுட்கார்ந்து புத்தகத்தை விரித்தாள். இதனைக் கவனித்த குமரன், 'சுந்தரி, அதிருக்கட்டும், அக் கதை எனக்குத் தெரியும். முன்னமே தெரிந்திருக்கிற கதையைப் படிப்பதிலும் கேட்பதிலும் யாது பயன் விளையப் போகின்றது? நமிருவருக்குமுள்ள நட்பிற்கும், வயதிற்கு மேற்ற விநோத வேடிக்கைகள் கலந்த ஸம்பாஷணையைவிட்டுப் பழய புராணத்தைப் படிக்கத் தொடங்குகின்றாயே! சாகுந்தருணத்திலல்லவா சங்கரா, எனச் சொல்ல வேண்டும். புத்தகத்தை மூடுகின்றாயா? அதைக் குளத்திலெறியவா?' எனக் கூறினான். குடிவெறியினாலும், காமவெறியினாலும் அவனது இருவிழிகளுஞ்சிவந்து நெருப்புப்பொறிகளைக் கக்குவனபோற் காணப்பட்டன. இதனைக் கவனித்த ஞானசுந்தரி, நல்லுபதேசங்களும், இங்கிதவசனங்களும் இத்தடியனுக்குத் தகாதனவெனத் தீர்மானித்து, 'இஃது சற்குணமுள்ளவனுக்கு அழகல்ல. குமாரா, தனியேயிருக்குமென்னிடம் நீ, இம்மாதிரியாகப் பேசுவதும், காமவெறியோடு பார்ப்பதும் உசிதமன்று. வேறு விஷயமேதேனும் பேசுவதானால் இங்கிரு; இல்லாவிடிலெழுந்து போய்விடு' எனக் கோபக்குறியோடுரைத்தாள்.

இங்குவந்திருக்கும் வாலிபன், ஞானசுந்தரியின் அயல் வீட்டிற் பிறந்து வளர்பவன். சிறுவயது முதல் இச் சுந்தரியினிடம் நட்பைப்பாராட்டியவன். இவளை மணந்துகொள்ள வேண்டுமென்ற அவா, இவன் மனத்தில் நிலைபெற்றிருக்கின்றது. ஞானசுந்தரியோ, இவனது நடவடிக்கை முழுதுமறிந்தவளாதலின் இத்துஷ்டனைக் கணவனாக வரிக்க மனமிலாதவளாய், விவாஹ சம்பந்தமாக இவன் பேசும் பொழுதெல்லாம் நிராகரித்துவந்தாள்.

இம்முறை எப்படியாவது இவளை உடன்படச் செய்யவேண்டுமென்ற மனவுறுதிகொண்ட குமரன், 'அடி, கண்மணீ, எவ்வாறு நீ என்னை நிந்தித்தாலும் எனக்கு உன்மீது கொஞ்சமேனுங் கோபம் உண்டாவதில்லை. ஐயோ! அழகினால் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற இவ்வயதை வீணே போக்குகின்றாயே! நீ நேசித்திருப்பவன் இன்னானென்பதும், அவனது தொழில் முதலியவைகளும் எனக்குத் தெரியும். கப்பல் யாத்திரையிலடிக்கடி செல்கிற அபிராமனல்லவா உனதாசை நாயகன். அவ்வாறு யாத்திரை சென்றவன் நெடுநாளாய்த் திரும்பிவரவில்லையென்றும், அவன் சென்றிருக்கிற கப்பலுக்கு எக்கதிவந்ததோவென்றும் உதயமார்த்தாண்டன் செட்டியார் விசாரப்படுகின்றார். கப்பல் எவ்விடத்தில் மூழ்கிற்றோ விளங்கவில்லை! 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குபவன்போல்' அவனை நம்பியிருக்கின்றாயே! பெண்களெல்லோரும் பேதைகளென்ற சொல் சரியாயிற்று! ஆனால், உன்னிடங்கூட இப்பேதைமையிருப்பது மிகுந்த புதுமை! கால தேச வர்த்தமானங்களை யநுஸரித்து, என்னை மணந்துகொள்வதாக நீ ஒப்புக்கொள்வாயென நான் நம்புகிறேன்' என மொழிந்தான்.

இவன் சொல்லியவனைத்தையுங் கவனமாய்க் கேட்டிருந்த ஞானசுந்தரி, "ஏன் என் முன்னிலையில் வீண் வார்த்தைகளைச் சொல்லி நீ இவ்வாறு பிதற்றுகின்றாய்? என்னிடம் உன் எண்ணம் நிறைவேறாது, எழுந்துபோய்விடு" என்றாள். இவள் மனதைக் கலைக்க எவ்வாறு முயன்றும் பயன்படாதது கண்ட குமரன், கோபங் கொண்டெழுந்து இவளருகிலோடினான். அப்பொழுது, அச்சோலையிலுதிர்ந்திருந்த இலைகளிற் சலசலவென்றோர் சத்தம் உண்டாகவே ஸாதுவைப் போலுட்கார்ந்தான். அப்பால், விபூதியணிந்தும், மலர்ந்த செந்தாமரையைப்போல் விளங்குகிற முகவிலாஸத்துடனும், ஓர் வாலிபன் அக்கட்டிடத்துள் நுழைந்தான். இவனைக் கண்டவுடன் வாட்டமடைந்த குமரனது முகத்தையும், முழுமதியைப்போல் விளங்கிய சுந்தரியின் முகத்தையும், நுழைந்தவனது மிகுந்த வழகையும், அவ்வழகுக்குக்கேற்ற வயதையும், கவனித்த நாம், இவன் அபிராமனெனத்தெரிந்துகொண்டோம். இவன் அறையில் ப்ரவேசித்த பிறகு அங்கிருந்த குமரன்,

"வா அப்பா, ஒரு வருஷமாய் நீ தாமஸித்தது கவலைக்கிடமாயிருந்தது. இங்ஙனம் உட்கார். சுந்தரி மிக்க கவலையோடிருந்தாள்" என்றான். அவ்விடம் ஓர் நாற்காலியிலுட்கார்ந்த வபிராமன், மாறுபட்ட முகக்குறியையுடைய குமாரனை நோக்கி, "குமாரா, அதிபால்யம் முதற் பழகுகிற நீ இருக்கும்பொழுது, இப்பெண்மணிக்கு யாது கவலையுண்டாயிருக்கக் கூடும்? இக்கோட்டத்தின் அழகும், தடாகத்தின் குளிர்ச்சியும், வீசுகின்ற வாஸனை கலந்த காற்றின் பெருமையும், இவளது கையிலிருக்குங் கம்பராமாயணத்தின் மகிமையும், உங்களது இணைபிரியா ஸ்நேஹத்தின் ஒருமையும் வேறு கவலையை விளைவிக்குமோ?" எனப் புன்சிரிப்போடு சொன்னான். இதனைக் கேட்ட குமாரன், "ஆமப்பா, ஸ்நேஹந்தான். ஸ்நேஹமென்றால், விளையாடிவரும் சிறு வயதிற் பழகியதற்கும், பிறகு வளர்கிற வேறுவிதமான நட்புக்கும் பேதமில்லையோ? உன்னிடம் வைத்திருக்கும் நட்பை என்னிடம் பாராட்டுவாளா இச்சுந்தரி? ஆகையால் உன்னோடு பேசுவதும், உன்னைப் பார்ப்பதும், இவளுக்கு அதிகமான வாஞ்சத்தை யுண்டாக்குமல்லவா? ஸந்தோஷியுங்கள். நான் போய்வருகிறேன்," எனப் பரிஹஸிப்பவன்போற் சொல்லி யெழுந்து, தனது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்வதில் ஞானசுந்தரியால் நிராஹரிக்கப்பட்டும், அபிராமனது வரவால் தடைப்பட்டும் புண்பட்ட மனதோடு திரும்பினான்.

குமாரன் வெளிப்பட்டவுடன் அபிராமனை யணுகிய ஞானசுந்தரி, "இவ்வளவு காலம் என்னை மறந்திருந்தது யாது காரணம்? உங்களை விட்டுப்பிரிந்திருந்த வெனக்கு ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றிற்றென்றால், அஃது வேசிகளின் வசனத்துக்கீடாகும். உங்களைப் பிரிந்து உயிர்தரிக்க மாட்டேனென்றால் நான் ஒரு வருஷமாய் உயிர் வைத்திருந்தது அவ்வித மொழியைப் பொய்யாக்கும். ஆகையால் ஸ்வபாவத்திலேயே எனக்குத் தங்களிடம் உண்டாயிருக்கிற வாஞ்சையை வெளியிட்டுச் சொல்வதெப்படி?" என, ஆநந்தக்கண்ணீர் ததும்ப மொழிந்தாள். இதனைச் செவியுற்ற வபிராமன், 'என்னுருயிர்த் துணைவி, யான் எங்குபோனாலும் எனது மனது உன்னிடமே

யிருந்திருக்கிற விஷயம் எனக்கல்லவோ தெரியும்!' எனமொழிந் தான். பிறகு, சுந்தரி, எதைப்பற்றியோ யோசனை செய்வதைப் போற் காணப்பட்டதைக் கவனித்த அபிராமன், "சுந்தரி, எதைப் பற்றித் தீர்க்காலோசனை செய்கின்றாய்? வேறு யாரையேனும் கணவனாக வரித்திருக்கின்றாயோ?" எனச்சொன்னான். உடனே சுந்தரி திடுக்கிட்டு, "நினைத்தேன் நான்! குமரன் பக்கத்திலிருந்த போது, எனக்குக் கவலைக்குக் காரணமில்லையென ஜாடையாய்த் தாங்கள் சொல்லியபொழுதே நினைத்தேன்! என் மனதை உள்ளும் புறமும் நன்கு ஆராய்ந்திருக்கிற தங்களுக்கு இவ்விதமான ஸந்தேகம் விளையலாமோ? தக்க வயதடைந்த ஒரு பெண், 'அழகும், புத்தி சாதுர்யமுமிணைந்த வொருவனை மணப்பேனேயல்லாது, குரூபியும், மதியீனனுமான வொருவனைக் கனவிலும் நினையேன்' எனத் தனக்கேற்படக்கூடிய கணவனைப்பற்றிக் கருதுவது வழக்கந்தான். இவ்வாறு நினைத்திருந்தவொரு பெண்ணுக்கு மனதுக்கேற்ற வோராடவனமையாவிடில், அவளது மனதை வெவ்வேறு புருஷர்களிடம் செலுத்திக் கற்புக்குப் பங்கஞ் செய்துகொள்ளுவதற்கு இடமுண்டாகின்றது. இதனைக் கருதியல்லவா அந்தணர் தங்கள் பெண்களுக்கு ருது காலத்திற்கு முன்னமேயே விவாஹத்தை நிறைவேற்றுகின்றார்கள். இப்படிச் செய்வதால், வயது வருங்காலத்தில் கணவனைப்பற்றிய வேறுபாடான வெண்ணமே ஒரு பெண்ணுக்கு ஏற்படாமல், முன்னமே தனக்கு மாலையிட்ட அந்த ஒரு சரீரத்திலேயே தன் மனதை நிலைநிறுத்தி அப்பெண் வாழ்கின்றாள். அடுப்பூதுந் தொழிலை மாத்திரமறிந்து, படிப்பில்லாத புல்லர்களுக் கல்லவோ மனக்குழப்பம் ஏற்படும். கற்புடை மாதர்களின் கதைகளைக் கற்றிருக்கிற எனக்கா மனவுறுதி குன்றும்? தாங்கள் தான் என்னுயிர்த் துணைவன்." எனப் புன்சிரிப்போடுரைத்தாள். இம்மொழிகளைக் கவனமாய்க் கேட்டிருந்த அபிராமன் "கண்மணீ, இத்தகைய நிச்சய புத்தியுனக்கிருக்குமாயின், என்னை, நாதா என்றழைப்பதில் தடையென்ன? நம்மிருவருக்கும் இன்னும் விவாகமாகவில்லையாதலின், வேறு யாரையேனும் கருதியிருக்கின்றாயோ யாதோவென நினைத்தேன். கல்யாணமாகிய பிறகு, எனக்கு உன்னைப்பற்றி இவ்வித வெண்ணமுண்டாகுமோ? ஒருக்காலுமில்லை. யான் வந்து நெடுநேரமா

யிற்று. என் பெற்றோரைக் கவனித்துப் பணிவிடைகள் செய்ய வேண்டும். போய்வருகிறேன். முகூர்த்த தினத்தைப்பற்றித் தீர்மானிப்பதற்கு முந்தி எனக்கு அறிவிப்பாயாக." எனச் சொல்லி, வெளியிற் புறப்பட்டான். சுந்தரியும், அபிராமன் சென்ற பிறகு, தனியேயிருக்க மனமில்லாதவளாய், அத்தோட்டத்தின் முன்புறமிருக்கிற தனது வீடுபோய்ச் சேர்ந்தாள்.

## அத்யாயம் ௬.

### பேராசை.

அபிராமனுக்குத் துன்பம் விளைவித்து அவன் உயர்த்தப் பட்டிருக்கிற மாலுமித் தலைவன் வேலையைத் தானடைய வேண்டுமென்ற பேராசையாற் பதை பதைத்த வீரன் செட்டி, ஒரு நாள், சமுத்திரக்கரை யோரமாய்த் தனியே உலாவிக் கொண்டிருந்தான். தனது கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தக்கவோருதவி யில்லாவிடில் முடியாதென இவன் யோசித்துக் கொண்டிருந்தபொழுது, 'எப்படியாவது அந்தக் குட்டியை அடித்துக் கொண்டு போகாமல் விடுவேனோ!' என மெதுவாகச் சொல்லிக்கொண்டே வேறொருவன் இவன் பக்கமாய்ச் சென்றான்.

காம விகாரத்தாலாவது, எண்ணம் நிறைவேறாத பொழுதாவது அதிகக் கவலை கொண்ட ஒருவன், பித்தம் பிடித்தவன் போலத் தானாகவே பேசிக்கொள்வது வழக்கமல்லவா? மேற்கூறியபடி வேறொருவன் கூறிய மொழிகளைக் கேட்ட வீரன், அவனைப் பின்றொடர்ந்தான். "காத்துக்கிடந்தவன் பெண்டாட்டியை, நேற்றைக்கு வந்தவன் கொண்டு போவதா! இருக்கட்டும், அவ்வபிராமன் பயலுக்குத் தக்க வகை செய்கின்றேன்." என அவ்வாலிபன் மறுபடியும் சொல்லியவைகளில், அபிராமன் என்ற பெயர் கலந்ததைக் கவனித்த வீரன், "என் சத்ருவுக்கு இவனும் ஒரு வைரிபோல் தோன்றுகின்றது. இவனை ஸ்நேஹித்து,

இருவருமாக அபிராமனைத் தொலைக்கவேண்டும். சரி, ஆனால், இவன் சொல்லிய வபிராமன், அந்தப் பேர்வழியாயிருந்தாலல்லவோ எனது எண்ணம் முடிவுபெறும்? அவன் யாரோ ஒருவனாயிருந்தால்—எப்படி யிருந்தாலென்ன? விசாரித்துப் பார்ப்போம்" எனத் தனக்குள் நிதானித்து முன்னே சென்றவனை யணுகி, "ஐயா, தாங்கள் இவ்வூர்தானோ? உங்களது பெயரைத் தயவுசெய்து சொல்வீர்களா?" என வினவினான். இதனைக் கேட்ட மற்றவன், "ஐயா பால்யம் முதல் இவ்வூரிலேயே வளர்ந்து வருகின்றேன். எல்லோரும் என்னைக் குமரன் என்றழைப்பார்கள்." என்றான்.

வீரன்:—'ஆ இப்பொழுதுதான் நினைவு வந்தது. தெற்குத்தெருவிலுள்ள நொண்டி வாத்தியார் பள்ளிக்கூடத்தில் நாமிருவரும் படிக்கவில்லையா?'

குமரன்:—'ஓ! ஆமாம். சிறுவயதிற்பழகிவிட்டால் எத்தனை வருஷங்களானாலும் மறக்கிறதேயில்லை! உங்கள் பெயர் வீரன் தானே? தாங்கள் யாது செய்கின்றீர்கள்?'

வீரன்:—'செய்கிறதென்ன? என் அத்தானைத்தான் தாங்கள் அறிவீர்களே! அவரிடந்தானிருக்கின்றேன்.'

குமரன்:—'அப்பப்பா! வலிக்கிறதோ? இம்மாதிரி ஒரு அத்தான் எனக்கிருந்தால், இந்த லோகமெல்லாம் ஜயித்து விடுவேன்! அடேயப்பா! இப்பெருந்துறையில் அவரை விடப்பணக்காரருண்டோ! என் நிலைமையை யோசித்தால், உன்னோடு பேசவும் எனக்குப் பதவியில்லை. ஏதோ, பால்யஸ்நேகமானதால் அடா, போடா என்றும் பேசத்துணிந்தேன்.'

வீரன்:—'வாஸ்தவந்தான்; என் அத்தான் பணக்காரரென்பதும், நான் அவருடைய ஸமீபபந்துவென்பதும் உண்மை. ஆனால், என் இஷ்டம் மாத்திரம் அவரிடம் நிறைவேறுவதில்லை. என் மனக்குறையை யாரிடம் சொல்வது?'

குமரன்:—'அடாடாடா! இதென்ன வெட்கக்கேடு! நீ அவருடன் குதிரை வண்டியிலேறிப் போவதையடிக்கடி பார்த்

'இருக்கின்றேன். அப்பொழுது இருந்ததைவிட அதிக இளைப்பாய்க் காணப்படுகின்றாய்! உனக்கு நேர்ந்திருப்பது யாது குறை?'

வீரன்:—'என் குறையை யாரிடம் சொல்லி யாற்றிக்கொள்வேனடா, குமரா? என் அத்தானுக்குப் பிறகு, என்ன, ஒரு பைஸாவேனுமுண்டோ! ஆனதுபற்றி, ஏதேனும் வாணிபஞ் செய்து, பணம் ஸம்பாதிக்கலாம் என்றிருந்தேன். பெரிய கையிற் பழகிய யான் ஒரு பழக்கடையா வைப்பேன்? பெரும் வாணிபத்திற்கேற்றது அயல்நாட்டு வியாபாரமல்லவா? ஆகையால் என் அத்தானுக்குச் சொந்தமான கப்பலை யோட்டுகிற மாலுமி வேலையிலேதேனுங் காலியானால், அவ்வேலை எனக்கே கிடைக்குமென்றெண்ணி வானத்தில் கோட்டை கட்டி, ஆவல் கொண்டிருந்தேன். அப்படி அவ்வேலை கிடைத்திருந்தால், சம்பளத்தினாலும், வேறு பலவழிகளினாலும் மிகுந்த பணக்காரனாய் விடலாமென்றிருந்தேன்!

குமரன்:—'அப்பா, வீரா, அழாதே, வருத்தப்படாதே. அந்த நம்பிக்கைக்கு யாது குறை நேர்ந்தது?'

வீரன்:—'குறையா! வயிற்றெரிச்சலல்லவா!'

குமரன்:—'மாலுமி வேலை யேதேனுங் காலியாயிற்றோ?'

வீரன்:—'காலிக்கென்ன குறை? வேலை மாத்திரம் எனக்குக் கிடைக்கவில்லை. என் உடம்பு இளைத்திருப்பதற்கும், பித்துப்பிடித்தவன் போல் யானலைவதற்கும் அவ்வயிற்றெரிச்சல் தான் மூலகாரணம். அஃதிருக்கட்டும் உனக்கும் யாதோ மனக்குறைபோல் தோன்றுகின்றதே.'

குமரன்:—'எனக்கா, குறையென்ன? ஒன்றுமில்லை.'

வீரன்:—'என்னடா, என்னிடங் கூட மறைக்கின்றாய்! என் மனத்திலுள்ளவைகளனைத்தையும் உன்னிடம் வெளியிட்டேனே. நீயுமிம்மாதிரி யிராமல் வஞ்சகமாகப் பேசுகின்றாயே!'

குமரன்:—'வஞ்சகமென்ன அப்பா? என்ன, நீயுமிப்படிப் பேசுகின்றாய்? உன்னிடம் மறைத்துப் பேசுவேனோ?'

வீரன்:—'அப்படி, மறைக்காமலிருப்பதாகத் தோன்றவில்லை. நான் தான் கேட்டுக்கொண்டேவந்தேனே. 'காத்துக்கிடந்தவன் பெண்டாட்டியை நேற்றைக்கு வந்தவன் கொண்டு போவதா?' என்றாயே. வெட்கமாயிருக்கின்றதோ? சும்மா சொல்லிவிடப்பா.'

குமரன்:—'நன்றாயிருக்கின்றது ஊர் ஸமாசாரத்தைப் பற்றி யோசித்துச்சொல்லிய விஷயத்தை எனதாக நினைத்து விட்டாயே!'

வீரன்:—"பால்ய ஸ்நேகமாம், வெகு அழகு! நீ, இவ்வளவு கபடமுள்ளவனென்றறிந்திருந்தால், உன்னிடம் என் அந்தரங்கத்தைச் சொல்லியிருப்பேனோ?"

என, வீரன் சொல்லிய மொழிகளைக்கேட்ட குமரன், தனியே கவலை கொண்டிருந்த தனக்குத் தற்செயலாய்க் கிடைத்த வீரனது நட்புக்குக்கேடு வந்துவிடுமோவென்றெண்ணி, அவனுடன் தானுஞ்சேர்ந்து தனதெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளலாமென்ற முழு நம்பிக்கையுடன், "வீரா, கோபித்துக்கொள்ளாதே; மானத்திற் பயந்து, உன்னிடம் மறைத்தேன். கபடம் என்ன இருக்கின்றது? சொல்லி விடுகின்றேன் கேள். என் வீட்டில், ஞானசுந்தரி யென்று ஓர் பெண்ணிருக்கிறாள். அவளுடைய அழகை, அப்பா! சொல்லிமுடியாது! சிறுவயது முதல் நெருங்கி ஸ்நேஹித்து வந்த என்னை மறந்து, ஒருபயல் தன்னை மணந்துகொள்ளும்படி அவள் மனதைக் கலைத்துவிட்டானடா! மனக்கவலைக்குக் காரணம் வேறு வேண்டுமோ?" என்றான்.

வீரன்:—"யாரடா, அவன்?"

குமரன்:—"எல்லாம் உங்கள் அபிராமன் தான்!"

வீரன்.—"அபிராமனென்றால் யார்?"

குமரன்:—'உங்கள வீட்டுக் கப்பலுக்குக் கரியள்ளிக் கொட்டுகிறவன!"

வீரன்:—"அவன்தானா, உன்னிடத்திலும் வாலை நீட்டிவிட்டான்! நெடுநாளாய் யான் எதிர்பார்த்திருக்க மானுமி வேலையைத் தட்டிக்கொண்டு என்னைப் பறக்கவிட்டவனும் அப்பயல் தான். அவனைக் கொலைத்து, மானுமி வேலையை ஒப்புக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகளும், யோசனைகளும் செய்ய ஒருவருமில்லையே என்றிருந்தேன். இனி நீயும் நானுஞ் சேர்ந்து, அவனுக்குத்தக்க வெடிவைக்க வேண்டும். என்ன சொல்லுகிறாய்?"

குமரன்:—"அடேயப்பா! அந்தப்பயலுக்கா அப்பெரும் பதவி! இருக்கட்டும், நாமிருவரும் சேர்ந்து பேசும்படி இன்று நேர்ந்ததே; இதே ஒரு சகுனமல்லவா? நீயும் உத்யோகத்தில் அமர்வாய்; நானும், சுகரிக்குக் கணவனாவேன். கார்யத்தை முடித்துவிடுவோம்; பயப்படாதே."

வீரன்:—"என்ன, முடித்து விடுவோமா! முடித்து விட்டோம் என்று சொல்"

என, பால்யத்திற் பழகி, ஒரே பாடசாலையிற் படித்த நண்பர்களான குமரனும், வீரனும் வெகு நேரம் ஸம்பாஷித்து ஒருவாறு முடிவுசெய்து கொண்டபிறகு, அவரவர் இருப்பிடஞ் சென்றார்கள்.

## அத்யாயம் ச.

### தேச நிலை

இக்கதைக்கு முக்யஸ்தானமாக நாமிதுகாறும் எழுதிய பெருந்துறைநகரம், வடஇந்தியாவில் 'கலிங்க நாடெனப் பெயர்கொண்ட விஸ்தாரமான தேசத்திலுள்ளது. பல ஜீவநதிகள் பாய்வதாலும், மாஸம் மும்மாரி பொழிவதாலும், நீர்வளமும், வேளாண்மைக்காரரின் காலத்திற்கேற்ற முயற்சியால் நிலவளமுங் கொண்டு நவதான்யங்களும் செழித்தோங்குகிற இக்கலிங்கநாட்டை யுலகுக்கோர் திலகமென்றே செப்பலாம்.

மிகக் கீர்த்தியும், பராக்ரமமுங்கொண்ட ராஜராஜ சோழன் என்றவரசன், படையெடுத்துச் சென்று இக்கலிங்கத்தை வென்றான். மேலும் ஆளும் திறமை கொண்ட இவ்வரசன் தானும் தன் ஸந்ததியாரும் இந்நாட்டையாளக் கூடியவண்ணம் தக்க வேற்பாடுகளையும் செய்து வைத்தான். ஆனால், இவ்வரசனுக்குப் பின்வந்த சோழர்கள், தங்களது ராஜதானியாகிய காஞ்சீபுரத்திலிருந்து ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள இக்கலிங்க நாட்டையாளுந்திறமையற்றுக் கைவிட்டார்கள்.

சோழர்கள் இத்தேசத்தை வென்றதற்கு அறிகுறியாக 'ஜயங்கொண்டான்' என்ற கவிஞர், 'கலிங்கத்துப்பரணி' யெனப் பெயர் பூண்ட ஓர் அரிய நூலை யியற்றியுள்ளார். இக்காலத்திலும் இப்புத்தகம் தமிழ்ப் பண்டிதர்களால் வியந்துரைக்கப்படுகின்றது. மேற்சொல்லிய ஜயசீலனான ராஜராஜ சோழன், சந்ததியில்லாதிறக்கவே, இவனது ராணியின் தம்பியும், சாளுக்ய வம்சத்திற்பிறந்தவனுமான வொருவன் குலோத்துங்க சோழனெனப்பட்டம் வஹித்துச் சோழநாட்டையாளத்தலைப்பட்டான். கலிங்க தேசம் சோழர்களுடைய வரசாட்சியிலிருந்து விலகியதற்கு ராஜராஜன் ஸந்தானமில்லாதிறந்ததுமோர் காரணமாகும்.

இப்பால், இந்நாடு அடக்கியாளுமரசனில்லாது போனதால், சோழர்களுக்குப் பயந்திருந்த கொள்ளைக்காரர்கள் தலையெடுத்து விட்டார்கள். ஒருவன் பயிர் செய்த தான்யங்களை வேறொருவன் அறுப்பதும், யாரோ ஒருவன் வரிகளையிறுப்பதும், பகலிற் கொள்ளையும், இரவிற் கொலையுமாக இந்த நாடு கடுமாறலாயிற்று.

தலைவனில்லாக் குடும்பம் படும்பாட்டை யார் தானறிந்திலர்? தலைமை உபாத்யாயரில்லாப்பாடசாலையும், ஸேனைத் தலைவனில்லாப்படையும், மூப்பனில்லாச்சேரியும் ஒழுங்கற்றுக் குலைந்துவிடுமல்லவா? நமக்கிருக்கும் குறைகளை முறையிட்டுக்கொண்டால், மநோவாக்கு காயங்களால் அலைகளை நிவர்த்திக்கவென்று கங்கணங் கட்டியிருப்பவன் காவலனல்லவா? தசாவதாரமெடுத்துத் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்பவரும், கமலமாது, புவிமாது இவ்விருவருக்குங் கணவரும் விஷ்ணுவாயிருக்கின்றார்.

துஷ்டர்களைத் துவேஷித்துத் தண்டனைக்குள்ளாக்கி, ஸாதுக்களைப் போஷிப்பவனும், அபரிமிதமான செல்வத்திற்கும், விஸ்தாரமான பூமிக்கும் அதிபனுமிருப்பவனும் அரசனாகின்றான். இவ்வொற்றுமை பற்றியன்றோ புவியசரர், புருஷோத்தமனுக்கீடாகச் சொல்லப்படுகின்றார்கள் !

எல்லோரும் பூஜிக்கத்தகுந்த புரவலனில்லாது சீர்குலைந்த கலிங்க நாட்டில், குணகன் என்ற கள்வர் தலைவனொருவன் தனது பரிவாரங்களைச் சேர்த்து, ஜனங்களையடக்கித்தான் அரசனெனச் சிங்காஸனமேறினான். தர்மகுண சீலரான சோழர்களாண்ட பொழுது பாதைகள் போடுவதிலும், பாடசாலை வைத்யசாலைகளேற்படுத்துவதிலும், தேவாலயங்களைக் கட்டுவதிலும், குளங்களை வெட்டுவதிலும் தங்களது பொக்கிஷத்திலிருந்த பெருந்தொகையை வகுத்துக் கொடுத்தார்கள். இப்பொழுது மன்னனாயிருக்குங் குணகனோவென்றால் பொக்கிஷத்தை வளர்க்கத் துவக்கினான். குணகம என்ற வடமொழிப்பதத்திற்குப் பெருக்கல் என்பது பொருள். இவனுக்குப் பெயர் குணகனாதலின், ஜனங்களினிடமிருந்து வாங்கப்படுகிற பலவிதமான வரிகளால் தனது கஜானாவைப் பெருக்கினானேயல்லாது ராஜ்ய கார்யத்தில் ஒரு காசேனுங் கொடுத்தானல்லன். உத்யோகஸ்தரெல்லோருங் கள்வரென்றால், கலகத்திற்குக் காரணமும் வேண்டுமோ? இவ்வாறு அரசு செலுத்துபவன், செங்கோலரசனா? 'கொடுங்கோல் மன்னர் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங்காடு நன்றே!' என்ற முன்னோர் மொழிப்படியே, கலிங்க நாட்டுக்குடிகள் நாட்டை வெறுத்துக் காட்டையடைந்தார்கள். பழங்களையுங் கிழங்குகளையுந் தின்றும், புலி முதலிய விலங்குகளுக்கஞ்சியும் அக்காட்டிற் சில காலம் ஜீவித்த இக்குடிகள், ஓர் கூட்டம் கூடினார்கள். இப்பெரிய ஸபையின் நடுவில், எல்லோரும் பார்க்கக்கூடியவாறு உயர்ந்த வொரு மரத்தில் ஒருவன் ஏறிநின்று ப்ரஸங்கிக்கத் தொடங்கினான்:—

'கலிங்க நாட்டு மஹா ஜனங்களே, பெரியோர்களே, ஸங்கடத்திற் சிக்கிப் பங்கப்பட்டிருக்கிற இவ்வேளையில், மிகச்சிறியோனாகிய யான் சொல்வதைக் கவனமாய்க் கேட்பீர்களாக. மிகப்

புராதனகாலந்தொட்டு நமது நாடு, மநுநீதி தவருத மன்னர்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டது. பிறகு தென்தேசத்துச் சோழர்கள் தங்களுடைய வீரத்தால் நமது நாட்டைவென்று, சில காலம் ஆண்டார்கள். சோழர்கள் கைவிட்டுவிட்டதால், அராஜரீக மேற்பட்டுப் படாதபாடு பட்டோம். அந்தத்திற் குணகனேற்பட்டான். இவனுல் நாமடைந்த தொந்தரைகளெண்ணிறந்தன. சிறந்தோர் சேர்க்கையற்றவனும், தினையளவும் நன்னடையில்லாதவனும் அரசனுனுல், அந்நாட்டுக் குடிகளுக்குச் சிந்தையற்ற வாழ்வுண்டோ? நாமெல்லோருங் காட்டில் வசிப்பதை நோக்குங்கால், நாமடைந்த சிந்தைக்கு ஸாக்ஷியும் வேண்டுமோ? ஜனங்களே! எவ்வளவு காலந்தான் காட்டுமனிதர்களாய் நாமிருக்கக் கூடும்? நமக்காண்மையில்லையோ! கொள்ளையிடுங் கள்வர் நாட்டிலும், நாம் காட்டிலுமோ! நாமெல்லோரும் ஒன்றுகூடி, குணகனை ஏன் வெருட்டக்கூடாது? நாமெல்லோருங் கூடிவருவதைக் கண்டு, கள்வர்களாலான அனைத்து படைகள் துள்ளியோடிவிடும். இவ்வாறு, குணகனைக் கண்டித்த பிறகு, காவலன் யாரெனக் கவலையுறுகின்றீர்களோ? ஸபையோர்களே, நிதானமாய்க் கவனியுங்கள்! நாமெல்லோருங் கூட்டமாகக்கூடி, சிறந்த வொருவனைத் தலைவனுகத் தெரிந்தெடுக்கவேண்டும். அத்தலைவன், நம்மிடம் பக்ஷம் பாராட்டாதிருக்கத் தலைப்படின், வேறொருவனைத் தலைவனுக்குமதிகாரம் நம்மிடமல்லவா நிலைபெற்றிருக்கும்! அரசனேயில்லாது நடைபெறும் இத்தகைய ராஜ்யத்திற்குக் குடியரசு நாடெனப் பெயர்" எனப் பேசிமுடித்து, அந்த ஜன ஸமூகத்தைத் தன் வசமாக்கிக் கொண்டான்.

மேற்கூறிய வண்ணம் ப்ரஸங்க மழை பொழிந்தவன் யார்? இவனது நாமதேயம், சரவணன். இவ்வாலிபனுடைய முன்னேர், மிகக் கற்றவர். கற்றவர் மரபிற்பிறந்த வன்மையால் எழுந்து நின்று, ஓர் பெருங் கூட்டத்தின் முன்னிலையில் ஸபா கம்பமின்றிப் பேசும் ஸாமர்த்யம், இவனுக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. இவன் மொழிகளைச் செவியுற்ற அக்கூட்டத்திலிருந்த யாவரும், அவ்வாறே உடன்பட்டும், கொடும் பாவியான குணகனை வெருட்டுவதிற் சிலர் இறக்கவுந் துணிவதாகச் சொல்லியும்,

கத்தி, ஈட்டி முதலிய பலவித ஆயுதங்களைக் கையிலேந்தியும், கலிங்கத்தின் தலைநகராகிய பெருந்துறைக்குச் சென்றார்கள். அங்ஙனம் சென்ற படை, எதிர்த்துப் போர்புரிந்த குணகனது ஸேனைகளை முறியடித்து, குணகனைக் கைதியாக்கிக் காவலில் வைத்தது. இப்பொழுது, அந்நாட்டுக் குடிகளுக்குண்டான கொண்டாட்டத்தை யென்னென்றுரைப்பாம்! எல்லோரும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார்கள். இத்தகைய ஸந்தோஷத்திற்குக் காரணமாயிருந்த சரவணன், தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். ராஜ்யமும் நன்கு ஆளப்பட்டது.

இப்பால், சிறையிலடைபட்டிருந்த குணகன், தன்னைச் சார்ந்த சிலரைக் கொண்டு ஜனங்களின் மன நிலையைக் கலைத்துத் தன்னை மறுபடியும் அரசனாக்கிக்கொள்ளவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். இதனையறிந்த சரவணன், இவனை அவ்விடம் வைத்திருத்தல் ஆபத்துக்கிடமாகுமெனத் தீர்மானித்து, கடலில் வெகு தூரத்துக்கப்பாலுள்ள கருங்கோட்டைக் கனுப்பித் தக்க காவலுடன் அவ்விடம் இருத்தினான். குணகனால் பணக்காரர்களானது பற்றி அவனிடம் மிகுந்த பக்ஷம் வைத்திருக்கின்ற நண்பர்களிற் சிலர் அவனை யரசனாக்கிக்கொள்ள முயல்வதையறிந்த குடியரசுத் தலைவனாகிய சரவணன், "கருங்கோட்டையிலுள்ள குணகனைப் பற்றிப் பேசியவரும், அவனிடம் சென்று திரும்பியவரும் அச் சிறைச்சாலைக்கே அனுப்பப்படுவர்!" என நாடெங்கும் பறையறைவித்தான்.

## அத்யாயம் ரு.

### குடிவெறி.

இரவு மணி ஒன்பதாயிற்று. அஷ்டமீ திதியாகையால் அரைத் திங்கள் மேகங்களுக்கிடையே மங்கலாய் ஒளிவீசியது. அபிராமனும், அவனது பெற்றோரும், குணசீலன் என்பவனது வீட்டின் பக்கமாய்க் குடியிருந்தார்கள் என முன்னமே சொல்லி

யிருக்கின்றோம். இக்குணசீலன், அபிராமன் புதிதாய் வாங்கி யிருக்கிற வீட்டின் மாடியில் அவனோடு சில நேரம் ஸம்பாஷித்த பிறகு, விடை பெற்றுக் கீழே யிறங்கினான். அப்பொழுது அம்மாடியின் படிகளுக்குக் கீழ் மெதுவாய்ப் பேசிய யாரோ ஓர் சத்தங்கேட்டதால் அதனைக் கவனித்துக் காதுகொடுத்துக்கொண்டு அவ்விடத்திலேயே நின்றான். மெள்ளப் பேசிய அச்சத்தம் பின்வருமாறு குறிக்கப்படுகின்றது:—

"வந்துவிட்டோம்; யான் முதலிற் போய் அவனோடு பேசுகின்றேன்; பிறகு, நீ வரக்கடவாய்."—

"உனக்கு அவனுடன் பழக்கமுண்டோ? அவனைப் பார்க்கும்பொழுதெல்லாம் எனக்கு வயிற்றெரிச்சலாதலால் அவனுடன் யான் பேசுவதேயில்லை."—

"பெரும் பழக்கமல்லவா! நாங்களிருவரும் சுந்தரியோடு ஸம்பாஷிக்கக் கூடுவதுண்டு. இந்தப் பயலுக்கு வந்த பதவியும், மாடிவீடும், என்ன! தடபுடலாயிருக்கின்றனவே!"

"யானடையவேண்டிய விப்பதவியை இப்பயல் அடைந்துவிட்டான்! வயிற்றைப் பற்றியெரிகின்றது! சீக்கிரம் போ."—

"இரவில் இவ்வேளையில் ஸமயம் பார்த்துத் தீட்டிவிட வேண்டும்! தெரியுமா."—

"ஸரி, எல்லாம் பார்த்துக்கொள்வோம். மனோ தைரியத்தை மாத்திரம் விட்டுவிடாதே."—

"போகின்றேன்; பத்து நிமிஷங்களுக்குப் பிறகு, நீ வா."

மேற்கூறியபடி சம்பாஷித்த பிறகு, ஒருவன் மாடிக்குப் போகிற வாயிற்படியில் நுழைந்தான். அவ்விடம் நின்ற குணசீலன், இவர்கள் பேசியதைப்பற்றிக் கவலைகொண்டிருந்ததால்,

ஒருவன் நாழைவுமைக் கவனியாமல் இடித்துக்கொள்ளவும் இருவரும் உருட்டி அடித்துக் கொண்டு கீழே விழுந்தார்கள். படிகளின் கீழ் நின்ற மற்றவன், தனது நண்பனெனன நினைத்துக் குணசீலனைத் தூக்கினுன். இக்குணசீலன் பெருஞ் சத்தஞ்செய்து கலகம் விளைவிப்பவன்போற் காணப்பட்டதாலும், பக்கத்திலெழுந்து நிற்பவனே தன் நண்பனென்றும் இவன் யாரோ ஒரு மூன்ருமவனென்றுந் தெரிந்துவிட்டதாலும், இவ்வாறு தூக்கிய மனிதன், குணசீலனது கைகளைப் பிடித்திழுத்துக்கொண்டு நிலவு வீசுமிடத்திற்குச் சென்று, முகத்தை யுறநோக்கி, "அப்படியா, குணசீலரா! வாருங்களையா, சிநேகிதரோடு பேசிவிட்டு வருகிற ஜோர் கண்களை மறைத்து விட்டதோ! என்ன, அவ்வளவு அவஸரம்?" எனப் பரிஹஸித்தான்.

இக்குணசீலன், பெருந்துறையிலுள்ள சில வீடுகளுக்குச் சொந்தக்காரன். அவ்வீடுகளாற் கிடைக்கும் குடிக்கூலியாற் காலக்ஷேபஞ் செய்பவன். பெயரால் குணசீலனே யன்றிக் குடியில் புகுந்துவிட்டால், இவனுக்குத் தினந்தோறும் ஒரு பீப்பாய் சாராயமும் போதாது. குடிகாரர்களுக்கும், குற்றமுள்ளவர்களுக்கும் மனோதைர்யமுண்டோ? அபிராமனிடம் விரோதங்கொண்டு ஸம்பாஷித்த இவ்விருவரையும் எதிர்த்துப் போர்செய்து வெருட்ட இக் குணசீலனுக்கு எண்ணமிருந்தும், மேலே கூறிய படி தைர்யக் குறைவினுலும், வெகு நேரமாய்க் குடிக்காததால் ப்ரமை கொண்டிருந்ததாலும், இக்குணசீலன் சும்மா நின்ருன். பயத்தால் நடுநடுங்கி, ஆந்தைபோல் விழித்துக் கொண்டிருந்த இவனை, அவ்விருவரும் அருகிலிருந்த சாராயக் கடைக்கு இட்டுக் கொண்டு போய்க் கழுத்துவரையிற் குடிக்கச் செய்தார்கள்.

குடிப்பதற்குக் காசில்லாமல் அலைபவர், யாரேனுமொருவரால் உபகரிக்கப்பட்டால், உடனே குடித்து அவ்வெறியால் கொலை செய்யவுந் துணிவார்களல்லவா? மாற்ருனைக் கொல்ல எண்ணமுள்ள வொருவன, கொலைபாதகனை மற்றொருவனைக் குடிக்கச் செய்து, கொல்லுமாறு ஏவுகிறவழக்கம், மிகுந்த நாகரிகமுற்ற இக் காலத்தும் நடைபெறுகின்றது!

கடையிற் புகுந்து பூராவாகக்குடித்த குணசீலன், அவ்விருவரையும் நோக்க, 'ரொம்ப சந்தோசம், உங்களை ஆரு இன்னு தெரிஞ்சுது.' என்று சொல்லியவுடன், 'பேசாதே, தெரியுமா; உமக்குக் குடிக்கக் குறைவில்லாமற் பார்த்துக் கொள்கிறோம். ஸங்கதி வெளிவந்ததோ உமது தலை இரவல், தெரியுமா! பயமிருக்கட்டும்.' என அவ்விருவரில் ஒருவன் உரைத்தான். இதனைச் செவியுற்ற குணசீலன், 'சாமியடா, எனக்கு என்னகேடு, எந்த நாயி எப்படிப்போனாலெனக்கென்ன? வூட்டிலே வரவாடவெக் காசெல்லாம் எம்பெஞ்சாதி வாங்கிக்கிட்டு, நா ஆலாப்பறக்கறேங்க! பளவிய தோசம் ஏதாவது கொடுப்பானின்னு அபிராமனண்டே போனுக்கே, அப்பாடா! அவன் பேச்சிலே இனிச் சவனல்லா? ஒரு காசு கொடுக்குறானில்லேங்க! மவராசங்க, உங்களைமறப்பேனா?' என்றான். குணசீலன் சொல்லியவசனங்களைக் கவனித்தவவ்விருவரும், 'இடம்பார்த்தல்லவா நேசிக்க வேண்டும்! கருமியிடம் சென்றால் ஒரு பைஸாவேனும் கிடைக்குமோ? இனி, அபிராமனிடம் போக வேண்டிய காரியம் உமக்கேற்படாது. போய்வாரும்; நாங்கள் சொல்லியது நினைவிருக்கட்டும்.' எனச் சொல்லிக் குணசீலனை யனுப்பிவிட்டுச் சென்றார்கள். குணசீலன், ஆவ், ஆவ் என்றேப்பம் விட்டுக்கொண்டும், ஆடிக்கொண்டும், தானாகவே பிதற்றிக் கொண்டும், வீடுபோய்ச் சேர்ந்தான்.

---

## அத்தியாயம்-௯.

### மோசக்கருத்து.

ஒரு வருஷ காலமாய்ப் பெருந்துறையிலில்லாமல் அயல் நாடுகளுக்குச் சென்றிருந்த வபிராமன், அந்நாட்டில் குடியரசு நியமனத்தைப்பற்றிக் கொஞ்சமேனுமறிந்திலன். அரசனாகிய குணகனைச் சிறையிட்டதும், அவனோடு ஸம்பாஷித்தவர் யாராயிருப்பினும் கடுந்தண்டனைக்குள்ளாக்கப்படுவர் என்ற எச்சரிக்கையும்,

இவனுக்குத் தெரியாது. அயல் நாடுகளிலிருந்து திரும்பும் பொழுது, கப்பலில் காலியாயிருந்த ஜாடிகள் பானம் செய்யக் கூடிய சுத்தமான ஜலத்தால் நிரப்பப்படுவதற்கென்றுதான் ஓட்டிவந்த சிலீமுகத்தைக் கருங்கோட்டைத் தீவின் துறைமுகத்தில் நிறுத்தினான்.

இக்கருங்கோட்டைத் தீவானது, நமது பரதநாட்டின் மேற்கெல்லையாயிருக்கிற அராபிக்கடலில் இருக்கின்றது. இஃது, இரண்டுமைல் நீளமும், அரைமைல் அகலமும், மத்தியில் உந்நதமானவோர் குன்றும், சிற்சில ஓடைகளுங் கொண்டிருக்கின்றது. இத்தீவு கடலின் மத்தியிலிருப்பதால் பெருங் குற்றவாளிகளை யிங்கனுப்புவது அக்காலத்து வழக்கமாயிருந்தது. இங்குள்ள மலையின்மேல் ஒரு சிறைச்சாலையும், அச்சிறையிலடைபட்ட குற்றவாளிகள் அங்கிருக்குங் காவலாளிகளுக்குத் தொந்தரை செய்தால், அவர்களைத் தள்ளிவிடவென்று அமைக்கப்பட்ட ஆழமானவோர் சுரங்கமும் கட்டப்பட்டிருந்தது. கப்பலில் யாத்திரை செய்பவர் இத்தீவைக் கண்டாலே அஞ்சி நடுங்குவர். தண்ணீர் நிரப்பிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தால் நமதபிராமன், இவ்விடம் ஓரிரவு தங்கினான்.

கருங்கோட்டைச் சிறையிலடைபட்டிருந்த குணகன், தனக்குக் காவலாயிருந்த பலருள் ஒருவனுக்கு, தான் ஒருவருமறியாது கொணர்ந்த சில ஆபரணங்களைக் கொடுத்துத் தன்வசமாக்கிக் கொண்டான். சிலீமுகம் நங்கூரம் பாய்ச்சப்படுவதை, மலையின் மேலுள்ள சிறையிலிருந்த குணகன் கவனித்திருந்ததால், பெருந்துறையிலுள்ள தன் நண்பர்களிலொருவனுக்குத் தன்னை விடுவிக்கச் செய்ய வேண்டிய வேற்பாடுகளடங்கியவோர் கடிதமெழுதி, அதனைத்தனக்கு உபகரிக்கக் கூடிய காவற்காரனிடங்கொடுத்து, கப்பல் மாலுமியினிடம் சேர்ப்பிக்கச் செய்தான். கப்பல் தலைவனாயிருந்த வபிராமனும் அதனைப்பெற்றுக் கொண்டு தன்னூராகிய பெருந்துறையையடைந்தான். ஊரிலுள்ள குழப்பமும், குணகன் கருங்கோட்டைக் கனுப்பப்பட்ட செய்தியும், தலைவனாகிய சரவணனுடைய எச்சரிக்கையும் இவனுக்குத் தெரிந்துவிட்ட

தால், அக்கடிதத்தை விலாஸதாரருக்குக் கொடாமல், தன்னுடைய சட்டைப்பையிலேயே வைத்திருந்தான்.

இப்படியிருக்க, ஓர் நாளிரவு மணிபத்தடித்தது. யாரோ ஒருவன் கதவைத் தட்டி, 'அபிராமா, என்றழைத்தான். அவ்விடமிருந்தவோர் வேலைக்காரன் கதவைத் திறந்து, ஒரு சிறு மணியையெடுத்து அடித்தான். உடனே, இரண்டு வேலைக்காரர்களவ்விடம் புகுந்து, புதிதாக வந்தவனையழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்கள். பின்தொடர்ந்த மனிதன், அங்ஙனம் அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய நிலைக்கண்ணாடியை ஒரு வாயிற்படியாக வெண்ணி, நுழைய யத்தனித்து முட்டிக்கொண்டான். இதனைக்கண்ட அவ்வேலையாட்கள், இவனது கையைப் பிடித்து இட்டுக்கொண்டுபோய் ஒரு அறையினுள் விட்டார்கள். அவ்வறையிலுள்ள அழகிய ஒரு மேஜையினெதிரே போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து, தான் படித்துக் கொண்டிருந்த தி விளையாடற் புராணக்கையேடு, வருபவனையழைக்க வென்று கவனமாயிருந்ததால், நுழைந்தவனை நோக்கியவுடன், நமதபிராமன், "ஏது, அபூர்வமா யிருக்கின்றதே! வா, குமாரா, வாடாப்பா" என்ச்சொல்லி, எழுந்து நின்று, அவனை ஒரு நாற்காலியிலுட்காரச் செய்தவுடன், "ஞானசுந்தரியோடு சம்பாஷித்துக் கொண்டிருந்த அன்றுமுதல் இன்றுவரையில் உன்னைக் காணக் கிடைக்கவில்லையே! ஆதலால், உன் வரவு மிகவும் களிக்கத்தக்கது. யாது விசேஷம்?" என வினவினான். உடனே குமரன், "நான் மாத்திரமல்ல அபிராமா, வீரன் செட்டியாரும் வந்திருக்கின்றார்" எனச் சொல்லியதைக் கேட்ட வபிராமன், "அவர்களைத் தெரியவில்லையே" எனவும், "உதயமார்த்தாண்டன் செட்டியாரின் மாமன் மகனாயிற்றே அவர்!" எனக் குமரன் உரைத்தான். அச்செட்டியாரிடம் தான் வைத்திருக்கிற அளவிறந்த அன்பால், அபிராமன், பரபரப்புட னெழுந்து, அவரது பந்துவாகிய வீரனை யெதிர்சென்றழைத்து, மற்றொரு நாற்காலியில் உட்காரச் செய்தான். இம்மூவரும் இரவு மணி பதினொன்று வரையிற் பேசிய பிறகு அபிராமன், "தயவு செய்து மன்னியுங்கள்; தினந்தோறும் யான் தூங்கத் துவக்கும் நேரம் வந்து

விட்டது. நீங்களும் இந்நேரத்தில் எங்குஞ் செல்லவேண்டாம்" எனக் கூறித், தனித்தனிக் கட்டிலில் மெத்தை விரித்துத்தலையணை கள் போட்டுவித்து, அவ்விருவரையும் படுக்கச் செய்த பிறகு, தான் வேறோர் அறையிற் புகுந்து தாளிட்டுச் சயனித்துக் கொண் டான்.

குமர வீரர்களுக்குத் தூக்கமும் வருமோ! குருவி சுடுவது போல், அபிராமனைச் சுட்டுவிடலாமென வந்த இவர்கள், அங் கிருந்த வேலையாட்களின் கூட்டத்தையும், அவ்வேலையாட்கள் எப்பொழுதும் யஜமானனைச் சூழ்ந்து நிற்பதையுங் கண்டு சும்மா இருக்கும்படி நேர்ந்தது. இரவெல்லாந் தூங்காமலும், அபிரா மனை ஆபத்துக்குள்ளாக்குவதிற் கவலைகொண்டும், இவ்விருவரும் அவ்விரவைப் போக்கினார்கள்.

மகாபாதகர்களான இவர்களிடமிருந்து நமது கதாநாயகனை விடுவிக்கும் பொருட்டு, அப்பாவிகளைத் தன் கைகளால் நெட்டித் தள்ளுகிற கருணையுள்ள வொருவனைப் போலத் தனது சிவந்த கரங்களைக் காட்டி, உலகுக்கோர் விளக்காக விளங்கும் பானுமூர் த்தி கிழக்கில் உதித்தார்.

அதிகாலையிலெழுந்த வபிராமனும் வழக்கம்போலத் தன் பெற்றோரைப் போற்றியபிறகு, நண்பர்களைப்போல் வேஷம் பூண்ட குமர வீரர்களை யெழுப்பி, பல் தேய்த்து முகங்கழுவச் செய்து, காப்பி முதலியன கொடுத்து, அவர்களின் வயிற்றை நிரப்பியனுப்பினான்.

## அத்யாயம் எ.

### சுபாசுபம்.

கல்யாணஞ் செய்துகொள்ளும் விஷயத்தில் குமரனை வெறு த்து, அபிராமனை விரும்பிய ஞானசுந்தரி, மிகுந்த பணக்காரரான வோர் குடும்பத்திற் பிறந்தவள். வயது சென்ற தந்தையும், ஓர்

ஸோதரனுந்தானிவளுக்குண்டு. சேர்க்கைப் பயனாலும், கற்ற கல்வியினாலும் இவள், நற்குணங்கள் நிறைந்த உத்தமியானாள். 'கற்றாரைக்கற்றாரே காமுறுவர்' என்ற முதுமொழியின்படி, கல்விக் களஞ்சியமான அபிராமனை இவள், கணவனாக வரித்திருக்கின்றாளல்லவா? குமரனோடு பேசிக்கொண்டிருந்தபொழுது, இவளைச் சந்தித்தவபிராமன், சிறிது சங்கையுற்றதை நமது நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அப்பொழுது, அவ்வபிராமன், 'முகூர்த்ததினத்தைப் பற்றித் தெரிவிப்பாயாக' எனச் சொல்லியதும் எல்லோருமறிந்ததே. அவ்வாறே, தனது தந்தையுடனாலோசனை செய்து, சோதிடர்களால் நிர்ணயிக்கப்பட்ட முகூர்த்ததினத்தைக் குறித்து, ஞானசுந்தரி, அபிராமனுக்கு ஓர் கடிதம் வரைந்தாள். நிலவு நன்றாய் வீசிய அன்றிரவு, தனது வீட்டின் மாடியில் போடப்பட்டிருந்த நாற்காலியில் சாய்ந்திருந்த ஞானசுந்தரி, தான் அபிராமனுடன் வாழ்ந்து இன்புறுவதாக நினைந்து நினைந்து சிந்திக்கலானாள். அவ்விடம் வீசிய நிலவு, இவளைக் கொஞ்சமேனும் களிப்பிக்கவில்லை. தனித்திருக்கும் பெண்களுக்கு இச்சந்திரன் ஓர் பகைவனாவான். பகைவனைப் பழித்தல் ஸகஜமல்லவா? ஆனதுபற்றி, தன் தலைக்குமேல் தீத்தணுக்குகளைக்கக்குபவன் போற் கிரணங்களைக் கொட்டிய முழுமதியை, மனதில் வந்தவாறு சிந்திக்கலானாள்:—

'ஹா! சந்திரா, பெண்களுக்குப் பேயுமிரங்குமென்கின்றார்களே! அஃதிருக்க, பெண்ணாகிய என்னை இரக்கமின்றித்துன்புறுத்துகின்றாயாதலின், தங்குவதற்கு ஓர் மரமுமில்லாத அந்தப் பேயாய்த் தினந்தோறும் வானத்தில் அலைகின்றாய்! கடலிற் பிறந்தவுனக்கு அக்கடலிலேயே உண்டான லக்ஷ்மி ஸஹோதரியல்லவா? நீ புறப்பட்டவுடன் அவளுடைய வீடாகிய தாமரையை மூடிவிடுவது உனது முதற்காரியமாயிருக்கின்றது! மேலும், நீ கிளம்புவதைக்கண்ட உனது தாயாகிய ஸாகரமும் புரண்டு புரண்டு அலறிப் புலம்புகின்றாள். பெண்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கத் துணிந்த நீ, உடன்பிறந்த உத்தமியையும், ஈன்றெடுத்த தாயையும் க்லேசப்படுத்தும்பொழுது, யாதொரு உறவுமற்ற என்னைச் சும்மாவிடுவாயா? தக்ஷனது யாகத்தில் சிவபிரான் உன்னைத்தேய்

த்தபொழுது அவரது காலிற்பட்ட நீ, தலையிலேறித் தற்காலமு மிறங்காத விஷமாயிருக்கின்றாய்! இதனையறிந்தல்லவா உமாபதி, உன்னை உடம்பிற்படாதவாறு ரோமத்தில் வைத்திருக்கின்றார்! அபலையாகிய என்னைவருத்துகின்ற மதியினையாகிய உனக்கு மதியெனப்பெயரிட்டவர் யார்?' எனச்சிந்தித்து அவ்விரவை ஓர் யுகமாகப் போக்கினாள். நிற்க;

ஞானசுந்தரியைக் கடிமணம் செய்து களிக்கப்போகிற காலத்தைக் கருதிக் கருதிக் காமனுடைய பாணஜாலங்களாலடிபட்டிருக்கிற நமதபிராமன், அவள் எழுதிய கடிதங்கிடைத்தவுடன் மிக்க ஆவலோடு அதனைப் படிக்கலுற்றான்:—

சிவமயம்

பெருந்துறை

ருத்ரோத்காரி-சித்திரை மீ, 4 வ

எனதாருயிர்க் கினிய வமுதமே,

சித்திரை மாஸம் இருபத்து நான்காந்தேதி சுபகரமான முகூர்த்தமிருக்கிறதென, பெரியோர், நிச்சயித்திருக்கின்றார்கள். அச்சுபதினத்தில் தாங்கள், சுபமங்களத்தை நடத்துவீர்களென்பது அடியாளது முழு நம்பிக்கை. நாளையதினம் காலையில் எனது ஸஹோதரர், தங்களுடைய தரிசனத்தையும், உறுதிமொழியையுங்கருதி, அவ்விடம் வருகின்றார்.

இங்ஙனம்,

தங்களுக்குச் சொந்தமாகும், அடியாள்

ஞானசுந்தரி.

இவ்வாறு குறிப்பிட்டிருந்த விஷயத்தைப் படித்து, மறுநாள் வருவதாகக் கூறப்பட்டுள்ள மனிதனுடன் பேசவேண்டிய ஸங்கதிகளைப்பற்றி யாலோசித்துக்கொண்டே அபிராமன், அவ்விரவை, ஆயிரம் ஆண்டுகளாய்ப் போக்கினான்.

மறுநாட்காலையில் சுந்தரியினுடன்பிறந்தான் அவ்விடம் வந்து சேர்ந்தான். அபிராமனும், மிகுந்த மரியாதையுடன்

அவனை யழைத்துத் தனது வயது சென்ற பெற்றோரிருக்கும் அறைக்கு இட்டுக்கொண்டு சென்றான். அவ்வறையிலுள்ள மெத்தை வைத்துத்தைத்த இரண்டு நாற்காலிகளில், அபிராமனது தாயுந் தந்தையுமுட்கார்ந்திருந்தார்கள். உள்ளே சென்றவபிராமன், முதலில் தந்தையையும், பிறகு தாயையும் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, அவ்விடம் விரிக்கப்பட்டிருந்த ரத்ந கம்பளத்திலுட்கார்ந்து, சுந்தரியின் ஸஹோதரனைப்பக்கத்திலுட்காரச் செய்தான். இந்நால்வருங் கூடிப்பேசி, சித்திரைமாஸம் 24 உ முகூர்த்தத்தை நிச்சயித்துக் கொண்டார்கள். அபிராமனுடைய பெற்றோர் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தனர். விவாஹம் நிர்ணயிக்கப்பெற்ற தம்பதிக்குமாத்திரம் ஒவ்வொருநாளும் யுகமாய்த் தோன்றிற்றேயன்றி, கதை சொல்லும் நமக்குத் தேதிகள் துரிதமாய்ச் சென்றன.

சித்திரை இருபத்து மூன்றாந்தேதி வந்துவிட்டது. மேள வாத்யங்களுடனும், பழம், புஷ்பம் முதலிய மங்கள வஸ்துக்களுடனும், அபிராமனது வீட்டிலிருந்து ஒரு கூட்டம் புறப்பட்டு, ஞானசுந்தரியின் வீட்டிற்குச்சென்றது. இவ்வாறு அங்கு சென்ற எல்லோரும், சந்தனம், தாம்பூலம் முதலியனபெற்று, மணப்பெண்ணாகிய சுந்தரியை அவளது பந்து வர்க்கத்தோடும், வாத்யகோஷங்களோடும் அபிராமனது மனைக்கு அழைத்தார்கள். மறுநாள் முகூர்த்ததினமாதலின், விடியற்காலத்திலேயே அவ்வீட்டில் மங்கள கோஷங்கள் நடந்தன. வாஸனை வீசுகின்ற செந்தாமரை மலர்களை மலரச்செய்து கொண்டு வஸந்த காலத்துப் பாஸ்கரன் உதயமானான்.

அக்கல்யாணத்திற் கூடிய யாவரும் நூதன ஆடைகளாலும், ரத்நாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கினார்கள். பிறவினிலேயே அதிலாவண்யமுள்ள ஞானசுந்தரி, தான் அணிந்திருக்கிற நகைகளுக்கழகு செய்து கொண்டு மாதர்களின் மத்தியில் நின்றாள். இவளண்டை நின்றவபிராமன், அபிராமனாகவே விளங்கினான். உதயமார்த்தாண்டன் செட்டியார் முதலிய அந்நகரத்துப்பல தனவான்கள் அவ்விடம் கூடியிருந்தார்கள். இவர்கள் கொணர்ந்த சீர்கள், பற்பல தட்டுக்களிற் பரப்பப்

பட்டிருந்தன. வழக்கம்போலவே புரோஹிதர்கள் ஹோமஞ் செய்தார்கள். முகூர்த்த நேரம் நெருங்கியதால், அபிராமன், தாலியைக் கையிலேந்தி, எல்லோரையும் வந்தனஞ் செய்தான். அப்பொழுது, அங்கு கூட்டமாய்க் கூடியிருந்தவர்களில் இருவர், மெதுவாகப் பேசியதைப்பின்வருமாறு வரைகின்றோம்:—

'அடே, காமாட்டி, உன் பேச்சை நம்பி மோசம் போய் விட்டேன்! தாலிகட்டிய பிறகுதான் நான் கல்யாணஞ் செய்து கொள்வதோ! நீ இச்சிக்கும் உத்யோகத்தை எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாமே! ஐயோ! என் கண்மணியை இதோ கட்டிக்கொள்கின்றானே! இஃதோர் விளையாட்டா உனக்கு?' என, ஒருவன் கடுகடுத்துச் சொல்லியதைக் கேட்டமற்றவன் 'அப்படி அவஸரப்படாதே! துடிக்காதே! பொறு, ஆக வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் நன்றாகச் செய்திருக்கின்றேன். எங்கே! அவன் தாலிகட்டுவதைப் பார்த்து விடுவோம்!' எனச் சொல்லித் தேற்றினான். தாலியுங் கையுமாக வபிராமன் சுந்தரியை நெருங்கும் ஸமயத்தில் அவனது கைகளில் விலங்குகள் பூட்டப் பட்டன! புஷ்பங்களை வாரியிறைக்கக்காத்திருந்த வெல்லோரும் கண்ணீரையிறைத்தார்கள்! போர்வீரர்பதின்மர், அபிராமனை வெளியிலிழுத்துச் சென்று, சிறையிலடைத்தார்கள். இவ்வுத்தம குணநிசயமுள்ள அபிராமனைச் சிறையிட்ட காரணம்யாதென்றறியுமாறு பின் தொடர்ந்த கூட்டத்தைப் பலவீரர், எட்டித் தள்ளினார்கள். எல்லோரும் அடைந்த வ்யாகூலத்தையும், ஞானசுந்தரியின் க்லேசத்தையும் சொல்லவும் வேண்டுமோ!

## அத்யாயம் ௮.

### அந்யாயம்.

நற்குணங்கள் நிறைந்த உத்தம புருஷனாகிய அபிராமனுக்கு நேர்ந்திருக்கிற விபத்தைப் பார்த்தீர்களா! சோறில்லாது

பசியால் துடித்துக் கொண்டிருந்த வொருவன், உண்பதற்கென்று இலையிலுட்கார்ந்திருக்கும் பொழுது வெளியே தள்ளப்படுவது போல, ஞானசுந்தரியோடு களிக்கும் பசிகொண்ட வயிராமன், அப்பசியின் நிவர்த்திக்கு ஆகாரமான விவாஹத்தன்று தடுக்கப் பட்டதுமல்லாமல், சிறையிலுமடைக்கப்பட்டிருக்கின்றான்! நிர பராதியான இவனது ப்ரலாபத்தை, யார்தா னெடுத்துரைக்கக் கூடும்? இவ்வயிராமன், "என்ன விபரீதம் விளைந்திருக்கின்றதோ, விளங்கவில்லையே! ஜகதீசா, பாபநாசா! நீ அறிய, யான் ஒரு பிழையுமிழைக்கவில்லையே! முன்பிறவியில், எவன் மனதைப் புண்படுத்தினேனோ! தினந்தோறும் ஈசனைத் துதித்துவந்தேனே! அவ்வீசனுக்குக் கருணையில்லாது போமா? எல்லாம் வல்ல கடவுளே! முழு மனதோடு என்னை நேசித்த சுந்தரி, உயிர்தரிப்பாளோ! எனது வயது சென்ற பெற்றோர், ஐயோ! எவ்வாறு துடிக்கின்றனரோ!" எனச் சிறையிலிருந்தபடியே கண்ணீர் ததும்பப் புலம்பினான். இவ்வாறு, துக்கித்துக்கொண்டிருந்த வயிராமனைச் சில ஸேவகர்கள் ந்யாய விசாரணை செய்யும் ஸபைக்கு இட்டுக்கொண்டு சென்றார்கள். அந்த ஸபையின் மத்தியிலுள்ள உயர்ந்த ஒரு பீடத்தில் கலிங்கதேசத்துக் குடிகள் தெரிந்தெடுத்த தலைவனான சரவணன், மிகக் கம்பீரமாயுட்கார்ந்திருந்தான். கைகளிலும், கால்களிலும் கனத்த விலங்குகளுடனும், பளபளப்பான கத்திகளைக் கொண்ட போர்வீரர்களுடனும், கண்ணுங் கண்ணீருமாய் நின்றிருந்த வயிராமனை நோக்கிச் சரவணன், "உன்பெயர் யாது? தொழிலென்ன? ஸர்வ வல்லமையுள்ள கடவுளின் முன்பாகச் சொல்வதெல்லாம் ஸத்யமாகச் சொல்" என, அதிகாரஞ் செய்யும் பயங்கரமான குரலோடும், கோபத்தைக் காட்டும் முகக்குறியோடும் வினவினான். இதனைக் கேட்ட வயிராமன், "ஐயா, நான் இதுகாறும் பொய்பேசியதேயில்லை; இனியும் பேசப்போகிறதில்லை. என் பெயர் அயிராமன்; கப்பலோட்டுவது எனது தொழில். இவ்வூரிலுள்ள........."

சரவணன்:—'நிறுத்து; அடே, அதிக ப்ரஸங்கஞ் செய்யாதே. கேட்ட கேள்விக்கு மாத்திரம் விடைசொல். கப்பல் ஓட்டி வரும் பொழுது, கருங்கோட்டைக்குச் சென்றாயல்லவா?'

அபிராமன்:—'கப்பலில் இருந்த குடிக்கக்கூடிய ஜலமெல்லாம்......'

சரவணன்:—'உன் கதை முழுவதுங் கேட்கச் சித்தமாயில்லை; நமக்கு அவகாசமுமில்லை. கருங்கோட்டைக்குச் சென்றிருந்த விஷயத்தை ஒப்புக்கொள்ளடா'

அபிராமன்:—'ஸ்வாமி, சென்றேன்.'

சரவணன்:—'அவ்விடமிருக்கிற ஸர்வஜன கண்டகனான குணகனை நீ ஸந்தித்தாயல்லவா?'

அபிராமன்:—'குணக மஹாராஜாவை, நான் அத்தீவில் இக்கண்களாற் காணவேயில்லை!'

சரவணன்:—'உன் ஸங்கதி வெளிவந்துவிட்டதே. இத்தேசத்துக் குடிகளைத் துன்புறுத்திக் காட்டிற்கு வெருட்டிய மகா பாதகனான குணகனை, மஹாராஜாவென்று மரியாதை வைத்துப் பேசுகின்றாய். இதனாலேயே நீ அவனை அபிமானிக்கின்றாயென்பது, இந்த ஸபையோருக்கு விளங்காமற் போகாது. உன்னைத் தனியே விசாரித்து, உண்மையை வெளிப்படுத்துகின்றேன். இங்குவா.'

எனச் சொல்லி, எல்லோருங் கூடியிருக்கிற ந்யாய ஸபையைவிட்டெழுந்து, அபிராமனோடு ஒரு அறையினுள் நுழைந்து, 'அபிராமா' உண்மையை ஒப்புக்கொள். குணகனை நீ ஸந்தித்ததற்குத் தக்க ஸாக்ஷியிருக்கின்றது. பொய் சொல்வதற்காக, அதிகமான தண்டனைக்குள்ளாகாதே.' என்றான். இதனைச் செவியுற்ற வபிராமன், தன் குலதெய்வங்களின் மீது ஆணை வைத்துத் தான் கருங்கோட்டையிற் குணகனைக் காணவேயில்லையெனச் சொல்லியதால் சரவணன், தனது சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து, அபிராமன் கையில் கொடுத்து, விலாஸத்தைப்படிக்கச் செய்தான். அக்கடிதத்தைக்கண்டவபிராமன், கருங்கோட்டையிலிருந்த ஓர் மனிதன் தன்னிடங் கொடுத்து, விலாஸதாருக்குச் சேர்ப்பிக்கச் சொன்னானென்றும், அம்மனிதன் குணகனல்லவென்பது நிச்சயமாய்த் தனக்குத் தெரியுமென்றும்,

அதனோடு தன்னூர் வந்ததும் ஊரின் குழப்பத்தையும், குணகனது செய்தியையும், ராஜாங்க எச்சரிக்கையையும் அறிந்து, அக்கடிதத்தால் ஏதேனும் பிழை நேரலாம் எனப்பயந்து அதனைத்தன் சட்டைப்பையிலேயே வைத்திருந்தானென்றும், தனது கல்யாண கார்யங்களிற் கவலை கொண்டிருந்ததால், அதை முற்றிலும் மறந்தானென்றும், அந்த ந்யாய ஸபைக்கு வந்திருப்பது ஆச்சர்யமென்றும், சொன்னான். பிறகு, ரஹஸ்ய விசாரணை தொடங்குகின்றது:—

சரவணன்:—'ராஜாங்க ஸம்பந்தமான ரகஸ்யங்களை வெளியிடக்கூடாது. கடிதத்தைப் பிரித்துப்படி, பார்ப்போம்.'

அபிராமன்:—'ஹா ஹா! அதிநாராயணர் யார்? அவரையல்லவோ உடனே சிறைப்படுத்த வேண்டும். அவ்வாறு தண்டிக்காவிட்டால் இந்நகரத்திற்குக் கேடுவந்துவிடும்! குணகனுடைய ப்ராண மித்ரராகிய அவரை, இப்பொழுதே கருங்கோட்டைக்கு அனுப்பிவிடுவீர்கள் என நம்புகின்றேன்.'

சரவணன்:—'பார்த்தாயா, இக்கடிதத்தை வெளியிட்டால், உன்னைக் கொலை செய்யும்படி நேர்ந்துவிடும்! ஆதலின், இதனைக் கொளுத்திவிடுகின்றேன். இக்கடிதத்தை என்னிடம் சேர்ப்பித்தவருக்கும் இம்மாதிரியே கட்டளையிட்டிருக்கின்றேன். உனது குணநிசயங்களையறிந்த நான், உனது க்ஷேமத்தைக் கருதியே இவ்வாறு சொன்னேன். இதோ! கடிதத்தைக் கொளுத்துகிறேன்.'

அபிராமன்.—'ஐயா, நிரபராதியான என்னை இவ்வாபத்திலிருந்து விடுவித்த தங்களுக்கு, ஆரோக திடகாத்ரமும், நீடூழிவாழ்வும், ஸந்தான ஸம்பத்தும், அழியாப்புகழும், கொடுத்தருளும்படி எல்லாம் வல்ல கடவுளைத் துதிக்கின்றேன். இனி, நான் வீட்டிற்குச்சென்று, விவாஹமுகூர்த்தத்தை நிறைவேற்றிக் கொள்கிறேன்.'

சரவணன்:—'ந்யாய ஸபையிலுள்ள எல்லோருக்கும் நேராகக் கருங்கோட்டைக்குச் சென்றதாக ஒப்புக்கொண்டாயே!

அதுவும் ஒரு குற்றமாயிற்றே! ஆதலின், உன்னைச் சில மாதங்கள் தண்டித்துப் பிறகு விட்டுவிடுகின்றேன்; பயப் படாதே.'

அபிராமன்:— 'சிறையிலடைபட்டிருக்கும்படி, யான் ஒரு தீங்கு மிழைக்கவில்லையே! இது தர்மமா?'

சரவணன்:— 'வாஸ்தவம், உன்னைத் தண்டியாது விட்டால், பொது மனிதனுகிய என்னை ஜனங்கள் நிந்திப்பார்களல்லவா? மேலும், இதனையறிந்த பலர், கருங்கோட்டைக்குப் போகத் தலைப்படுவர்! எனது எச்சரிக்கைக்கு மதிப்பற்றுப் போகும். நான் சொல்லியவைகளை மறக்காதே. உன்னைக் கூடிய சீக்கிரத்தில் விடுவித்து அழைத்துக்கொள்கின்றேன்.'

எனச்சொல்லி, வெளிவந்து ஸபையோரை நோக்கி, 'இவன், குற்றத்தை யொப்புக் கொண்டானுதலின், இவனைக்கருங்கோட்டைக்கு அனுப்பத் தீர்மானிக்கின்றேன்.' என்ருன். இத்தீர்மானம் வெளிவந்த உத்தரக்ஷணத்தில், யமகிங்கரர்—போல்பல வீரர்- அபிராமனை யழைத்துக்கொண்டு வெளியே வந்து, துரிதமாய்ச் செல்லத்தக்கவோர் கப்பலிலேற்றிக் கருங்கோட்டைக்கு அனுப்பினுர்கள்.

கருங்கோட்டை மலையின்மேலுள்ள சிறைச்சாலையே நமதபிராமனுக்குத் தங்குமிடமாயிற்று. ஒவ்வொரு நாளும் பகல் பன்னிரண்டுமணிக்கு ஒரு தகரக்குவளையில் இவனுக்கு ஆஹாரங் கொடுக்கப்பட்டது. இவனுடன் பேசுபவரில்லை! இவனது குறைகளைச்சொல்லி யாறறிக்கொள்ள வென்ருல், ஸர்வவ்யாபியான கடவுள் ஒருவர் தவிர வேறு யாருமில்லை! யாதொரு குற்றமுஞ் செய்திராத இவன், ஒரே வேளை உப்பில்லாக் கூழ் உண்ணும் இவ்விதக் கடுந்தண்டனைக்குள்ளாயிருப்பதனுல் மிகுந்த கோபமுற்ருன். கோபத்தாற் செய்வதென்ன? அங்கிருக்கும் ஸேவகர்களைப் பலவாறு வைவதும் கூழைக் கீழே கொட்டுவதும், தண்ணீரைச் சிந்துவதும், தானுகப்பேசுவதுமாக விருந்தான். அங்கிருந்த காவலாளிகள், இவனைப் பித்தனெனவும், அடக்கியாள்வது அஸாத்யமெனவுந் தீர்மானித்து, முன்னமே நாம் கூறியுள்ள, சுரங்கத்திலிறக்கினுர்கள்.

## அத்யாயம் ௯.

### படுகுழி.

கருங்கோட்டைச் சுரங்கம்! இதனை வர்ணிக்கப் புகுந்த நமக்கே மிகுந்த பயமும், பரிதாபமும் விளைகின்றன. ஒரு பனை யாழத்தில் குற்றவாளிகள் தங்கியிருத்தல் வேண்டும்! பகலோன் கிரணம் கொஞ்சமேனு மக்குழியிற்படாது. ஆனால், நடுப்பகலில், அந்தி நேரம்போலக் கொஞ்ச மொளி வீசும். இங்கிருப்பவருக்குக் கொடுக்கவேண்டிய ஆகாராதிகளைக் கயிற்றிற் கட்டிக் கீழே இறக்குவார்கள்.

பெருங் குற்றவாளிகளுக்கு இத்தண்டனை உரித்தானதாயிருக்க, நிரபராதியான நமது கதாநாயகன் இதனுக்குள்ளாக்கப் பட்டிருப்பதை நினைக்கும்பொழுது, நமக்கே எவ்வளவு வருத்தமுண்டாகின்றது பார்த்தீர்களா! இவ்வபிராமன், தனது பெற்றோரையும், உதயமார்த்தாண்டன் செட்டியாரையும், தன்னருமைக் காதலியாகிய ஞானசுந்தரியையும் நினைந்து நினைந்து, பெருந் துயரமுற்று, "ஜகதீசா, உமக்கு ஹரன் என்ற பெயர் தகும்! ஏனெனில் பிறர் அடையவேண்டிய கீர்த்திகளை நீர் அபஹரித்திருக்கின்றீர்! எப்படியெனில், உமது உடலிற் பாதியாயிருக்கிற பார்வதிக்கு நெற்றிக்கண்ணிலும் பாதி சொந்தமல்லவா? காமனைக் கொளுத்திய கீர்த்தி முழுவதையும் நீரே கொள்ளையிட்டு, காமாரி, என்ற பட்டத்தைப் பெற்றிருக்கின்றீர்! காமனைக் கொளுத்திய கண்ணிற் பாதியுமக்குச் சொந்தமானதால், முழுக் கீர்த்தியும் உமக்கே யமைந்தாலும், கால காலன், என்ற பெயர் உமக்குத் தகுமோ? காலனை யுதைத்தது அம்மையின் காலன்றோ? யமனையுதைத்தவள், உலகெலாமீன்ற அன்னையாயிருக்க, உமக்கு அந்தகாந்தகன், என்ற பெயரேற்குமோ? பிறர் அடையத் தக்க புகழை எவ்வாறுகொள்ளை கொண்டீரோ, அவ்வாறே, நாயினுங் கடையேனாகிய எனது வந்தனை வழிபாடுகளையும், இன்பங்களையும் அபஹரித்து, என்னைப் பறக்கவிட்டீரே! அடியார்களின்

பாபங்களை ஹரிப்பதனால், ஹரன், எனச் சொல்கின்றார்களே, அஃது செவ்வாய்க்கிழமையை மங்களவாரம் எனச் சொல்வது போலாம்!" என, இவ்வாறாக ஒவ்வொரு நாளும் சிலநேரங் கடவுளை நிந்திப்பதும், சில நேரந் துதிப்பதுமாகத் தனது காலத்தைச் செலுத்திவந்தான்.

பல வருஷங்கள் சென்றன. இருண்ட அச்சுரங்கத்தில் ஒருவருமிலாது தனியே துக்கித்துக்கொண்டிருந்த வபிராமன், "ஐயோ! இஃதென்ன காலக்கேடு! சில மாதங்களுக்குப் பிறகு விட்டுவிடுவதாகச் சொன்னானே சரவணன்! தலைதெரியாத பகலியிலிருக்கும் அப்பாதகன், என்னை முற்றிலும் மறந்தானோ! சரவணா, உன் பதவியா என்னை மறக்கச் செய்தது! உனக்கு நீடித்திருக்குமா, இவ்வாழ்வு? அந்தோ! என்னையீன்றோர்களே! என்னைப் பிரிந்த நீங்கள், பரலோகஞ் சென்றீர்களோ! ஞானசுந்தரி, என் கண்மணி! என்னைப் பிரிந்தால் உயிர்தரியேனென்றாயே! யாது செய்கின்றாயோ! இச் சுரங்கத்தைவிட்டுப் போவதற்கு மார்க்கமுமில்லையே! ஐயோ! எதற்காக யான் உயிர்வைத்திருக்கவேண்டும்? இறந்தால், மறு பிறவியிலாவது இன்பமுறுவேன்." எனத் துக்கித்தான். பிறகு உயிரை மாய்த்துக்கொள்வதாக ஒருவாறு தீர்மானித்து, ஒரே வேளை கயிற்றால் இறக்கப்படும் உணவையுமெடுத்துக்கொள்ளாது தள்ளியதால், நகரவும் பலமற்றுப் படுத்துக்கொண்டான்.

இப்படியிருக்க, அச்சுரங்கத்தினோர்புறம் கன்னம் வைப்பது போல் மெதுவான ஓர் ஒலி கேட்டது. ஆகாரமில்லாமல் செவிகளடைபட்டிருந்தும், அதிர்ச்சியாலதனை யறிந்தவபிராமன், 'இஃதென்னவாச்சர்யம்! இச்சுரங்கத்தை யடுத்து வேறோர் சுரங்கமிருத்தல் வேண்டும்! அங்கிருப்பவன், குணவானாயிருப்பானோ! வேறோர் குற்றவாளியா யிருப்பினுமென்ன? அவன், எனக்குத் துணையாவான் என்பது திண்ணம்.' என நினைந்து, அச்சத்தம் கேட்குமிடத்தில் குடையத்துவக்கினான். சில தினங்களில், அயல் சுரங்கத்தான் செய்துவந்த த்வாரத்தோடு அபிராமன் செய்த, த்வாரம் பொருந்தியது. நடுப்பகலில், அந்த த்வாரத்தின்வழியாக உற்றுப் பார்த்தவபிராமன், தானிருக்குஞ் சுரங்

கத்தைப்போல் அவ்விடமோன் றிருப்பதையும், அவயவங்களைப் பார்க்கக்கூடாதபடி ரோமமும், நகங்களும் வளர்ந்து வஸ்திரமு மில்லாமல் ஓர் மனிதனுட்கார்ந்திருப்பதையுங் கண்டு, 'இஃ தென்ன வேடிக்கை! எவ்வளவு வருஷங்களாக இம்மனிதன், அடைபட்டிருக்கின்றனோ! என்னைப் போற் குற்றமற்றவனோ! அல்லது யாரையேனுங் கொலைசெய்தவனோ! எப்படியிருந்தா லென்ன? பேச்சுத்துணைக்கு எனக்கு ஒருவருமில்லையாதலின், இக்கிழவனை என்னுடன் சேர்க்கக் கடவுள் கருதியிருக்கலாம்!' என, யோசித்துக்கொண்டிருந்த பொழுது, இவனை உற்று நோக்கிய அயல் சுரங்கத்தான், 'நண்பா, எனது வேஷத்தையும், உருவத்தையுங்கண்டு, பேயோ, பெரும்பூதமோ, ஜடாமுனியோ என்றஞ்சாதே. நாற்பத்தெட்டாவது வயதில், யான், இச்சுரங்கத்தில் தள்ளப்பட்டேன். எனக்குத் தற்காலம் எண்பத்தெட்டு வயதாயிற்று! நாற்பது வருஷங்களாய்த் தனியேயிருந்து, துன்புற்றவெனக்குத் துணையாகக் கடவுள், உன்னை நியமித்திருக்கின்றார்! இந்த த்வாரத்தைப் பெரிதாக்கி, நம்முள் போக்குவரவு வைத்துக் கொள்வோம்.' என்றான். அவ்வாறே செய்து கொண்ட பிறகு, அயல் சுரங்கத்திற் புகுந்த நமதபிராமன், வயது சென்ற அம்மனிதனுடன் பேசத்துவக்கி, பற்பல விஷயங்களைச் சொல்லி வரும்பொழுதே, தன் பெயரையும், தான் கப்பலோட்டியதையும், மாலுமித்தலைமை உத்யோகம் பெற்றதையும், குமரனோடு தனியேயிருந்த ஞானசுந்தரியை ஸந்தித்து விவாஹப் பேச்சு முடித்துக் கொண்டதையும், குமரவீரர்கள் ஓரிரவு வந்திருந்த செய்தியையும், இவ்விருவரின் நிலைமையையும், குணங்களைப்பற்றியும், விவாகத்தன்று வீரர்கள் விலங்கிட்டதையும், ரஹஸ்ய விசாரணையையும், மற்றுமுள்ள யாவற்றையும் சொல்லிமுடித்து, அக்கிழவனை நோக்கி, 'ஐயா, என் கதை முழுவதையுஞ் சொல்லி முடித்தேன். தாங்கள் யார்? யாது காரணம்பற்றிப் பல வருஷங்களாக இங்ஙனம் அடைக்கப்பட்டிருக்கின்றீர்கள்?' என வேண்டினன். இவனது வேண்டுகோளுக்கிணங்கிய கிழவன், தனது கதையைச் சொல்லத் துவக்குகின்றான்:—

"அப்பா, அபிராமா, நான் வாய்திறந்து பேசி நாற்பது வருஷங்களானதாலும், முதிர்ந்த வயதினுல் பற்கள் உதிர்ந்தனவான

தாலும் குழறின மொழிகளால் நான் சொல்வதைக் கவனித்துக் கேட்பாயாக. அறுநூறு வருஷங்களுக்கு முன் நாகப்பட்டிணத்திலிருந்து ஒரு காதம் வடக்கிலுள்ள காரைக்காலில் ஸ்ரீமந்தர் என்றொருவரிருந்தார். பெரிய பணக்காரராயும், படிப்பில் ஈடில்லாதவராயும் அவர் விளங்கினார். அவருக்கிருந்த பொருளையளவிடக்கூடாதவாறு குபேரனுக்கீடாய் அவரிருந்ததால், எல்லோரும் அவரை ஸ்ரீமந்தர் என்றழைத்தார்கள். அவர் என்னுடைய எட்டாவது பாட்டன்.

"இவ்விந்தியாவிலும், அந்ய நாடுகளிலும் புத்தமதத்தைப் பரவச் செய்த அசோகவர்த்தனர் அக்காலத்தில் அரசு செலுத்திவந்தார். அவருக்கு அடங்கிக் கப்பங்கட்டுபவனான ஞாநசிஷ்டன் என்ற மற்றொரு மகிபன், நாகபட்டிணத்தில் அரசு செலுத்தினன். புத்தமதத்தைப் பின்பற்றியொழுகிய பலவரசர்களில், இவனும் ஒருவன். அக்காலத்தில், நாகை நகரம், யத்தர்களின் ப்ரதான க்ஷேத்ரங்களில் ஒன்றாயிருந்தது. வெள்ளிக்கோபுரமும், தங்க விக்ரஹமுங் கொண்டு, அவ்விடத்திலிருந்த ஒரு பெரிய புத்தர் ஆலயத்திற்புகுந்து, அத்தங்க விக்ரஹத்தைத் திருடிப்போய், ஸ்ரீரங்கத்தில் யோகநித்ரை செய்கிற திருவரங்கப்பெருமானுக்குப் பொன்மயமான ஸ்தூபி கட்டுவித்தவர், திருமங்கையாழ்வார்! மேற்சொல்லிய ஞாநசிஷ்டன், அப்புத்த மதத்தையெங்கும் பரவச்செய்ய வேண்டுமென்றாசைகொண்டான். அவ்வாசையை நிறைவேற்றுதற்கு இன்றியமையாத பொருளில் அவனுக்கு ஆசை பிறந்தது. தனது நாட்டில் மிகப்பணம் படைத்தவர், ஸ்ரீமந்தர் எனத்தெரிந்த அம்மன்னன், அவரது காசையெல்லாங் கொள்ளையிடத் தீர்மானித்தான். இச் செய்தியைச் செவியுற்ற ஸ்ரீமந்தர், வீரசைவமதத்தைச் சார்ந்தவர். தமது அளவிறந்த ஸொத்துக்களைப் புத்தமத நிமித்தமாய்ச் செலவிட எண்ணமில்லாதவர். ஆனதுபற்றி, ஞாநசிஷ்டன் வருவதற்கு முன்னமேயே ஒருவருமறியாதவண்ணம் தமது பொருள்களனைத்தையும் எங்கேயோ அடக்கிவிட்டார். பிறகு எத்தனையோ வருஷங்கள் சென்றன. எனது தந்தையின் காலத்தில், ஒரு மந்த்ரவாதியைக் கேட்டார். அவன், அப்புதையலை எடுத்துக் கொடுப்பதாய் வாக்

களித்துச் சில தினங்கள் ஜபம் செய்தான். முடிவில், பணச்செல வேயன்றிக் கார்யத்தில் ஒன்றும் நிறைவேறவில்லை. புதையலை யெடுக்க எப்பாடுபட்டும், அஃது இருக்குமிடமே தெரியவில்லை. இவ்வாறு, என் பிதாவின் காலமும் சென்றது. எனது மூதாதையான ஸ்ரீமந்தரின் கதையைக் கர்ண பரம்பரையாய்க் கேட்டயான், பலவாறு யோசித்து, அம்மஹான் புதையலை வைத்துச் சும்மா சென்றிருக்கமாட்டாரென்றும், அதனைப்பற்றி யெங்கேனும் எழுதிவைத்திருப்பாரென்றும் தீர்மானித்தேன்.

"பழய காலத்தவர் எழுதிய பல சுவடிகள், இக்காலத்திலும் அநேகர் வீடுகளிற் காணப்படுகின்றன. கடிதங்களில் எழுதும் வழக்கம் தொடங்கிய பிறகு, பனையோலைகளில் எழுதுபவரில்லை. ஆதிகாலத்தில், எழுத்துப் படிவதற்காக எழுதிய சட்டங்களைச் சேர்த்து, ஆடிமாஸம் பதினெட்டாந் தேதியில் ஆற்றில், அல்லது குளத்திற் போடுவது வழக்கம். இக்காலத்திலோ, அவ்விதச் சட்டங்களில்லாததால், முன்னோர் எழுதிவைத்த ஓலைச் சுவடிகளை ஆற்றிற் கொட்டுகிறார்கள்! பழய நூல்களின் அருமையையும், அவைகளைச் சேர்த்திருத்தலில் அம்முன்னோர் அடைந்த கஷ்டத்தையும் அறியாத பல மூடர், சுவடிகளை யாற்றிலெறிவதால் பல நூல்கள் இருந்தவிடமே தெரியாமற் போய்விட்டன!

"இத்தகைய பல சுவடிகள் என்வீட்டில் ஏராளமாயிருந்தன. அவைகளைப்பற்றி யான் விசாரித்தபொழுது, அவையனைத்தும் ஸ்ரீமந்தரால் எழுதப்பட்டவையெனத் தெரிந்துகொண்டேன். அச்சுவடிகளனைத்தையும் படித்துப் புதையலைப்பற்றி யறியலாமென்ற நம்பிக்கை எனக்குண்டாயிற்று. அவ்வாறு, ஆராய்ச்சி செய்யத் துவக்கிய வெனக்கு வயது பன்னிரண்டு. முப்பத்தாறு வருஷங்கள் சென்றும், புதையலைப்பற்றிய யாதொரு விஷயமும் தென்படவில்லை! ஆனால், எனது நாற்பத்தெட்டாவது வயதில், ஆறு சாஸ்த்ரங்களிலும், அறுபத்து நான்கு கலைகளிலும் கற்றுத் தேர்ந்த நிபுணனானேன். இவ்வாறு, இரவும் பகலுமாய்ப் பல வாண்டுகள் படித்துவந்த காரணத்தால், எனது மூளை கொஞ்சங் குழப்பமடைந்திருந்தது. முதலில், ஒரு சிறு சுவடியில் புதையலைப்பற்றிய எல்லா ரஹஸ்யங்களும் ஸவிஸ்தாரமாய் எழுதப்

பட்டிருந்தன! அதனை என் மனதிற் பதித்துக்கொண்டு, பிறர் அறியாவண்ணம் அச்சுவடியைச் சுட்டுவிட்டேன். புதையலிருக்குமிடத்தை யறிந்ததால், எனக்கு ஆனந்தமதிகரித்தது. இதனால், முன்னமே சொல்லிய மூளைக் குழப்பம் முற்றிப்பெரும் பைத்தியம் பிடித்தவனானேன்! இவ்வாறான வென்னாற் கல்லெறியப்பட்டவர்களும், பலவாறு நிந்திக்கப்பட்டவர்களும், நஷ்டப்பட்டவர்களுஞ் சேர்ந்து, என்னை இக்கருங்கோட்டைக்கு அனுப்பினார்கள். இங்கிருந்த காவற்காரர்கள், என்னாலடைந்த தொந்தரைகளைப் பொறுக்க வியலாமல், இச்சுரங்கத்திலென்னைத் தள்ளினார்கள்!'' எனச் சொல்லி முடித்தான்.

## அத்யாயம் ௰.

### ஆதிசேஷன்.

கிழவன் சொல்லிய அபூர்வமான கதையைக் கேட்ட வபிராமன், "ஐயா பெரியோரே, குற்றஞ் செய்யாத நானொருவனே கடுந்தண்டனைக்குள்ளாயிருப்பதாக நினைந்தேன்! இங்கு எனக்குத் துணையாக வேறபட்ட தாங்களும் என்னைப்போலவே குற்றமற்றவராயிருத்தல் விந்தையிலும் விந்தை! கல்லை எறிந்தவர்க்குக் கைவிலங்கு போதாதோ! பித்தங்கொண்டவர்க்கு இத்தண்டனை ஏற்குமா! என்ன ஐயா அந்யாயம்! தாங்கள் அப்படிப் பித்தங்கொண்டவராக நினைக்க இடமில்லையே! தங்களைப்பற்றிய யாவற்றையும் தெரிந்துகொண்டேன்; தங்கள் பெயர் யாதோ" என்றான்.

கிழவன்:—"அபிராமா, என்னை ஆதிசேஷன் என்றழைப்பார்கள். எனக்குப் பைத்யம் பிடித்திருந்த விஷயம் வாஸ்தவம். ஆனால், நான்கு வருஷங்களுக்கு முன் அப்பைத்யம் விலகிவிட்டது."

அபிராமன்:—"தற்காலம் ஒழுங்காயுள்ள தங்களை யாது காரணம் பற்றி இன்னும் இங்கு வைத்திருக்கின்றார்கள்?"

ஆதிசேஷன்:—“இக்குழியில் தள்ளப்பட்டவர்கள் கரையேற்றப் படுவது இறந்த பிறகுதான்!”

அபிராமன்:—“ஹா! அப்படியா? ஐயோ! யான் யாது செய்வேன்? எனது பெற்றோரையும், நண்பர்களையும் இனி யான் பார்க்கமாட்டேனே! அந்தோ!”

ஆதிசேஷன்:—“பையா, பயப்படாதே; கட்டாயம் நீ கரையேற்றப்படுவாயென, எனக்குத் தோன்றுகின்றது! பூமியிற் புதைபட்டிருப்பதை எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கண்டறிந்தேன்! உத்தமோத்தம குணம் பொருந்திய ஸ்ரீமந்தர், ஸத்துக்களைக் கருதியே அப்பொருளை வைத்துச் சென்றார்; நீயாவது விடுவிக்கப்படாவிடில், யாருக்குத்தான் அது தெரியப் போகின்றது? அப்பொருளால் பயன்படுபவர் யாவர்? அடர்ந்த காட்டினிடையே அவை புதைபட்டிருக்குமோ! அஃதேற்படாது. கடவுளின் கருணையால் நற்குணம் பொருந்திய நீ, அப்புதையலை யெடுப்பாய் என்ற நம்பிக்கை யெனக் குண்டாயிருக்கின்றது. உனது நண்பரெனச் சொன்னாயே; அவர்கள் யார்? எங்கிருக்கின்றார்கள்?”

அபிராமன்:—“பெருந்துறையென்ற என் ஜனன பூமியில், எனக்கு எண்ணிறந்த நண்பர்களிருக்கின்றார்கள்.”

ஆதிசேஷன்:—“உனது ஸங்கதிகளை நீ சொல்லிவந்த பொழுது, குமரன், வீரன் என்ற இருவரைப்பற்றிச் சொன்னாயே; அவர்களையும் நண்பர்களாகவே மதித்திருக்கின்றாயோ?”

அபிராமன்:—“ஆமாம்! அவர்களுக்கொப்பான ஆப்த மித்ரர் அடைவது அபூர்வமல்லவா! என்னைச் சிறைப்படுத்தியபொழுது, அவர்கள் கண்ணீர் பெருகவிட்டுக் கதறினார்களே!”

ஆதிசேஷன்:—“நிரம்ப அழகு! கொஞ்சம் யோசித்துப் பார். குமரன், ஞானசுந்தரியைக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டிய எண்ணத்தாலும், வீரன், மானுமி வேலையை அடையவேண்டிய ஆசையாலும், இருவரும் ஒற்றிருந்து உன்னை இச்சங்கடத்திற் சிக்கச் செய்தார்கள். இஃது உன

க்கு விளங்காமற் போயிற்றே! இவ்விருவரையுந் தவிர, சரவணனும் ஸ்வய நயம் பாராட்டுபவனாய் இருந்திருத்தல் வேண்டும். உன் சட்டைப் பையில் வைத்திருந்த கடிதத்தை அச்சரவணனிடங் கொடுத்தவர் குமர வீரர்கள். அக்கடிதம், தன்னைச்சார்ந்த ஒருவனுக்கு, எழுதப்பட்டிருந்ததையறிந்த அச்சரவணன், அதனைக் கொளுத்தியிருக்கின்றான்! விலாஸதாரர் இன்னாரெனத் தெரியக்கூடாதென்று எச்சரிக்கை செய்திருக்கின்றான். பார்த்தாயா! சில மாஸங்கள் சென்ற பிறகு, உன்னைப்பற்றி யாதொரு உத்தரவும் பிறப்பியாத அப்பாதகன், உன் சத்துருக்களில் முதன்மையானவன்! அக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டிருந்தது?"

அபிராமன்:—"பெருந்துறையில், மஹாப்ரக்யாதி பெற்ற, ஆதிநாராயண பிள்ளையவர்கள், திவ்ய ஸமுகம்-என அக்கடிதத்தில் விலாஸம் எழுதப்பட்டிருந்தது."

ஆதிசேஷன்:—"அவர், யாராயிருக்கலாம்? யோசித்துச் சொல்."

அபிராமன்:—"சரவணனுடைய தந்தையின் பெயர், அதுதான்! ஆனால் தன் மகனுக்கு விரோதமாய்க் குணகனுடன் அவர் கடிதப் போக்குவரவு வைத்துக் கொள்ளமாட்டார்."

ஆதிசேஷன்:—"நன்றாயிருக்கின்றது! தன் தகப்பனல்லாது வேறு ஒருவனாயிருந்தால், விசாரணையை ரஹஸ்யமாய் நடத்துவதற்குக் காரணமில்லையே. மேலும் உன்னைச் சிறையிலிட்ட அச்சரவணன், அவனை மாத்திரம் விட்டிருப்பானோ?"

அபிராமன்:—"ஹா, குமரா! ஹா, வீரா! உங்களை நண்பரெனக் கருதிய யான், எவ்வளவுமதியீனன்! கடிதத்தைத் திருடுவதற்கு ஓரிரவு என் வீட்டில் தங்கினீர்கள்! சரவணா, கடவுள் உன்னைக் கண்டிக்காமல் விடுவாரோ?"

எனத் துக்கித்திருந்த வபிராமனை ஆதிசேஷன் ஸமாதானஞ் செய்து புதையலிருக்குமிடத்தையும், அதனை யெடுக்கும் விதத்தையும் குறிப்பிட்டுச் சொன்னான். ஆஹாராதிகள் கொடுக்கப்

படுங் காலத்தில் அவரவர் சுரங்கத்திலிருந்து அவைகளை யேற்றுக் கொண்ட பிறகு, இருவருஞ் சேர்ந்து ஸம்பாஷிப்பார்கள். இவ்வாறாக மேலும் எட்டாண்டுகள் சென்றன. அவ்வெட்டு வருஷங்களுக்குள், ஸ்ரீமந்தர் எழுதிவைத்த சுவடிகளைப் படித்து சகல கலைகளையுமறிந்த வாதிசேஷன், அக்கலா ஞானங்களனைத்தையும் அபிராமனுக்குப் போதித்தான். ஒருமுறை சொல்லியவுடன் க்ரஹித்துக்கொண்டு, நூறு நூறாயிரங் கடவைகளானாலும் பிழையின்றித் திரும்பத் திரும்பச் சொல்கிற "கிராமோபோன்" என்கிற யந்த்ரத்தைப்போல் ஆதிசேஷன் உபதேசித்த யாவற்றையும் நமதபிராமன் க்ரஹித்துக்கொண்டான்.

இவ்வாறு யிருவரும் காலங்கழித்து வரும்பொழுது, ஓர் நாள், தொண்ணூற்றாறு வயது சென்ற வாதிசேஷன், யாதொரு நோயுமின்றித் திடீரென வுயிர்துறந்தான். ஆதிசேஷன் என்ற பெயருக்கேற்ற கல்விப்பயிற்சி யுடையவனும், அச் சேஷனைப் போலவே பூமியின்கீழ் நெடுநாள் வஸித்தவனும், தனதுயிர்த் துணைவனும், கலைகளைக் கற்பித்த தேசிகனுமான அக்கிழவன் இறக்கவும், தீராத் துயருற்ற வபிராமன், ஸேவகர்கள் ஆகாராதிகளோடு சுரங்கத்துக்கு மேற் கூடியிருக்கலையறிந்து, த்வாரத்தைப் பாயால் மூடிவிட்டுத் தன் சுரங்கத்துட் சென்றான். ஆதிசேஷன் இறந்ததையுணர்ந்த ஸேவகர்கள், இரும்பினாற் செய்த ஒரு ஏணியைக் குழியிலிறக்கி, அதன் வழியே யிறங்கி, அங்கிருந்த பிணத்தை மூட்டையாகக் கட்டி, வழக்கம்போலிரவிற் கடலிலெறிவதாகச் சொல்லி, அதனை யவ்விடத்திலேயே வைத்துச் சென்றனர்.

நடுநிசியில், நால்வர் கீழேயிறங்கி, ஆதிசேஷனது சரீரத்தைச் சேமித்து வைத்திருந்த மூட்டையைத் தூக்கினார்கள். அது அதிகமாகக் கனத்ததைக் கவனித்தவொருவன், "அடே யப்பா! என்னடா கல்லுக்குண்டாக் கனக்குது?" என்றான். உடனே, மற்றவன் "எலும்பாக் கிடந்த கிளப்பொணம், பொம்மே மாதிரி இருந்தான், கொளுத்தவன் கணக்கா கனக்குது!" எனச் செப்பவும், வேறொருவன் "அடே, லொட லொட இன்னு ஆடுதடா! இறக்குங்கடா! அவுத்துப் பாப்பம்!" எனச் சொல்லித் தனது

கையைத் தாழ்த்தினான். இதனைக்கண்ட நான்காவது சிப்பாய், "அறிவு கெட்டவங்க! இவுங்களுக்குப் புத்தியில்லே! நிசிவேளைலே பாக்கறாங்களாம், பொணத்தெப் போயி! பெரிய பெரிய டாக்டர் பரிச்செயெல்லங் கிளிட்சிப்புட்டாங்களல்ல! தூக்குங்கடா, சோறுதின்னிப் பசகளா." என்றுரைத்ததால், எல்லோருஞ் சேர்ந்து அதைக் கடலில் வீசி யெறிந்தார்கள்.

## அத்யாயம் ௰க.

## வேதாரண்யம்.

கப்பல் யாத்திரை செய்பவர்களையுங் கொள்ளையடிப்பவருண்டு. இக்கப்பற் கொள்ளைக்காரரிற் பலர் ஒன்றாய்க் கூடிக் கப்பலில் ஏறிப்போய்ப் பல சரக்குகளோடு செல்கிற வேறு கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையிடுவது வழக்கம். இத்தகைய கப்பலொன்று, கருங்கோட்டைக்கு ஸமீபமாய் ஓரிரவு, மணி பதினொன்றுக்குப் போய்க்கொண்டிருந்தது. பதினைந்து திருடர்களும், அவர்களின் தலைவனான ஒருவனும் அக்கப்பலில் இருந்தார்கள். முழுமதி வானத்தில் ஒளிவீசிய வக்காலத்தில், மேற்சொல்லிய கப்பல், அலைகளாலாடிக்கொண்டு சென்றபொழுது, "ஐயா, ஐயா, ஐயோ! நிறுத்துங்கள்." எனச் சொல்லிய வொரு குரல், அப்படகிலுள்ளவர்களுக்குக் கேட்டது. அம்மொழிகளைக் கவனித்த தலைவன், "நிறுத்துடா, அடே, நிறுத்து" எனக் கப்பலோட்டுங் கள்வனுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே கப்பல் நின்றவுடன், ஒரு மனிதன் நீந்திவந்து, அதனிலேறினான்., அங்கிருந்தவர்கள், அவனையுற்றுப் பார்த்து, உடம்பெல்லாம் ரோமம் நிறைந்தும், வெள்ளைக்காரர்களைப்போல வெளுத்தும், நகங்கள் அதிக நீளமாய் வளர்ந்துமிருந்ததைக் கவனித்தார்கள். குளிரினாலவன் நடுக்கங்கொண்டிருந்ததால், கம்பளியொன்றைக் கொடுத்தார்கள்.

கொள்ளைக்காரர்களினும் நல்லவர்உளர்! ஒரு பணக்காரன் வீட்டிற் புகுந்து, தீவர்த்திக்கொள்ளையடித்தவர்களி லொருவன், குழந்தைகளின் நகைகளைக் கழற்றக்கூடாதெனக் கட்டளையிட்டானும்! இக்கட்டளையைப் பிறப்பித்தவன், பிள்ளையை வேண்டித் தவம் புரிபவனோ என்னவோ புலப்படவில்லை! மனிதராய்ப் பிறந்த கள்வரிடம் கருணையென்பது கொஞ்சமேனுமிராது போமா? கடலிலிருந்து கப்பலேறிக் குளிரினால் வருந்திய அம்மனிதனுக் குதவியதே அவ்விரக்கத்திற்குப் போதுமான ஸாக்ஷியாயிருக்கின்றதல்லவா?

கம்பளியா லங்கமெங்கும் மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்த அம்மனிதனைச் சூழ்ந்து அங்கிருந்தவர் நின்றனர். பிறகு, எல்லோரும், "நீங்க ஆருங்க?" என வினவியதால், "நண்பர்களே, நானும் ஒரு கப்பலையோட்டுபவன் தான். அப்படிச் செலுத்தி வந்த என் கப்பல் ஒரு கல்லில் மோதியுடைந்து விட்டதால், எல்லோருமிறக்க, நான்மாத்திரம் அக்கல்லைப் பிடித்துக்கொண்டிருந்தேன்" என அப்புது மனிதன் விடையளித்தான். இதனைக் கவனித்த வக்கள்வர் தலைவன், "ஏய், என்னடா புளுகுகிறான்! நீரிலே மனுசங்கணக்கா மசுரு மண்டியிருக்குது; வாச்சி வாச்சியா நகம் மொளச்சிருக்குது! நீ என்னடா, காட்டு மனுசனா?" எனச் சொல்லி, குளிர் விலகவும், பசியால் வருந்திய அம்மனிதனுக்கு வயிறு நிரம்ப அன்னமளிக்கச் செய்தான். இதுகாறும் நின்றிருந்த கப்பலுங் கிளம்பிவிட்டது. கப்பல் போய்க்கொண்டிருந்த பொழுது, அப்புது மனிதன் பக்கத்திலுட்கார்ந்த தலைவன், "அய்யமாருங்களா நீங்க? அளவா இருக்கிறீங்களே! சாமி, நெசத்தே, சொல்லப்படாதுங்களா?" என வினவினான்.

புது மனிதன்:—"அப்பா, உன்னிடம் சொல்லாதிருப்பேனோ; எனக்கு வேறு யார்? எல்லாம் சொல்லிவிடுகின்றேன்? நீங்கள் யார்?"

தலைவன்:—"ஆ! அப்படிக் கேளுங்க. உங்க பேரென்னா?"

புது மனிதன்:—"ஆபத்திலுதவிய உன்னிடம் ஒன்றும் ஒளிக்காது சொல்கின்றேன். உங்கள் தொழிலென்ன? யாதொரு

பண்டமுமில்லாதவிக் கப்பலில் ஆயுதங்களை மாத்திரம் வைத்திருக்கின்றீர்கள் !"

தலைவன்:—" அது இருக்கட்டுங்க ; என்னமோ, கப்பலோட்டுவேன், இன்னீங்களே ; எங்கே இந்தப் படவு ஓட்டுங்க !"

புது மனிதன்:—" அப்படியே, ஓட்டுகின்றேன் ; நீங்கள் எந்த நகரத்திற்குச் செல்லவேண்டும் ?"

தலைவன்:—"நாடுமில்லே, நகரமுமில்லேங்க. வேதாரண்யங் காடு தெரியுங்களா ? அதுக்கு ஓட்டுங்க, பார்ப்பம். "

எனச் சொல்லியவுடன், அப் புதுமனிதன், அகலமும் நீளமுமான கனத்த துணிகளால் தைக்கப்பட்ட பாய்களைத் தென்னையுயரம் உயர்த்தி, அக்கப்பலை யதிவிரைவாய்ச் செலுத்தினன். அக்கப்பலும், வழக்கம்போலல்லாமல் வேகமாயோடி, வேதாரண்யம் காட்டின் பக்கமாய் நின்றது. அதிலுள்ளவர்கள், " என்னடா அண்ணே நிறுத்திப்புட்டான் " எனச் சொல்லி நிமிர்ந்து பார்த்து, கப்பல் நிற்குமிடத்தைக் கண்டு மகிழ்ந்து, " அடே, அதுக்குள்ளே இங்கே வந்தூட்டுது ! இவன் என்ன மனிசனு ! பொழுதுசாயவல்லா வர்ர வழக்கம். இப்பொ, வெடிஞ்சு சாமத்துக்குள்ளே வந்தூட்டுதே !" என, அம்மனிதனைப் புகழ்ந்து பேசிக்கொண்டே எல்லோருமிறங்கினர்கள்.

கடலோரமாய் முளைத்துப் பல கிளைகளோடு பருத்துயர்ந்ததோர் ஆலமரம் அங்கிருந்தது. அம்மரத்தினுடைய விலைகளின் பச்சைநிறத்தைச் சிவப்பாக்கி ஒளிவீசுகின்ற அளவிறந்த பழங்களால், ஈசனது அந்தி வண்ணத்தை ஒருவாறு ஊகிக்கக்கூடும். இடையிடையே உயரப் பரவியிருக்கிற சிறிய கிளைகளை நோக்குங்கால், அவை அம்பிகாபதியின் பாம்பணிகளை ஒத்திருந்தன. கிளைகளிலிருந்து கீழே தொங்குகிற பல விழுதுகளைப் பார்த்தவுடன் சிவனது விரிந்த ஜடையின் நினைவு வாராமற் போகாது. அவ்வாலமரத்தினின்று ஒழுகி, வரிவரியாய்ப் படிந்திருக்கிற வெளுத்த பாலை, நீலகண்டர் பூசியிருக்கும் திருநீற்றோடு உவமிப்பதில் தடையென்ன ? பார்வதீபதியை, " தஸ்கராணும் பதயே நமோ

நம:" என வேதம் வணங்கி யழைக்கின்றதல்லவா? இக்காரணம் பற்றியே, அங்கு கூடியிருந்த தஸ்கரர்களுக்கு இடமாயிருக்கிற அவ்வால மரமும், பழங்களால் அந்தி வண்ணத்தையும், கிளைகளாற் பாம்பணிகளையும், விழுதுகளால் ஜடாபாரத்தையும், பாலால் விபூதியையுங் கொண்டதுபோற் காணப்பட்டு, ஒருவாறு சிவனையொத்திருந்தது.

இவ்வாறு ஓங்கி வளர்ந்திருந்த மரத்தினடியில், பல பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அப்பெட்டிகளில், விலையுயர்ந்த உடைகளும், ரத்நாபரணங்களும், உணவுக்குத் தேவையான பற்பல பண்டங்களும் நிறைந்திருந்தன. வேறு பல திருடர்கள் இங்கு கூடியிருந்தார்கள். அவர்களிற் சிலர் சமையல் செய்துகொண்டிருந்தனர். பலர், அம்மரத்தின் வேர்களைத் தலைக்கணைகளாக வைத்துக்கொண்டு படுத்துறங்கினார்கள்.

புதுமனிதனோடு கூடிய அக்கள்வர்கள் அம்மரத்தினடியிலுட்கார்ந்த பிறகு, அவர்களுள் பற்பல தொழிலாளிகள் இருந்ததால், தலைவனது கட்டளைக்கிணங்கிய வொருவன், அப்புதுமனிதனுக்கு க்ஷவரஞ் செய்து நீண்டு வளர்ந்திருந்த நகங்களையுங் கத்தரித்தான். பிறகு, அங்கிருந்த தெளிந்த தடாகத்தில் மூழ்கி, நூதனமான பட்டாடைகளணிந்து, விளங்கின அப்புதுமனிதனது அழகையும், பெருந்தன்மையான பார்வையையும் நோக்கிய தலைவன், "இப்பவல்லா இவன் மனிசன்! உங்கபேர் என்னங்க?" என வினவினான்.

புதுமனிதன்:—"என்னருமைத் தோழா, என் பெயர் அபிராமன். உன் பெயர் யாது?"

தலைவன்:—"எம்பேரு, மாமுண்டி வன்னிமுண்டாங்க. என்னமோ, காட்டுமனிசன் கணக்கா இருந்தீங்களே! உங்க கதெயெச் சொல்லப்படாதுங்களா?"

அபிராமன்:—"அப்பா, மாமுண்டி வன்னிமுண்டா, உன்னிடம் எல்லாவற்றையுஞ் சொல்கின்றேன். அவஸரப்படாதே." எனச் சொல்லியதால் அவனது நோக்கத்தை முகக்குறிப்பா

லறிந்த தலைவன், உடனே எழுந்து, அம்மரத்தினின்று பூமியிற் புதைபட்டிருக்கிற பல விழுதுகளைத் தூண்களாகவும், மழைத்துளியும், சூர்யகிரணமும் நுழையாதவாறு அடர்ந்த இலைகளைக் கூரையாகவுங் கொண்ட மண்டபம் போன்ற ஓரிடத்திற்கு அவனை அழைத்துச் சென்றான். அவ்விடம் கயிற்றாற் செய்யப்பட்ட பல கட்டில்கள் போடப்பட்டிருந்தன. அங்கு சென்ற விருவரும், ஒரு கட்டிலில் உட்கார்ந்தார்கள். அபிராமனும், தனது விநோதமான கதையைச் சொல்லத் துவக்கி எல்லா விஷயங்களையும் சுருக்கமாய்ச் சொல்லிவந்தபொழுது, கருங்கோட்டைச் சுரங்கத்தினின்று பிணத்திற்குப் பதிலாகக் கட்டிக் கொண்டிருந்த இவனை, அங்கிருந்த ஸேவகர்கள் தூக்கிய செய்தியைக் கேட்ட தலைவன், "நிறுத்துங்க, நீங்க கொலை செய்தீங்களா! கொள்ளையடிச்சீங்களா! வேணும்பாருங்க, அந்தக் கருங்கோட்டையும், பெருந்தொரையும் சுட்டுப்புடறேன்!" என்றான்.

அபிராமன்:—"மாமுண்டி, அவ்வாறு செய்யாதே. கருங்கோட்டையிலுள்ளவர்கள், தலைவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்களை நிந்திப்பதில் பயனில்லை. நம்மைப் புண்படுத்தியவர்களை யல்லவா அடித்துப் புண்படுத்த வேண்டும்! அதனை நானே நிறைவேற்றுகின்றேன்; யோசிக்காதே. ஆனால் தலைபோனாலும் நான் இன்னானென்பது மாத்திரம் வெளிவரக்கூடாது."

மாமுண்டி:—"நான் சொல்லுவேங்களா! உங்களைப்பாத்தேனல்லா அப்பவே எனக்கு என்னுமோ ஆசை வந்தூட்டுதுங்க. கப்பல் ஓட்டினீங்களே, அப்பவே யசமாங்களாவச் சூட்டேனே! அப்புறம் என்னுங்க, உங்க சங்கதி? தூக்கினுங்க."

அபிராமன்:—"ஆதிசேஷனைக் கட்டிவைததிருந்த பையில், தானாகவே புகுந்திருந்தவென்னைத் தூக்கிய அந்த ஸேவகர்கள், கடலில் எறிந்தார்கள். நானும் நீரினடியிற் போய்விட்டேன். பிறகு, எனது கைவலுவினாலேயே கட்டிய கட்டு

களையெல்லாம் அவிழ்த்துக்கொண்டு ஜலத்தின் மேன்மட்டத்திற்கு வந்துசேர்ந்தேன். கடலின் அடியிலிருந்த பொழுது, மூச்சுவிடுவதற்குக் காற்றில்லாமையால், உப்பு நீரைக் குடித்து என்வயிறு உப்பிவிட்டதாலும், யாரேனும் என்னைக் கண்டுகொள்வாரோ என்ற பயத்தாலும், நீந்துவதற்கே முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த எனது முகத்தில் அலைகள் படீர் படீரென்று அறைந்தன! பிறகு, ஒருபாறை எனது கையில் தட்டுப்பட்டதால், அதனைப்பற்றிக் கொண்டு உங்கள் கப்பலைக் காண்கிறவரையிலு மிருந்தேன்'' எனச் சொல்லிமுடித்தான். இவ்வாறாகச் சொல்லிய அபிராமனுடைய கதையைக் கேட்டவுடன், மாமுண்டி வன்னிமுண்டான் வெளியே வந்து, தனது பரிவாரங்களை நோக்கி, "அடே பயங்களா, இன்னிக்கி முதல் இவுருதான் நமக்கெல்லாம் யசமாங்க, தெரியுமா! மரியாத்யா இருங்கடா.'' எனக் கட்டளையிட்டான்.

அபிராமனுடைய உபதேசங்களையும், நன்னடத்தையைப் போதிக்கக் கூடிய பற்பல சரித்ரங்களையுங் கேட்ட அக்கள்வர் யாவரும், அவனுக்கு உரிய நண்பரானார்கள்.

## அத்யாயம் ௰௨.

### நிதி நிக்ஷேபம்.

மிகப்புராதன காலத்தில் நாமிருக்கும் இந்த நாட்டின் தெற்கே விஸ்தாரமான ஒரு நாடு இருந்தது. அந்நாடு பெரும் பரப்புள்ளதாயும், நமது தமிழ்ப்பாஷையை வளர்த்த, தலை இடைச் சங்கங்கள் கூடியவிடமாயும் விளங்கிற்று. தற்காலத்திலும், யாழ்ப்பாணத்தார் பேசுந் தமிழ், வேறு பல பாஷைகளோடு கலவாத செந்தமிழாயிருத்தல், இப்பாஷை அங்கு வளர்ந்ததற்குப் போது

மான ஸாக்ஷியாயிருக்கின்றது—ராமபக்தியை மேலாகக்கொண்டு ஸஹோதரத்ரோஹம் செய்த விபீஷணருக்குப் பட்டஞ் சூட்டுவித்த லங்காபுரி கடலில் ஆழ்ந்துபோயிற்று—எனப் பெரியோர் சொல்வதால், அந்நாட்டின் பெரும்பாகம் கடலில் மூழ்கியிருத்தல் வேண்டும். மீதியாயிருக்குமிடத்தையே லங்கைத்தீவு என நாம் சொல்லிவருகின்றோம்.

இந்த லங்கையின் வடகோடியில் யாழ்ப்பாணம் முதலிய பல தீவுகள் காணப்படுகின்றன. இத்தீவுகளினிடையில், பொன்மண்டலம், என ஓர் சிறிய தீவு இருந்தது. இத்தீவு, தென்னை, பலா முதலிய பல மரங்களால் நிறைந்திருந்தும், அப்புராதன காலத்தில் மனித ஸஞ்சாரமற்ற அடர்ந்த காடாயிருந்தது.

ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு, ஓர் படகு அத்தீவின் கரையோரமாய் நிற்க, அதிலிருந்து அழகிய ஒரு புருஷனும், தடித்தமயிரும், கறுத்தமேனியும், கனத்த மீசையுங் கொண்டு, பார்ப்பவர்க்குப் பயத்தை யுண்டாக்கும் வேறு ஒருவனும் இறங்கி, அங்கிருந்த ஒரு மாமரத்தினடியிலுட்கார்ந்தார்கள். இவ்விருவரில் அழகாயிருப்பவன் நமதபிராமன். குண்டனாயிருப்பவன் மாமுண்டி வன்னிமுண்டான். பழுத்த பழங்களைத் தின்று களித்துக் கானஞ் செய்கிற பறவைக் கூட்டங்களும், தாவித்தாவி விளையாடுகிற குரங்குகளும் நிறைந்திருந்த கிளைகளையுடைய அம்மரத்தினடியில், மெத்தை விரித்தது போல இலைகள் உதிர்ந்து கிடந்தன. இங்ஙனமுட்கார்ந்த அபிராமன், "நண்பா, உன்னைச் சந்தித்து நேசித்தபிறகு, யாது காரணம் பற்றியோ நாளுக்கு நாள் அளவிறந்த நட்பு, எனக்கு உன்னிடம் உண்டாயது. நீதான் என் உண்மையான ஸஹோதரன்! இவ்விடம் நாம் வந்திருப்பதற்குக் காரணமாயுள்ள ஒரு விசேஷத்தைக் காட்டுகின்றேன். அவ்விஷயத்தை வெளிவிடாமல் என் னுயிர்த்தோழனாய் நீ இருந்து வர வேண்டும்." என, மாமுண்டியை நோக்கிச் சொன்னான். இதனைக்கேட்ட வன்னிமுண்டான், "இப்படிச் சொல்லலாங்களா, நீங்க! உங்களைத்தான் யசமாங்களா வச்சூட்டேனே! மறவு, நீங்க காலாலே சொல்றதேதலேலே செய்வேங்க-நாயே, பூச், இன்னு, ஓடி வந்துடுவேங்க! சும்மா சொல்லுங்க." என்

றான். மாமுண்டி சொல்லியதைச் செவியுற்றுக் களிப்புற்றவபிராமன், அக்கள்வர் தலைவனுடன் அத்தீவின் மத்தியிற் சென்றான். பிறகு, அங்கோரிடத்தில் அடர்ந்திருந்த முட்செடிகளைக் களைத்து, இருவருமாக மண்வெட்டிகளால் வெட்டினார்கள். "டும், டும்" என்றோர் சத்தங்கேட்டது. இவர்கள் ஆழமாக வெட்டியபொழுது, சதுரமான ஒரு பெருங்கல் தென்பட்டது. இதனைக்கண்ட மாமுண்டி, "என்னமோ கட், கட் இன்னுதே!" என, அபிராமனை வினவினான்.

அபிராமன்:—"இவ்விடத்தில் அளவிடக்கூடாத பெரும் புதையல் இருக்கின்றது. அதன் உதவியாலல்லவோ நமதெண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்!"

மாமுண்டி:—"யேப்பா! புதையலா இருக்குது! பூதமல்லா காத்திருக்கும்!"

அபிராமன்:—"நீ அஞ்சுகிறாயா? பயந்தவர்களுக்கல்லவோ பூதமும் பிசாசும்! மாதர்கள், இரவில் தனியாயிருக்க நேர்ந்தால், மிகவும் அஞ்சுவார்கள். அப்பயத்திற்கு அனுகுணமாய் அவர்களுடைய நெற்றிக்கு மேலுள்ள ரோமங்களிலொன்று கண்களுக்கு நேராகத் தொங்கிக் கொண்டிருந்தால், அதனைக் கறுத்த பேயென நினைத்து நடு நடுங்கி ஓடுவார்கள்—பிறகு, பேயோட்டும் பூசாரிகளுக்குக் கொண்டாட்டந்தான்! இவ்விதப் பேய்கள் இல்லையென நான் சொல்லவில்லை. அஞ்சியவர்களையும், கோழை மனதுடையவர்களையும் அவை பிடிக்குமேயல்லாமல், மனோதிடமுள்ளவர்களையும், கடவுளின் அடியார்களையும் ஒரு காலத்திலுமணுகா. கருங்கோட்டையிலிருந்த ஸேவகர்கள், என்னைக் கடலில் எறிந்தார்களென்பது உனக்குத் தெரியும். ஜைநர்களால் கல்லோடு கட்டப்பட்டுக் கடலில் ஆழ்ந்த சிவபக்த சிகாமணியாகிய திருநாவுக்கரசு நாயனார்,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே,

என்று தொடங்குகிற தேவாரத் திருப்பதிகத்தைப் பாடிக் கரையேறிய செய்தி அப்பொழுது என் நினைவிற்கு வந்தது. அத் தேவாரத்தையே யானும் பாடியதால், இப்பொழுது ஜீவதசையி லிருக்கின்றேன். எத்தகைய ஸங்கடம் நேர்ந்தாலும் அதனை விலக்கி யருள்தரவல்ல தேவாரங்களிற் பல எனக்குத் தெரியும். நீ யாதொன்றுக்கும அஞ்சவேண்டாம். இப்பெருங்கல்லைப் பெயர்த்துப் பார்ப்போமா ?''

எனச் சொல்லிக்கொண்டு, இருவருமாகக் கல்லைப் புரட்டிக் கீழே பார்த்தபொழுது சில படிகள் தென்பட்டன. முதலில் அபிராமனும், பிறகு மாமுண்டியுமாகக் கீழிறங்கினார்கள். அப் படிகள் விசாலமான ஒரு அறையிற் கொண்டு சேர்த்தன. அவ் விடம் அழகிய சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. களைப் படைந்த வபிராமன் உட்கார்ந்து நிமிர்ந்துபார்த்தபொழுது ஓர் அழகிய உருவமும 'ஸ்ரீமந்தன், கலியுகாதி மூவாயிரத்து நாற் றைம்பது' என்ற வார்த்தைகளும் ஒரு பெரிய படத்தில் எழுதி யிருக்கக்கண்டு, ஆநந்தித்து, அப்படத்தை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். இதனைக் கண்ட தானும் நமஸ்கரித்த மாமுண்டி, "இவுங்கதோசெச்சாமியாருங்களா ?'' என, நமதபிராமனை வினவினான்.

அபிராமன்:—"இவர் யாதொரு தோஷமும் செய்தவரல்லர் ! இவ் விடமிருக்கும் புதையலை நமக்காக வைத்துச் சென்ற உத்தம புருஷர் !''

மாமுண்டி:—"தோஸம் இல்லேயுங்க ! நீங்க விளுந்து விளுந்து கும்புடுறீங்க ; அப்படிச் சொல்லுவேங்களா ? இவுங்க எதிக்கே, அதோ பாருங்கதோசயே ! இதுதான் புதையலுங்களா ?''

அபிராமன்:—"ஹா ஹா ! மிகுந்த புத்திசாலி ! இம்மஹானுக்கு எதிரிலிருப்பது வட்டமான ஒரு மேஜை !''

எனச்சொல்லி, அவ்வறையின் ஓர் மூலையிலிருந்த மற்றொரு கல்லை இருவருமாகப் பெயர்த்தபொழுது, மறுபடியும் படிகள்

காணப்பட்டதால், அப்படிகளின் வழியே முன்போல இறங்கினார்கள். அங்கு, வேறொரு அறையும் அவ்வறை முழுதும் தங்க நாணயங்களுங் கண்டார்கள். இப்பெரு நிதியைக் கண்ணுற்றவன்னிமுண்டான், "அடே எஞ்சாமியடா! இத்தானே காசு சம்பாரிச்சவங்க அந்தப்படத்திலே இருந்தாங்களே அவுங்களா?" என, அபிராமனைக் கேட்டான். "ஆமாம், இதனைக் கண்டு ஆச்சர்யம் அடைகின்றாயே! இன்னும் கீழே எட்டு அறைகளும், விதம்விதமான ரத்நங்களும், ஆபரணங்களுமிருக்கின்றன!" என, விடையளித்த வபிராமனும், மாமுண்டியும் ஒன்றன்கீழொன்றாயிருந்த எல்லா அறைகளையுந் திறந்து, விலைமதிக்க வொண்ணுப் பொருள்களைக் கண்டாநந்தித்தார்கள். அவ்வறைகளெல்லாவற்றிலும் குளிர்ந்த காற்றும், நிறைந்த ஒளியும் வீசியதைக்கண்டயார்தான் வியப்படையார்? இஃது, புராதனர்களாற் செய்யப்பட்டு இக்காலத்தவர் களாலியலாத ஓர் அற்புதமான வேலை!

பிறகு, அவ்விருவரும், எல்லாவற்றிற்கும் மேலேயிருந்த அறையை மாத்திரம் முன்னிருந்தது போலவே மூடிவிட்டு, வேதாரண்யங் காட்டை யடைந்தார்கள். பொன்மண்டலம் தீவிலிருந்து திரும்பும்பொழுது கொண்டுவந்த தங்க நாணயங்களினுதவியால், வீடுகட்டுந் தொழிலில் மிகத் தேர்ந்த பல சிற்பிகளையழைத்துக் கொண்டும், நூதன வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கம்பீரமாய்க் காணப்படும் கள்வர்களோடும் நமது கதாநாயகன், மறுபடியும் அத்தீவையடைந்தான். இப்பொழுது, பொன்மண்டலத்தின் பெருமையை என்னென்று சொல்வோம்! காடுகளழிக்கப்பட்டு, வானத்தைத் தொடுகிற மதில்களோடும், விசாலமான மாடிவீடுகளோடும், அகலமும் நீளமுமான பல வீதிகளோடும், அவ்வீதிகளின் மத்தியில் அலங்காரமான அரண்மனையோடும் விளங்கிற்று.

அதனைக்கண்ட எல்லோரும், கடலில் மூழ்கிய லங்காபுரி மறுபடியுங்கிளம்பியதோ!—எனநினைக்கும் வண்ணம், அவ்வளவு மேன்மைபெற்று, பொன்மண்டலம் என்ற பெயருக்கேற்க, அத்தீவு பொன்மண்டலமாகவே மாறிற்று!

அபிராமனும், அவனுக்குட்பட்டிருந்த பரிவாரங்களும் அத்தீவிலேயே தங்கினார்கள். பலகப்பல்களிலிருந்து பற்பல பண்டங்கள் இங்கு இறங்குமதியாயின. அத்தீவிற்கிடைக்காதது உலகிலில்லையெனச் சொல்லும்படி நவநிதிகளும் தான்யங்களும் அங்கு நிறைந்திருந்தன. நமது கதாநாயகன், பொன்மண்டல மன்னனாய் விளங்கினான்! பணமுள்ளவர்களால் ஆகாதகார்ய முண்டோ?

## அத்யாயம் கரு

## ஆராய்ச்சி.

சாராயங்குடிப்பதிற் களைப்படையாத குணசீலனை யிப்புத்தகம் படிப்பவர் மறந்திருக்கமாட்டார்கள். மனைவியை யிழந்தும், தனக்குச்சொந்தமான பல மனைகளை யிழந்தும், மக்கட்பேறில்லாமலும் வறுமையிற் சிக்கிய இவன், கஷ்டநிஷ்டூரங்களுக்குள்ளானான். பகரவொண்ணாப்பரிதாபநிலையிலிருந்த இக்குணசீலன், பெருந்துறையின் ஓர் மூலையில் சிறிய பழக்கடையொன்றை வைத்துத்தனது வயிற்றை நிரப்பிவந்தான். ஓர் நாள் பகல் பத்துமணிக்கு இக்கடையின் முன்புறம் போடப்பட்டிருந்த பலகையில் ஒரு பரதேசியார் வந்துட்கார்ந்தார்.

ஒரு பைசாவுக்கேனும் வகையில்லாத ஏழைகள் பலர் இருக்கின்றனர். சோற்றுக்கு வழியின்றிச் செத்தவர் அபூர்வமல்லவா? ஒருவனால் வளர்க்கப்பட்ட மாமரம் கசப்புள்ளபழங்களைத் தருவதானாலும், அம்மரத்தை வெட்டிச்சாய்க்க அவனது மனந்துணியுமோ? அதுபோல், மனிதனைப்படைத்த கடவுள், அம்மானிடன் எத்தகைய தீச்செயல்களைச் செய்தவனாயிருப்பினும், உணவளிக்கும் ஒரு விஷயத்தில் கைவிடாரென்பது திண்ணம்.

சாமியார்வேஷம்பூண்டு வயிற்றை வளர்க்கும் குடும்பிகள் நமது நாட்டிற் பலர் உளர். காவித்துணிகளைக்கட்டித் துறவிகளாகக் காணப்படுகிற இவர்களில் ஒவ்வொருவருக்கும் இரண்டு பெண்சாதிகளிருப்பார்கள். 'ஸாது ஸாது வென்ற ஸந்யாசிக்குத் தடிபோற் பிள்ளைகள் ஏழெட்டு' என்ற வசனத்திற்கொப்ப, இவர்களுக்கு ஸந்தானம் நிறைந்திருக்கும். ஒரு தனவான் வண்டியிலேறிச் செல்லுங்கால் இத்தகையவொரு சாமியார், நொண்டிபோற் பாசாங்கு செய்துகொண்டு வண்டிக்குப்பின் தொடர்வார். வண்டியிலுள்ளவர் ஒருகாசாவது கொடுத்துவிடவேண்டும். இல்லாவிடில், "ஐயா, முடவன், ஐயா நொண்டி, சாமீதர்மம்" எனக்கத்திக்கொண்டே ஓடிவருவார். இம்முடச்சாமியாரின் ஓட்டத்தைப்பிடிக்க யாராலியலும்! இவ்வாறு வயிற்றை நிரப்பிக் கவலையற்று, இவர்கள் தூங்கும்சாவடியை, சோம்பேறிச்சாவடியென்று எல்லோருஞ் சொல்வார்கள். இம்மாதிரியான மானிடரில்லாவிடின், இச் சோம்பேறித்தனம் யாரிடம் தங்கிப் பிழைக்கும்!

பலகையிலுட்கார்ந்த சாமியாரைக் கண்ட குணசீலன், ஒரு வாழைப்பழத்தைக் கொடுத்துப், "போய் வாரும்" என்றான். உடனே, அச் சாமியார், பழத்தைக் கீழே வைத்து, "ஐயா, பழம் வாங்கவந்த பிச்சைக்காரச் சாமியானல்ல! தனவந்தர்களிடம் பிச்சை வாங்கி, ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பவன். இந்தா பிடியும்." எனச் சொல்லி, குணசீலன் கையில் நூறு பவுன் நாணயங்களைக் கொடுத்தார். மிகுந்த மகிழ்ச்சியோடும் ஆச்சர்யத்தோடும் அவைகளைப் பெற்றுக் கொண்ட குணசீலன், "சாமீ சாமீ" எனச் சொல்லிக்கொண்டு விழுந்து விழுந்து நமஸ்கரித்தான். சாமியாரும், "சிவ சிவா, அருணாசலம்" என ஆசீர்வதித்து, ஐயா, யான் செய்யுந் தர்மத்திற்கு உதவியாய்ப் பொருள் தரத்தக்க கொடையாளிகள் இவ்வூரில் இருக்கின்றார்களா?" என வினவினார். இதனைக் கேட்ட குணசீலன், "சாமி, ராஜபூஜிதரு, இன்னு இந்த நாடு தலைவரு ரொம்ப பணக்காரருங்க. ராவ்பவதூரு வீரன் செட்டியாரு வட்டிக்கடை வச்சிருக்காரு. இவரு பன்னெண்டு லச்சம பவுனுக்கு முதலாளிங்க! தெக்கே எங்கே

யோர் சமீந்தாரு கிட்டே உத்யோகம் பண்ணி, கூடை கூடையாய்ச் சம்பாரிச்சு இருக்கிறாரு! இவருதான்! திவான் பகதூரு குலசேகரரு! பின்னாடி சொன்னேன் பாருங்க அவுங்க ரண்டுபேரும் எனக்குப் பளக்கங்க! இப்போ, என்னே சீமிந்து பாக்கறது இல்லேங்க! சாமிக்குக் கொடுப்பாங்களோ என்னுமோ, உதயமார்த்தாண்டரு இன்னு ஒருத்தரு, ஐயோ! பாவங்க ஏளயாப் போயிட்டாரு நல்ல கருமங்க" என்றான். பிறகு, சாமியார், "சம்போ, மஹாதேவா, ஷண்முகம், சரவணபவா சிவ சிவா, அருணாசலம்" எனச் சொல்லிக் கொண்டே எழுந்து போய்விட்டார்.

---

## அத்யாயம் ௰௪.

### நன்றி மறவாமை.

"குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்."

என, அதிவீரராமபாண்டியன் சொல்லிய மொழி வீண்போமா? மூன்று தலைமுறைகள் தனவந்தராயிருந்தவர் அபூர்வமல்லவா? அவ்வாறே, பல தலைமுறைகள் வறுமையால் வாடுபவருமில்லை. ஸம்ஸாரத்திலுள்ள ஒவ்வொருவரும், செய்யுந்தொழில்களில் பாப புண்யங்கள் கலந்தேயிருக்கின்றன. அவ்விதச் செயல்களின் பயனை ஒவ்வொருவரும் அநுபவித்தாக வேண்டுமல்லவா?

நமது சரித்ரத்திற் குறிப்பிட்டிருக்கிற உதயமார்த்தாண்டன் செட்டியார் புண்யகர்மங்களின் பலனை யநுபவிப்பதில் முதன்மை பெற்றோங்கினர். காலவித்யாஸத்தாலும், முன்பிறவிகளிற் செய்த தீச்செயல்களின்முறை திரும்பிவிட்டதாலும், வ்யாபாரத்தில் நஷ்டமடைந்தும், மாமன்மகனான வீரனால் மோசஞ் செய்யப்பட்டும், இவர் கஷ்டப்பட நேர்ந்தது. பகலென்றும், இரவென்றும் பாராமல் இவரைக் கடன்காரர்கள் மொய்த்துக் கொண்டார்கள். நாண

.யங் கெட்டு, நாணமுற்று, மனதுடைந்து, வெளியிற்புறப்படவும் வெட்கிப் பெருங் கடனாளியாயிருந்த இச்செட்டியார், விலையுயர்ந்த பண்டங்கள் யாவும் விற்கப்பட்டுக் காலியாயிருந்த தனது மாளிகையின் மாடியிலுட்கார்ந்து, "ஜகதீசா மங்கையோர் பங்கா, மால்போற்றும்பதா, குணநிதீசா என்னைத் துன்புறுத்தலாமோ! முருகையா, பன்னிருகையா, எனக்கிரங்கையா!' எனக் கவலையுற்றிருந்தார். அப்பொழுது இரண்டு குதிரைகள் கட்டி, அற்புதமான வேலைப்பாடுள்ள ஓர் விநோதமான வண்டி அதிவிரைவாய் அத்தெருவின் வழியாய்ச் சென்றது. அவ்வண்டியிலிருந்த ராஜலக்ஷணங்கள் பொருந்திய ஓராடவனைக்கண்ட எல்லோரும், 'இவன் கந்தர்வனோ!' என வியந்து பேசிக்கொண்டிருந்தபொழுது, அஃது, உதயமார்த்தாண்டன் செட்டியாரின் வீட்டு வாயிலிற் போய்நின்றது. அத்தெருவாரனைவரும் அங்குவந்து கூடி, அப்புருஷோத்தமனைக் கண்கொட்டாமற் பார்த்திருந்தார்கள்.

காமனுக்கு ஒப்பான கமநீய காத்ரத்தைக்கொண்ட அச்சனவான், வண்டி விட்டிறங்கி, அவ்வீட்டின் மாடியிலேறினான். அங்கிருந்த செட்டியார் ஓடத் தலைப்பட்டார். "செட்டியாரே, என் பயப்படுகின்றீர்? யான் கடன்காரனல்ல. உமது உத்தம குணங்களையும், நாணயத்தையுங் கேள்வியுற்று தற்காலம் கடனாளியாயிருக்கிற தங்களுக்கு உதவிபுரிந்து, வர்த்தகத்தை நடத்தும்படி செய்து, யானும் தக்க லாபம் அடையலாம் என வந்தவன். ஓட வேண்டாம், உட்காரும்" என, அங்கு நுழைந்த ஆடவன் சொல்லியதால், செட்டியார் உட்கார்ந்தார். அவனும் பக்கத்திலுட்கார்ந்து, "உமக்கு, எவ்வளவு கடனிருக்கிறது?" என வினவினான். "ஸ்வாமி, எனக்கு ஐம்பது லக்ஷம் புவுன் கடனிருக்கிறது. இப்பெருந் தொகையை யாரிடம் எதிர்பார்க்கக் கூடும்?" என்று செட்டியார் மொழிந்தார். இதனைக் கேட்டவுடன் "செட்டியாரே, இவ்வளவுதானா! பெரிய வணிகர்களுக்கு இஃது பெருங்கடனா! நான் கொடுக்கிறேன்; எப்பொழுது திரும்பக் கொடுப்பீர்கள்?" என, அம்மனிதன் வினவினான். "ஐயா, எனது கப்பலெல்லாம் மூழ்கியதால், இவ்வளவு நஷ்டம் உண்டாயிற்று! ஆனால், சிலீமுகம் என்ற கப்பலின் விஷயம் இன்னும் வெளிப்படவில்லை. கட

வுளின் கருணையால் அக்கப்பல் வாராவிட்டாலும் தங்களுடைய உதவியால் ஐம்பது லக்ஷம் பவுன் நாணயஞ் செலுத்துகிற என க்கு மறுபடியுங் கடன் வாங்குவது கஷ்டமாயிராது. ஆகலின் எப் பாடுபட்டாவது, ஆறுமாதங்களில் அத்தொகையைத் தருகி றேன்.” என, உதயமார்த்தாண்டர் விடையளித்தார்.

நமது நாட்டில் உள்ளோர் பெரும்பாலும் கடனாளியாகவே யிருக்கின்றனர். இவர்கள், கடன்காரர்களைத் தவணை கேட்பதை யும், அக்கெடுவிற் பணத்தைக் கொடுக்கமாட்டாமல் விழிப்பதை யுங் கண்டால், மிகப் பரிதாபமாயிருக்கும்! கடன் வாங்கும் பொழுது நகைகளை விற்றாவது, நிலங்களை சாசனஞ் செய்தாவது நாணயஞ் செலுத்தலாமென இவர்கள் நம்புகிறார்கள். அவ்வாறு நகைகளை விற்கத் தலைப்படின் அவைகளுக் குரிமை கொண்ட பெண்சாதி தலையிலடித்துக்கொண்டு கலகஞ் செய்கிறாள். பூமியை விற்க யத்தனித்தாலோ, விற்பவனது அவஸரத்தை யறிந்த அய லார், குறைந்த விலைக்குத் தட்டிக்கொண்டு போக முயல்கிறார்கள். ஆகவே கடனைக்கொடுக்க வியலாமல் அக்குடும்பம் கெட்டுப்போ கின்றது. இவ்வித அனுபவத்தை யறிந்திருந்தும், ஏன் ஐயா, கடன் வாங்கவேண்டும்? நூறு காணிகளுக்குச் சொந்தக்காரனை யொருவன், தன் பெண்ணை விவாஹஞ் செய்துகொடுக்க யத் தனித்தால், பதினாயிரஞ் செலவாகின்றது! இத்தொகையின் பெரும்பாகம் வரதக்ஷிணை.

நிலக்காரனை யொருவனுக்கு உழவுச் செலவுகளும், ஸர்க் கார் வரியும் போக மிகுந்திருக்கக்கூடியது மிகக்கொஞ்சம். நிலம் விளையாவிட்டால், சாப்பாட்டுக்கும் வகையின்றி, கானா, வேனா, மோனா, மூனா, ருவன்னா, சீனா, தேயன்னா தேவலிங்கனா செட்டி யார் வட்டிக் கடையில் மாஸம் நூற்றுக்கு மூன்று ரூபாய் வீதம் வட்டிக்குக் கடன் வாங்குகின்றான். இவ்வேளைக் கேற்க விவாஹ மும் ஏற்பட்டுவிட்டால், இவன் யாது செய்வான்? பெருங் குடு ம்பங்கள் கடனிற் குலைந்து போவதற்கு முதற்காரணம் இவ்வர தக்ஷிணை!

வரதக்ஷிணையில்லாத விவாஹமில்லை! விவாஹம் என்ற பந் தத்திற்கு வரதக்ஷிணை யெனப் பொருள்கூறவேண்டும்! கல்யாண

காரியத்திற்கென்று பிள்ளைவீட்டுக்காரர்கள் ஒரு பைசாவேனுஞ் செலவிடுவதில்லை யாதலின், கல்யாணம் பெண்ணுக்கு மாத்திரம் நடந்தேறுகின்றது! பெண்ணுக்குத் தகப்பன், பணச் செலவு செய்து வறியனாகின்றானாதலின், விவாக மகிழ்ச்சிக்கு இடமில்லாற்போகின்றது! பணத்தையும் பெண்ணையும் அடைந்த மகிழ்ச்சியால், பிள்ளை வீட்டுக்காரர் பெண்வீட்டுக்காரரை வேட்டையாடுகின்றார்கள். ஆனதுபற்றி, பெரும் பணக்காரரும் பெண்களை வெறுக்கின்றனர். ஐயோ! இவ்வரதக்ஷணைக்கு இன்னும் இருபது வயதுகூட ஆகவில்லை! இதற்குள் இப்பாடுபடுத்துகிற இஃது, தக்கவய தடைந்தால் எப்பாடுபடுத்துமோ! இவ்வரதக்ஷணை அற்பாயுளாய்ப் போகக்கடவது, என நாமெல்லோரும் சபித்துவிடுவோமாக.

ஆறுமாஸங்களிற் கொடுத்து விடுவதாகச் சொன்ன செட்டியாரின் உறுதிமொழிக் கிணங்கி, அவ்வைம்பது லக்ஷத்தையும் எதிரில் வைத்து, "செட்டியாரே இதோ உமக்குத் தேவையான பணம். கவலைப்படவேண்டாம். வியாபாரத்தைச் சீராய் நடத்தும். ஆவணிமாஸம் 24உ காலை எட்டு மணிக்கு இவ்விடம் வருகின்றேன்." என அம்மனிதன் மொழிந்தான். மனமகிழ்ந்த உதயமார்த்தாண்டர், "மஹாப்ரபு, கப்பல்கள் மூழ்கிய நஷ்டத்தாற் கஷ்டமடைந்த என்னை நம்பி, இப்பெருந் தொகையைக் கொடுத்தீர்களே! யான் யாது கைம்மாறு செய்யப்போகிறேன்? தங்களது பெயர் முதலியவைகளைத் தயவு செய்து சொல்லுங்கள்." என்றார். உடனே அங்கிருந்த ஆடவன், "ஐயா, இஃது ஓர் உபகாரமா? வட்டியும் முதலுமாகப் பெற்றுக்கொள்ளப்போகிற எனக்கு லாபமல்லவா! யான் இருப்பது பம்பாய் நகரம். என் பெயர், பாலராம ஜோஸி. என்னிடமுள்ள பணத்தை வட்டிக்கு விட்டுக் காலக்ஷேபஞ் செய்வது என் தொழில்" எனச் சொல்லியதைக் கேட்ட செட்டியார்,

கலிங்க தேசத்தைச் சார்ந்த பெருந்துறை நகரத்திலிருக்கும் உதயமார்த்தாண்டன் செட்டியாராகிய யான், பம்பாய் நகரத்துப் பாலராமஜோஸி யென்ற தங்களுக்கு, பவ வருஷம் மாசிமாஸம் 24உ எழுதிக்கொடுத்த பத்திரம்:—

மேற்குறித்த தேதியாகிய இன்று தங்களிடம் யான் பெற்றுக்கொண்டது ஐம்பது லக்ஷம் பவுன். இத்தொகையை, நூறு பவுன்களுக்கு அரைப்பவுன் வீதம் மாஸாந்த வட்டியுடன், யுவ வருஷம் ஆவணி மாஸம் 24உ காலை எட்டு மணிக்குக் கொடுப்பேனாகவும். என வியாபாரத்தின் காரணமாக இப்பணம் வாங்கப்பட்டிருப்பதால், குறித்த காலத்தில், நானாவது என் ஸந்ததியாராவது இதனைக் கொடுக்கக் கட்டுப்பட்டிருக்கின்றேம்.

இப்படிக்கு,

உதயமார்த்தாண்டன்.

என, ஓர் பத்திரம் வரைந்து, பணம் கொடுத்தவனிடங் கொடுத்தார். இப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட பாலராமன், வண்டியிலேறிச் சென்றபிறகு செட்டியாரும் கடன்காரர்களுக்குப் பணத்தைச் செலுத்திச் சிஷீமுகத்தை யெதிர்பார்த்திருந்தார்.

## அத்யாயம் ௰௫.

### மஹாமகம்.

பொன்மண்டலத்திற் புதிதாய் ஓர் அரண்மனை அமைக்கப் பட்டதென முன்னமேயே சொல்லியிருக்கின்றேம். அவ்வரண்மனையின் நடுவிலுள்ள கொலுமண்டபத்திற் போடப்பட்டிருந்த வொரு நாற்காலியில், அபிராமன் உட்கார்ந்திருந்தான். அந்நாற்காலியின் கீழ் உட்கார்ந்திருந்த வன்னிமுண்டான், "யசமாங்களே, இப்போ எங்கேயோ போனீங்களே, என்ன விஷேஷங்க?" என வினவினான்.

அபிராமன்:—"பெருந்துறைக்குப் போய் வந்தேன். நமது சத்துருக்களின் நிலைமையை யறிந்தல்லவா அவர்களுக்கு விபத்து விளைவிக்க வேண்டும்!"

மாமுண்டி:—"ஆமாங்க, உங்க ஆயி, அப்பன் சேமங்களா? ஆரோ செட்டியாரு இன்னீங்களே அவுங்களும், கொண சீலன் என்னீங்களே, அவுரும் சேமமாயிருக்காங்களா?"

அபிராமன்:—"வயது சென்ற என் தாயுந் தந்தையும் பரலோகஞ் சென்றார்கள்! இனி அதைப்பற்றி வ்யஸநிப்பதிற் பயனுண்டோ! உதயமார்த்தாண்டன் செட்டியார் மிகுந்த கடனாளியாயிருந்தார். அவருக்கு ஐம்பது லக்ஷம் பவுன் அளித்திருக்கின்றேன். சோற்றுக்கு வகையின்றித் தன்புற்ற குணசீலனுக்கு நூறு பவுன் இனாமாகக் கொடுத்தேன்."

மாமுண்டி:—"நல்ல காரியஞ் சேஞ்சீங்க! உங்க சத்துருவே எல்லாம் விசாரிச்சீங்களா? அவுங்க எல்லாம் செத்தாங்களா?"

அபிராமன்:—"குணசீலனைக் கொண்டே விசாரித்துவிட்டேன். அவர்கள் எல்லோரும்தக்க தனவந்தர்களாய் மகோந்நத பதவியிலிருக்கிறார்கள்!"

மாமுண்டி:—"அதிருககட்டுங்க, என்னமோ பளந்துணியெல்லாங் கொண்டாந்தீங்களே!"

அபிராமன்:—"பெருந்துறையில் நான் வாங்கிய பெரிய மாளிகையைப் பறித்துக்கொண்ட ராஜாங்கத்தார் ஏலம்போட்டார்கள். ஆனால், ஒருவரும் அதை ஏலத்தில் எடுக்கத் துணியவில்லை. ஏனெனில், அந்த வீட்டை வாங்கிய எனக்கும், என் பெற்றோருக்கும் அநர்த்தங்கள் விளைந்தனவாதலின், அவ்வீட்டை வாங்குவதற்கும், அதிற் குடியிருப்பதற்கும் எல்லோரும் பயந்தார்கள். வீடு காலியாயிருந்தது. பகலிற் போய்த்திறந்தால், யாரேனுங் கண்டுகொள்வாரென்று, இரவிற்போய்க் கதவைத் திறந்து, எனக்கு இனிவேண்டிய சில பண்டங்களை யெடுத்துவந்தேன். அஃதிருக்கட்டும். பன்னிரண்டு வருஷங்களுக்கோர் முறை கும்பகோணத்தில் நடந்தேறுகிற மஹாமகம், ஸமீபிக்கின்றது. அவ்வுத்ஸவத்திற்கு ஆஸேது - ஹிமாசல பர்யந்தமுள்ள எல்லாத் தேசத்தாரும் அங்கு கூடுவார்கள். அவ்விடம் சென்றால், கலிங்க நாட்டார் பலரைச் சந்திக்கலாம்."

எனச் சொல்லிமுடிந்தவுடன், மாமுண்டி, தன்பரிவாரங்க ளிற் சிலரை யழைத்து, "ஏ பசங்களா, மாம்முகம் வருது; நம்ப கூட முன்னே போனோமே! நெனவிருக்குதோ? படுத்துக்கக் கூட இடமில்லாமே ஆத்து மணல்லே படுத்துக்கிட்டோமே; நம்ப யசமாங்க போனுங்க! நீங்க உடனே போயி, ஒரு மாடி வூடு வாடவக்கி வாங்கி, பூட்டிக்கினு வந்துடுங்க" எனக் கட்டளையிட்டான். உடனே, அவர்கள், இக்கட்டளையைத் தலையில் வகித்துக் கொண்டு அதிவிரைவிற் செல்லத்தக்கவோர் கப்பலிற் சென்று, அதனை நாகப்பட்டினம் துறையில் நிறுத்திக் கும்பகோணஞ் சென்றார்கள். இவர்கள் அணிந்திருந்த உடைகளின் மேன்மையையும், தங்கத்தாற் செய்யப்பட்ட வில்லைகளில் வைர மணிகளால், "பொன்மண்டல மன்னன்" என எழுதியிருந்த பெயரையுங் கண்டு வியப்படையாதவருண்டோ! கும்பகோணம் வீதியிற் சென்ற அபிராமனுடைய வில்லைச் சேவகர்களைக்கண்டு, அவ்வூர் வைதீகர்களிற் சிலர் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

வைதீகர் என்றவுடன் நமக்கு முக்யமான ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. புத்தமதம், கிறிஸ்து மதம், மகமதீய மதம் முதலிய உலகத்திலுள்ள பற்பல மதங்களைப்போல், நூதனமாயுண்டாக்கப்படாமல், மிகப்புராதன காலத்தில் தொடங்கி, முக்காலங்களையும் அறியத்தக்க மஹா ஞானிகளால் சீர்திருத்தஞ் செய்யப்பட்டு, தற்காலம் உலகத்திலுள்ள எல்லாத் தேசத்தாராலும் மெச்சப்படுகிற நமது இந்துமதத்திற்குரிய அநுஷ்டானங்களை நடத்திவைப்பவர் வைதீகர். இந்துமத ஸித்தாந்தங்களையும், அந்த ஸித்தாந்தங்கள் எழுதப்பட்டிருக்கிற ஸம்ஸ்க்ருத பாஷையையும், இவர்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டுமல்லவா? நவக்ரஹ ஜபம் செய்யும் ஓர் வைதீகர் சுக்ரனுடைய ஸந்தோஷத்திற்காக எனப் பொருள்படுகிற, 'சுக்ரஸ்யப்ரீத்யர்த்தம்,' என்பது போலவே குருவுக்கும் "குருஸ்ய" என்று சொல்லுகிறார்! வடமொழியில் குருஸ்ய என்ற பதமேயில்லை. வியாழ பகவானுக்கு ஸந்தோஷமில்லாவிட்டாலும் இவ்வைதீகர், தக்ஷிணையைக் குறைவின்றி வாங்கிக்கொண்டு ஸந்தோஷப்படுகின்றார்!

மேலும், ஒவ்வொரு மாதமும் சுக்ல பக்ஷம் சதுர்த்தீ திதியில், சிற்சில ஸ்த்ரீகள் விநாயகரை யாவாஹநம் செய்து, ஆபரணாதி அலங்காரங்களுக்குப் பதிலாக அக்ஷதையைப் போடுவார்கள். இப்பூஜையைச் சரியாக நடத்தி வைப்பதற்கென்று ஓர் வைதீகர் எதிரிலுட்கார்ந்து, மந்திரங்களைச் சொல்லிக் கொடுப்பார். பூணூலுக்குப் பதிலாக இவ்வக்ஷதை-எனப் பொருள்படுகிற "உபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி" என வைதீகர், சொல்லிவைப்பார். பூஜை செய்கிறவளோ, "விபரீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி" என, ஸ்பஷ்டமாய்ச் சொல்லி, அக்ஷதைகளை விநாயகர் தலைமிற போடுவாள். இவள் வேண்டுகோளுக்கிணங்க விநாயகக் கடவுளும் எண்ணிறந்த விபரீதங்களை விளைவிக்கின்றார். கணவன் சாவதும், மகனும் அவனது பெண்சாதியுங் கூடிப்படாத பாடுபடுத்துவதும், இவள் செய்த சதுர்த்தீ பூஜையின் பயனாகின்றது! உபவீதம், விபரீதம் என்ற பதங்களின் பொருள் தெரிந்திருந்தாலல்லவோ வைதீகர், முன்சொல்லிய பிழையைத் திருத்தக்கூடும்! இவ்வாறு, கடவுளைப் பூஜிக்கும் மந்திரங்களிலும், ப்ரார்த்தனைகளிலும் நேர்கிற தோஷத்தாலல்லவோ நமது நாட்டில் பஞ்சமும், ப்ளேக்கும், இன்னும் சொல்லக்கூடாத பல குறைகளும் குடிகொண்டிருக்கின்றன!

கும்பகோண வீதியிற் சென்ற அபிராமனுடைய வில்லைச் சேவகர்களைக்கண்ட அவ்வூர் வைதீகர், அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். பிறகு அச்சேவகர் ஓர் அரசனது ஏவலால் வந்தவர்களெனத் தெரிந்துவிட்டதாலும், கேவலமான தங்கள் மனைகளில் அவ்வரசன் தங்கமாட்டானென்ற நிச்சய புத்தியினாலும், தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள். அச்சேவகர்கள், பற்பல வீதிகளிற் சுற்றித் திரிந்து, ஓர் பெரிய மாளிகையைக்கண்டு, அதன் சொந்தக்காரனிடம் நாள் ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் வாடகை கொடுப்பதாய் வாக்களித்து, அவ்வீட்டைப் பூட்டிவிட்டுக் கடல் துறையை யடைந்து, அவ்விடம் நிறுத்தியிருந்த கப்பலில் ஏறிப் பொன்மண்டலஞ் சென்றார்கள்.

## அத்யாயம் ௰௫.

### ஸமயஸஞ்சீவி.

உதயமார்த்தாண்டன் செட்டியார், தான் கொடுக்க வேண்டிய கடனுக்கு யாது செய்வார்? கிலீமுகமோ வந்து சேரவில்லை! இச்செட்டியாரால் வளர்க்கப்பட்டு, ராவ்பஹதூர் பட்டம்பெற்று, பெரும் பணக்காரனாயிருக்கிற கண்யமுள்ள வீரர், இவருக்கு உதவவில்லையென்றால், அந்நாட்டிற் பணங்கொடுப்பவர் யார்? அந்தோ, பாபம்! மானத்திற்கஞ்சிய உதயமார்த்தாண்டர், கடன்தொந்தரையை எவ்வளவு காலந்தான் பொறுத்திருப்பார்! யுவ வருஷம் ஆவணிமாஸம் 24உ வந்துவிட்டது. அன்று காலை மணி ஏழுக்கு, இச்செட்டியார் தன் வீட்டின் மாடியிலுள்ள ஓர் அறையின் கதவைத் தாளிட்டு உள்ளே யுட்கார்ந்து யோசிக்கின்றார்:—

"கடவுளே என்விதியிவ்வாறாயிற்று! இன்னும் ஒருமணி நேரத்தில், பாலராமஜோஸி வந்துவிடுவாரே! யான் யாது செய்வேன்? நாணயந்தப்பிய யான் வாழ்வதிற் பயனுண்டோ? என்னை நம்பி எண்ணிறந்த பணத்தைக்கொடுத்த பாலராமரை இக்கண்களாற் பார்ப்பேனோ! இதோ, என்னுயிரை மாய்த்துக் கொள்கிறேன்!" எனப் புலம்பிக்கொண்டும், கடிகார யந்திரத்தையும், வீட்டுவாயிலையும் எட்டியெட்டிப் பார்த்துக்கொண்டும், விட்டத்திற் கயிற்றைக்கட்டிச் சுருக்கிட்டுச் சாகச்சித்தமாயுமிருந்தார்.

அப்பொழுது, ஒரு ஸேவகன் அவ்வீட்டின் வாயிற்படியில் நின்று, "ஆர் உள்ளே, சங்கரஞ்செட்டியார், ஐயா, சங்கரன் செட்டியாரே," என்று அழைத்தான். உடனே, மனக்கவலையாலும், வேளாவேளைகளில் ஆகாரமின்மையாலும் இளைத்திருந்தும், அழகு குன்றாதவோர் வாலிபன், அவ்விடம் வந்து அந்தவில்லைச் சேவகன் கொடுத்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டான். பாலராமனிடம் செட்டியார் கடன் வாங்கியதும், அன்று பாலராமன் வருவதாகச் சொல்லியதும், செட்டியாரின் மகனாகிய இச்சங்

கரன் அறியான். உள்ளே சென்றவுடன், அக்கடிதத்தைப் படித்தான். "இக்கடிதங்கண்டவுடன், பெருமாள் கோவில் வடக்கு வீதி 84, நம்பர் வீட்டிற்கு நீர் வந்து சேரவேண்டியது. ஒரு நிமிஷமும் தாமஸிக்கக்கூடாது. மிகுந்த அவஸரம்!" என எழுதப்பட்டிருந்ததைக் கண்ட சங்கரன், ஓட்டமாயோடி அவ்வீட்டினுள் நுழைந்தான். உட்புறமிருந்தவொரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவொருவன், அங்ஙனம் நுழைந்த சங்கரனைக் கண்டு, "வாரும் நீர்தானே சங்கரன் செட்டியார்?" என வினவ, சங்கரன், ஆமாமென்றவுடன், "சங்கரா, தாமதிக்காதே. இந்தா, பிடி! இப்பையை உன் தந்தையின் கையிற் கொடு, ஓடு!" என்றான். மஞ்சள் நிறமுள்ள அப்பைக்குள் கனமுள்ள பண்டமொன்றுங் கட்டுப்படவில்லை. அப்படியிருந்தும், நன்றாய்க் கட்டப்பட்டு அரக்கு முத்திரை போடப்பட்டு இருந்தது. சங்கரன் அதிவேகமாயோடித் தன்வீட்டு மாடியையடைந்தான். கடிகாரயந்திரம் எட்டுமணியடித்தது. உதயமார்த்தாண்டன் செட்டியார், கயிற்றைச் சுருக்கிட்டுக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, ஐயோ! அந்யாயமாய்ப் போகின்றேன்! கடவுளே, உமக்கிது ஸம்மதமா? சரவணபவா, சாகின்றேன்! என் கண்மணீ, சங்கரா, நீயாது செய்யப்போகின்றாயோ! கஷ்டம்!" எனப்புலம்பி தொங்குந் தருணத்தில், சங்கரன் தாளிட்டகதவைப் பட பட வென்று தட்டி, அப்பா, அப்பா வென்றழைத்தான். கதவுந் திறக்கப்பட்டது. மங்களகரமான மஞ்சள் நிறமுள்ள அப்பையைச் சங்கரன் தன் தந்தையின் கையிற் கொடுத்தான். செட்டியார், அதனையவிழ்த்தபொழுது அதிலிருந்து ஒரு கடிதங்கீழே வீழ்ந்தது! அதனையெடுத்துப் பார்த்து, பாலராமஜோஸிக்குத்தான் எழுதிக்கொடுத்த பத்திரமாய் அஃதிருந்ததையும், ஐம்பது லக்ஷம் பவுன் பெற்றுக்கொண்டதாய்க் கையெழுத்து வைக்கப்பட்டிருந்ததையுங் கண்டார்! கடனுக்குப்பயந்து உயிர்விடச்சித்தமாயிருந்த இவர், அடைந்த வாநந்தத்தையும், ஆச்சர்யத்தையும் அளவிடக்கூடுமோ! மேலும், இச்செட்டியார், அப்பத்திரம் அனுப்பப்பட்டிருந்த பையைத் திருப்பித் திருப்பிப்பார்த்து, தனது மகனை சங்கரனை நோக்கி, "குழந்தாய், நமக்கேற்பட்டிருந்த ஐம்பது லக்ஷம் கடன் தொகையைப் பாலராமஜோஸி யென்ற பம்பாய் நகரத்துக் கனவானொரு

வர் எனக்குக் கொடுத்து, இப்பத்திரத்தைவாங்கிச் சென்றார், அத்தொகையைத் திருப்பிக் கொடுப்பதாக யான் வாக்களித்த தினமாகிய இன்று அதேபத்திரம் இப்பைக்குள் அனுப்பப்பட்டிருக்கின்றது! என் கண்மணி, ஏறக்குறைய இருபது வருஷங்களுக்கு முன், நம்மிடம் அபிராமன் என ஓர் மானுபிரிருந்தான். ராஜஸ்ரீதசரவனர் பிரயாதிபான அவனை த்வீபாந்தரமனுப்பிவிட்டார். அவன் தண்டிக்கப்பட்டது முதல் நமக்கு வறுமை வந்து விட்டது. பாலராமஜோஸியின் முகத்தில் அபிராமனது ஜாடைகள் தென்பட்டன. ஆனால், அபிராமன், சிறையிலிருந்து தப்புவதற்கும், அவ்வளவு பணக்காரனுவதற்கும் காரணமிராததால், பாலராமனை யபிராமனென நினைக்கும் நிச்சய புத்தி அப்பொழுது எனக்குண்டாகவேயில்லை. இப்பையைக்கண்ட எனக்கு அவன், அபிராமன்தானே என்றெண்ணுவதற்கு இடமுண்டாகின்றது. இப்பை நமக்குச் சொந்தமானது. அபிராமன், தனது சம்பளத்தை இப்பையில் ஓர் முறை வாங்கிச்சென்றான். பத்திரத்தை வாங்கிப்போன இப்பம்பாய் நகரத்தானிடம் அப்பை இருப்பதற்குக்காரணமென்ன? அப்பா, நமது கஷ்டம் விடிந்ததடா!" என்றார். இம்மொழிகளைக் கவனித்த சங்கரன், "அப்பா, யாரோ ஓர் ஸேவகன் என்னிடம் ஓர் கடிதத்தைக் கொடுத்தான். அக் கடிதத்தில் என்னைவரச் சொல்லியிருந்தவிடத்திற் புகுந்தேன். அங்கிருந்தவோராடவன், இப்பையைத் தங்களிடங் கொடுக்கச் செய்தான். ஐம்பது லக்ஷம் பவுனைத்தங்களுக்கு இனுமளித்தவன், நமக்கு உரிய ஒரு நண்பனுகத்தானிருத்தல் வேண்டும்! கடல்துறையில் மணிச்சத்தங் கேட்கின்றது! ஒருவேளை நமது சிலீமுகம் வருமோ?" என்றான்.

இதனைக்கேட்ட செட்டியார், "எட்டு வருஷங்களாயினவே அக்கப்பல் எங்குவரப்போகின்றது! எனக்குத் தோன்றவில்லை. பலமுறை கடல்துறையைப் பார்த்துச் சலித்துவிட்டேன். வேண்டுமானுல் நீ போய்வா. இப்பையைக்கொடுத்தவர் எங்கே?" எனச் செப்பினுர். சங்கரனும், பெருமாள்கோயில் வடக்குவீதி, 84 நம்பர் வீட்டிலிருக்கின்றார்." எனச்சொல்லி விரைவிற் சென்று கடல்துறையையடைந்தான். உதயமார்த்தாண்டரும்

உடனே எழுந்து, சங்கரன் சொல்லியவீட்டினுள் நுழையுமுன், அங்கிருந்தவொருவன், "வாருங்களையா, நெய்யிற்செய்த தின்பண்டங்களெல்லாம் இங்கிருக்கின்றன, உட்காருங்கள்," என்றதால், அக்கட்டிடம் ஒரு கடையென்றறிந்து, உள்ளே வேறொருவரையுங்காணாது, வீடுவந்து சேர்ந்தபொழுது, சங்கரனும், "அப்பா, நமது சிவீமுகம்," எனக்கத்திக்கொண்டு ஓடிவந்தான். மிகுந்த சந்தோஷத்துடனும், பரபரப்புடனும் இருவருமாகக் கடல்துறையையடைந்து, பார்த்துக்கொண்டிருந்தார்கள். அரைமைல் தூரத்திற்கப்பால் கப்பல் நின்றுவிட்டது. அதிலிருந்து கீழிறங்கிய வொருமனிதன், வேறொரு சிறிய படகிலேறி அதிவிரைவில் நெடுந்தூரஞ்சென்று மறைந்தான். பிறகு கரையில் நின்றிருந்த செட்டியாருஞ் சங்கரனும், படகிலேறிச் சென்று பார்த்தபொழுது, அக்கப்பலில் விலையுயர்ந்த பற்பல பண்டங்களேற்றப்பட்டிருந்ததைக் கண்டார்கள்!

செட்டியார் வாழ்வு சுபமாயிற்று! தனக்குக் கடன்கொடுத்த பாலராமஜோஸியும், பத்திரத்தைத் தன் மகனிடங் கொடுத்தனுப்பியவனும், இவருக்குச் சொந்தமான சிவீமுகமல்லாது, வேறு யாதோ ஒரு கப்பலில் அப்பெயர் எழுதிக் கரைசேர்த்தவனும், அபிராயனே, அல்லது தன் குலதெய்வமாகிய முருகக்கடவுளோ என்ற ஸந்தேகம்மாத்திரம் இவரது மனத்திற் குடிகொண்டிருந்தது.

## அத்யாயம் ௰எ.

### அழைப்பு.

நமது பரதநாட்டில் அநேகமாயெல்லோரும் அறிந்திருக்கிற கும்பகோணம் மஹாமக உத்ஸவத்தைப்பற்றி நாம் அதிகமாயெழுதவேண்டியதில்லை. அத்திருவிழா நடந்தேறியவன்று, நமதபிராமன் மஹாமகக் குளத்தில் ஸ்நானஞ்செய்து, அங்குள்ள

தேவாலயங்களைத் தரிசித்து, தனக்கென்று முன்னமேயே அமர்த்தப்பட்ட மாளிகையின் மாடியில் உட்கார்ந்து, வீதியைப்பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது, குடங்குடமாய்ப் பாலைக் கவிழ்ப்பவன்போல் முழுமதி, தனது நிலவை வீசினான். அங்கு கட்டப்பட்டிருந்த குதிரைகளையும், வண்டியையும் பார்த்துக்கொண்டு ஓர் வாலிபன் நின்றதைக் கவனித்தவோர் ஸேவகன், "அடே, நீயாரு? வண்டா நாலுநாளியா நிக்கிறே? என்னமோ வண்டியே வெறச்சுப்பாக்கறயே! தங்கத்திருவாணியே களவாடவா? என்னுடா முளிக்கிறே ஆந்தெமாதிரி!" என்றான். இம்மொழிகளைக்கேட்ட சிறுவன், "ஐயா, ஸேவகா, நான் அப்படிப்பட்ட கேவலமானவன் அல்லன்! உட்காரவும் இடமில்லாமல் தொந்தரை யடைகின்றேனாதலின், இத்திண்ணையிற் படுக்கலாமோ?" என்றான். மற்றொரு ஸேவகன், "அடேடே, சத்தாதே! மாடலே மவராசா! தெரியுமா?" எனச்சொல்லியபொழுது, வேறொரு ஸேவகன் அவ்விடம்வந்து, "ஏ பையா, உன்னே மவராசா வரச்சொன்னாரு, வா" எனச் செப்பினான். உடனே அவ்வாலிபன், "யான் ஒருகுற்றமுஞ் செய்யவில்லையே! இதேது கஷ்டம்! ஐயோ, பெருந்துறையைவிட்டு உத்பாதயோகத்திலா புறப்பட்டேன்!" என முணுமுணுத்துக்கொண்டு ஓடத்தலைப்பட்டான். உடனே, இரண்டு ஸேவகர்கள் இவனைப் பின்தொடர்ந்தோடிப் பிடித்திழுத்துப்போய் மாடியில் நுழைந்தார்கள். அங்கு நமதபிராமன் நாற்காலியிலுட்கார்ந்திருப்பதையும், பக்கத்திலொருவன் விசிறிக்கொண்டு நிற்பதையும், இப்பையன் கண்டான். அங்ஙனம் சென்றவெல்லோரும், கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு அபிராமனுக்குக் கொஞ்ச தூரத்தில் நின்றார்கள். அவர்களெல்லோரையுமனுப்பிய பிறகு, அவ்வாலிபனை அபிராமன் தன்னண்டையழைத்தான். பையனும் தேம்பித்தேம்பியழுதுகொண்டு பக்கத்தில் வந்துநின்றான். அவனது அச்சத்தை கவனித்தவபிராமன், "பையா, பயப்படாதே" எனச்சொல்லித் தனது கையால் அவனைத்தடவிக் கொடுத்தான். யாது செய்வரோவென மனநடுக்கங்கொண்டிருந்த அச்சிறுவன் கொஞ்சந்தைர்யமடைந்து, "உலகைப்புரக்கும் புரவலா, யான் அநாதியாய்த் தங்கள் ஸந்நிதானம் வந்து

விட்டேன்!" எனச்சொன்னான். பிறகு, அவனைப் பக்கத்திலுட்காரவைத்து, "குழந்தாய், உன் பெயர்யாது? உனக்குச் சொந்தமான ஊர் எது?" எனவபிராமன் கேட்டான். பையனும், தன் பெயர் குருநாதனெனவும், தானிருப்பது பெருந்துறையெனவும் சொன்னான்.

அபிராமன்:—"பையா, உன் தந்தையின் பெயர் யாதோ?"

குருநாதன்:—"மன்னா, திவான்பகதூர் குலசேகரசோவர்த்தனர்."

அபிராமன்:—"இப்பெரும் பட்டத்தினாலேயே அவர் பெரும் பணக்காரரென்று ஊகிக்கிறேன்."

குருநாதன்:—"ஆமாம், நான்கு கோடிக்குமேலிருக்கின்றது!"

அபிராமன்:—"அப்பெரிய தனவானின் மகனை நீ தனியே திரிவானேன்?"

குருநாதன்:—"அரசே, இந்த நடக்கிற உத்ஸவத்திற்காக என் ஊரிலிருந்து பலர் புறப்பட்டார்கள். இத்தேசங்களைக் கண்டுகளிக்க ஆசைகொண்டயானும் அவர்களோடு புறப்பட்டு வந்தேன். ஆனால், அவர்கள் இக்கூட்டத்தில் பிரிந்துவிட்டார்கள். நாங்களிறங்கியிருந்த விடத்தில் யாரோவொரு மன்னன் தங்கியிருக்கின்றார்!"

அபிராமன்:—"நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். உன்னை நமது கப்பலிலேற்றிச் சீக்கிரம் ஊருக்கனுப்புகின்றேன்."

குருநாதன்:—"மன்னா, தாங்கள் என்னிடம் வைத்திருக்கும் அன்புக்குக் கைம்மாறு செய்யவியலுமோ! என் வீட்டிற்கு ஒருமுறை வரக்கூடியவர்கள் அல்லவே! எனது நன்றியை யானெவ்வாறு விளக்குவேன்?"

அபிராமன்:—"பையா, வடதேசங்களில் ஸஞ்சரிக்க வேண்டுமென்ற ஆசை நமக்கு நெடுநாளாயுண்டு. ஆதலின் வருகிற சித்திரை மாஸம் 4உ பகல் மூன்று மணிக்குப் பெருந்துறையை யடைவேன்."

எனச் சொன்னான். பிறகு, இப்பையன் அபிராமனுடன் நான்கு தினங்கள் தங்கியிருந்தான். ஊருக்குச் செல்வதிலாசை கொண்டிருந்த விச்சிறுவனுக்கு ஓர் மோதிரமளித்து, விரைவில் செல்லத்தக்கவோர் கப்பலிலேற்றிப் பெருந்துறைக் கனுப்பிப் பிறகு, நமதபிராமன் பொன்மண்டலம் போய்ச் சேர்ந்தான்.

## அத்யாயம் ௰௮.

### நல்வரவு.

ராஜபூஜித சரவணன், நமதபிராமனைக் கண்டித்துக் கருங் கோட்டைக் கனுப்பிய விஷயம் மறக்கத்தக்கதல்ல. இந்த ஸம்பவம் நடந்த சில நாள்களுக்குப் பிறகு, குமரன் ஞானசுந்தரியைக் கண்டு, "என் கண்மணீ, கப்பல் யாத்திரையைத் தன் பிழைப்பாகக் கொண்ட அபிராமனை மணந்து களிக்கலாமென நினைத்தாயே! விவாஹம் செய்துகொண்ட பெண்ணைத்தனியாக வாழ வைத்து அயல்நாடுகளுக்குச் செல்லும் அதமர்களை நீயறிந்திருக்கின்றாய். அபிராமனும் அத்தகைய மனிதனல்லவா? அவனை நீ மணந்திருந்தால் அவஸ்தைபடைந்திருப்பாயன்றோ? உன்னை என் மனைவியாகக் கடவுள் கருதியிருக்குங்கால், அதனை மாற்றி, வேறொருவன் விவாஹஞ் செய்துகொள்ள வியலுமோ? நீயே நினைத்துப் பார்" எனச் செப்பினான். இம்மொழிகளைக் கேட்ட ஞானசுந்தரி, இனி அபிராமன் உயிரோடு திரும்புவது அஸாத்யமென்று அறிந்திருந்ததாலும், வேறொரு ஆடவனைப்புதிதாய் நேசித்து, மணந்து கொள்வதில் மனமில்லாததாலும், இக்குமரன் தன் மீது வைத்திருக்கிற அளவிறந்த ஆசையை நன்குணர்ந்தவளாதலாலும், தேசகால வர்த்தமானங்களை நன்றாய் யோசித்து, "நேசா, நீர் சொல்லியது வாஸ்தவம். கடவுளுக்கு இஷ்டமிருந்திருந்தால், விவாஹத்தன்று அவ்வித மானக்கேடு நேரிடுமா? அப்பாவியை அன்று முதல் மறந்தேவிட்டேன். ஆனால், தங்களுக்கு யான்

சொல்வதொன்றுண்டு. யௌவன தசையடைந்த ஒவ்வொரு வருக்கும் விவாஹத்திலாசை ஜனிப்பது வழக்கந்தான். தாலிகட்டிய பெண்சாதியையும், பிறந்த பிள்ளைகளையும் கஷ்டமில்லாது ஸம்ரக்ஷிக்கப் பொருளிருந்தாலல்லவோ இன்பமாகக் காலங்கழிக்கலாம். அஃதில்லாவிடில், குசேல முநிவருக்குப் பிறந்த இருபத்தேழு குழந்தைகளைப் போலக் கஞ்சிக்குங் காவடியாய்ப் பறக்க நேர்ந்துவிடுமல்லவா? பணமில்லாதவரும், ஸம்பாதிக்குமாண்மையற்றவரும், இல்லற வாழ்க்கையைக் கனவிலும் கருதக்கூடாது. இம்மொழிகளை யான் சொல்லியது தங்களைப்பற்றியல்ல. மணந்து கொள்ளும் எண்ணத்தால் என்னைத் தினந்தோறும் பார்த்துவரும் பலரைப்பற்றியே மொழிந்தேன்." என்றாள்.

இதனைக் கவனித்த குமரன், சில காலம் வெளியே எங்கேயோ ஸஞ்சரித்த பிறகு, பெரும் பணக்காரனாய்விட்டதால் ஞானசுந்தரி அவனுக்கு மாலையிட்டாள். மிகப்பெரிய தனவான்கள், அளவிறந்த பொருளைச் செலவு செய்து, அரிச்சுவடியிலுள்ள சிற்சில வெழுத்துக்களைப் பட்டமாகப் பெறுகின்ற இக்காலத்தின் வழக்கத்தைப் போலவே, குமரனுக்கும் திவான்பஹதூர் பட்டங் கிடைத்தது. பிறகு தனது பெயரை, திவான்பஹதூர் குலசேகர கோவர்த்தனன்—என மாற்றிக்கொண்டு நமது குமரன் குதூஹலித்தான்.

ஓர் நாள், ஞானசுந்தரி, தனது தாதிகளின் மத்தியிலுட்கார்ந்து, "மாதம் மூன்றாகியும் மஹாமகம் சென்ற குழந்தை குருநாதன் வரவில்லை! என் செல்வச் சிரஞ்சீவி வந்துவிடவேண்டுமே!" எனக் கவலையுற்றிருந்தாள். அப்பொழுது, குருநாதன், "அம்மா!" என்றழைத்துக்கொண்டு வந்தான். "என்னருமைச் செல்வா, இக்கணையாழி எங்கு கிடைத்தது? இம்மாதிரியான ஒன்றை நான் இதுவரை கண்டதில்லையே!" என்றாள்.

குருநாதன்,—"அன்னாய், யான் இங்கு வந்துசேர்ந்தது அருமை:"

சுந்தரி:—"கடவுள், காப்பாற்றுவாராக! கண்ணே! யாது நேர்ந்தது?"

குருநாதன்:—"அம்மா, வருத்தப்படவேண்டாம். நான்தான் வந்துவிட்டேனே. நான் சொல்லுவதைச் சற்று கவனியுங்கள். கும்பகோணத்திற்கு என்னுடன் வந்தவர்களைப் பிரிந்து தனியே திக்குத்திசை தெரியாது தத்தளித்தவென்னைக் காப்பாற்றியவரும், பிறகு தனக்குச் சொந்தமான ஓர் கப்பலில் என்னை இவ்விடம் அனுப்பியவரும், விலை மதிக்கவொண்ணாத இம்மோதிரத்தை எனக்களித்தவரும் பொன்மண்டல மன்னர். யான் அவரைக் கண்டிராத பக்ஷத்தில் தாங்கள் என்னைக் கண்டிருக்க மாட்டீர்கள்!"

சுந்தரி:—"சீருஞ் சிறப்பும், நீடூழி வாழ்வும் அவ்வரசனுக்குக் கடவுள் கடாக்ஷிப்பாராக! குழந்தையாகிய நீ, மகுடம் புனைந்த மகீபதியை நேசித்த செய்தி எனக்கு ஆநந்தமுண்டாக்குகின்றது. மரியாதைக்காவது, நீ அம்மன்னரை இங்கு வரச்சொல்லி யழைத்தாயா?"

குருநாதன்:—"அம்மா, அழைக்காமல் வருவேனே! சித்திரை மாஸம் 4-ந் தேதி பகல் மூன்று மணிக்கு இங்கு வருவதாக அம்மன்னர் வாக்களித்திருக்கிறார். நமது நகரத்தை யலங்கரித்து, வெகு மரியாதையுடன் நல்வரவேற்க வேண்டும்."

சுந்தரி:—"அக்காவலனாவது இங்கு வரவாவது! எனக்குத் தோன்றவில்லை. மிகச் சிறுவனாகிய நீ, ஆசையோடழைத்ததால், அவ்வாறு சொல்லியிருக்கின்றார்."

குருநாதன்:—"அன்னாய், அவர் என்மீது காட்டிய பக்ஷத்தால் தவறாமல் வருவாரென்றே நம்புகிறேன். அப்படி வராவிட்டாலும், பொன்மண்டலம் போயாவது அழைத்துவாராதொழிவேனோ?" எனச் சொல்லியதால், ஞானசுந்தரியும் தன் கணவனாகிய குலசேகரனிடம் இச்செய்தியைச் சொல்லி, நகரெங்கும் அலங்கரிக்கச் செய்தாள். பொன்மண்டல மன்னர் வருகின்றார்—என்ற பேச்சு, அப்பெருந்துறையெங்கும் பரவிற்று.

சித்திரை மாஸம் 4-ந் தேதி பகல் இரண்டு மணியாயிற்று. திவான்பகதூர் குலசேகர கோவர்த்தனன் வீட்டில் அந்நகரத்தா

ரனைவரும் வந்து கூடினார்கள். அந்நகரெங்குஞ் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களைக் கண்ட யாவரும் அப்பெருந்துறையை அமராவதிக்கு ஒப்பிட்டார்கள். அரசனது நல்வரவை யெல்லோரு மெதிர்பார்த்திருந்தபொழுது, தங்கத்தடியொன்றைக் கையிற்கொண்ட வொரு கட்டியக்காரன், அவ்வீட்டில் நுழைந்து, "மஹாராஜா வருகின்றார்!" என்றான். இவன் அணிந்திருந்த விநோதமான உடைகளையும், நவரத்நங்களால் ஒளி வீசுகிற தடியையும் கண் கொட்டாது எல்லோரும் பார்த்திருந்தபொழுது, குதிரைகளின் காலடிச் சத்தங் கேட்டது. இரண்டு புறங்களில் உருவிய கத்திகளோடு இரு போர் வீரர்களும், நான்கு குதிரைகள் கட்டிய ஓர் வண்டியில் பொன்மண்டல மன்னனும், அவ்வண்டியின் இரு புறங்களிலும் பின்னும் துரகாரூடர்களான பல வீரர்களும் வந்து அவ்வீட்டு வாயிலில் நின்றார்கள். பதினெட்டு வாத்யங்களும் முழங்கிக் கொண்டிருந்த வக்காலத்தில், குருநாதன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வண்டி நிற்குமிடத்திற்கு வந்து, அரசனை நமஸ்கரித்து, தன்னிருகரங்களையும் நீட்டி யழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

மன்னனுக் கிருபுறங்களிலும் சாமரங்கள் வீசப்பட்டன. "ராஜகம்பீரா, ராஜமார்த்தாண்டா, ராஜ உத்தண்டா, ராஜகோலாஹலா, ஜயவிஜயீபவ! பதளரீக்பராக், மஹாராஜா!" எனப் பலர் கட்டியஞ் சொல்லிக்கொண்டு முன்னே சென்றனர். வீட்டினுள் கூடியிருந்தவெல்லோரும் நின்றுகொண்டிருந்தபொழுது, அழகிய சிங்காஸனம்போல் அலங்கரித்திருந்த நாற்காலியி லரசன் உட்கார்ந்து, மற்றெல்லோரையு முட்காரச்செய்தான். பிறகு, குருநாதன், அங்கிருந்த யாவருக்கும சந்தனம், புஷ்பம் முதலியன கொடுத்து மரியாதை செய்தான். அங்கிருந்த ஒவ்வொருவரோடும் அவரவருடைய நிலைமைக்குத் தக்கபடி வசனித்த மன்னன், உதயமார்த்தாண்டன் செட்டியாருடன் அதிகநேரம் ஸம்பாஷித்ததுமன்றி அவருடைய ஸகல யோக க்ஷேமங்களையும் விசாரித்தான்.

நெடுநாளாய் அரசனென்ற ஒருவனைக் காணாத அக்குடிகளுக்குண்டான மகிழ்ச்சியை யளவிடக்கூடுமோ! நமது பாத

நாட்டைத் தற்காலம் ஆண்டுவருகிற மகாராஜா ஜெயசந்த்ர சக்ரவர்த்திகளவர்கள், டில்லிமாநகரில் மகுடம் புனைந்துவிட்ட இந்தியாவில் சஞ்சரித்தபொழுது, நாமனைவரும் உதவப்பதுதும் கரையுண்டோ! குடியரசு நாடாகிய பெருந்துறையிற் சிக்கிய ஜனங்கள் யாவரும் அவ்விடமிருந்து விலக மனமில்லாதவர்களாயிருந்தனர். அப்பொழுது, அரசன், அவர்களை நோக்கி "நேயர்களே, நான் இருப்பது பொன்மண்டலம், கும்பகோணம் உத்ஸவத்தில் தங்க இடமில்லாது தத்தளிக்க குருநாதனை என்னிடம் சில தினங்கள் வைத்திருந்து, எனது கப்பல்களிலொன்றில் இவ்விடம் அனுப்பும்பொழுது, இவன் என்னை அழைத்தான். யானும் வந்துவிட்டேன். எனக்குச் சொந்தமான தேசம் கடலின் நடுவிலுள்ள ஓர் தீவு. கன்னையாயும் வளநாடாகிய இந்நாட்டிற்கு அஃதீடாகுமோ? இதன் சிறப்பையும், இச்சிறுவனிடம் எனக்குப் பிறந்திருக்கிற அளவிறந்த அன்பையும் நினைக்குங்கால், இங்கு தங்குவது வெகு சௌக்யத்தை விளைவிக்குமெனத் தோன்றுகிறது. நீங்களும் என்னை அபிமானித்து நல்வரவேற்றீர்கள்." என்றான். உடனே அங்கிருந்த யாவரும், "அரசே, தாங்கள் இங்கேயே இருத்தல் வேண்டும். யாது காரணம் பற்றியோ எங்களுக்குத் தங்களிடம் அபிமானம் ஜெனித்துளதாதலால் தங்களை விட்டுப் பிரிய எங்களுக்கு இனி மனந்துணியாது." எனச் சொல்லியபொழுது, ஒரு சேவகன் அவ்விடம் வந்து, வாய்புதைத்து நின்று, "மஹாராஜா, வீடு விசாரித்தேன். பதினாயிரம் பவுன் விலையாம்." என்றான். அரசன் "நமது பொக்கிஷக்காரனிடம் அவ்விலையை வாங்கிக்கொடுத்து, "அவ்வீட்டைச் சுத்தப்படுத்துங்கள். இன்றிரவு இவ்விடம் தங்குவோம்; சீக்கிரம் ஓடு." எனக் கட்டளையிட்டதைப் பார்த்து, குலசேகரனும், குருநாதனும், எழுந்து "காவலா, தாங்கள் இவ்விடம் வசிப்பதும், எங்களுக்குத் தினந்தோறும் காட்சிகொடுப்பதும் மிகுந்த ஆனந்தகரமான விஷயங்களே. ஆனால் தாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தவர்களாதலின், இவ்விடம் சிலநாட்களாவது தங்கவேண்டும்." என வேண்டிக்கொண்டார்கள். அரசனும் அப்படியேயாகட்டுமெனச் சொல்லி [illegible] விட்டு எல்லோரும் விடைபெற்றுக்கொண்டு, [illegible] தங்களிருப்பிடஞ் சென்றார்கள். [illegible]

மாதர்களுக்குரிய எல்லா லக்ஷணங்களும் இப் பெண்ணிடம் அமைந்திருந்தன. பொன்மண்டல மன்னன் சென்றவிடமெல்லாம் இவளையும் அழைத்துச்செல்வான். அந்நகரத்தார் "இப் பெண் யார்?" எனக் கேட்க மனந் துணியாமல் அவளது ஒப்புயரில்லாத அழகை மெச்சினார்கள்.

இங்ஙனமிருக்கையில், ஓர் நாள் அரண்மனையின் மாடியிலுட்கார்ந்திருந்த வேந்தன், ஒரு அழகிய வண்டியில் உத்தம லக்ஷணமுள்ள இரண்டு குதிரைகள் கட்டிப்போவதைக் கண்டான். அவ்வண்டியின் பின்புறமுள்ள கதவில், "ராவ்பஹதூர் வீரன் செட்டியார்" என எழுதப்பட்டிருந்தது. இதனையும் தான் அடிக்கடி ஸந்தித்துவரும் குலசேகரனுடைய ஸம்பத்தையும் கவனித்த இம்மன்னனுக்குப் பல எண்ணங்கள் தோன்றின.

"இஃதோர் ஆச்சர்யம்! என்னை இன்னானென்று ஒருவரும் அறியவில்லை! எப்படியறிவார்கள்? பதினாறு வருஷம் படுகுழியிற்கிடந்தவெனது சரீரம் முற்றிலும் மாறிவிட்டது! மேலும், என் பழைய ஏழ்மையான நிலைமையையறிந்த யார்தான் இந்நிலையிலென்னை யெதிர்பார்க்கக்கூடும்? அஃதிருக்கட்டும்; ஒரு பிடிசோற்றுக்குத் தவிக்கக்கூடிய குமரன் திவான்பஹதூர் குலசேகர கோவர்த்தனராம்! உதயமார்த்தாண்டர் வீட்டில் உண்டி தின்று பிழைத்த வீரன், பல லக்ஷங்களுக்கதிபனாம்! கலியின் வேலையை என்னென்றுரைப்பேன்! என்னருமைக் காதலியாகிய ஞானசுந்தரியை நான் மணந்துகொள்ளுந் தருணத்தில் இவ்விருவருங்கூடி என்னைச் சிறைப்படுத்தச் செய்தார்கள்! அச்சிறையிலிருந்து யான் மீள்வது அஸாத்யமென்பதை யுணர்ந்த குமரன், சுந்தரியின் மனதைக் கலைத்து மணந்திருக்கின்றான். சீ, பெண்களின் மனது இத்தகையதா! அது நிலையற்றதென்பதற்கு இஃதோர் ஸாக்ஷியாயிற்றன்றோ. சுரங்கத்திலிருந்த வாதிசேஷன் சொல்லியவனைத்தும் வாஸ்தவமே. எனக்குத் தீங்கிழைத்த இவ்விருவரையும், ஸ்வயநயம் கருதி யென்னைச் சிறையிலடைத்த சரவணனையுஞ் சும்மா விடுவேனோ!" எனச் சொல்லியெழுந்து, மாடியில்மாட்டப்பட்டிருந்த ஸ்ரீயந்தருடைய படத்தை நமஸ்கரித்து, வீரன் வைத்திருந்த காசுக்கடையில் ஸ்வல்ப தொகையை

வட்டிக்குப் போட்டுவைப்பதாகத் தீர்மானித்து, தனது தந்தப் பல்லக்கிலேறிக்கொண்டான்.

"ஹாம் ஹாம், ஹல் ஹல்" எனச் சத்தித்துக்கொண்டு பதினறு போகிகள் அப்பல்லக்கைத் தூக்கிச் சென்றார்கள். அந் நகரத்தாரனைவரும், "மன்னன் எங்கு போகின்றாரோ!" எனச் சொல்லிக்கொண்டிருந்தபொழுது, வீரன் செட்டியார் வைத்திருந்த கந்து வட்டிக்கடைக்கெதிரே அப்பல்லக்கு நின்றது. வீரன், பரபரப்புடன் எழுந்தோடிவந்து, பயத்தோடும் விநயத்தோடும் வேந்தனை யழைத்து உள்ளே சென்றான். அங்குட்கார்ந்த மன்னன் வீரனை நோக்கி, "செட்டியாரே, என்னிடமுள்ள பணத்திற் கொஞ்சம் தங்களது கடையில் போட்டு வைக்கலாமென நினைக்கின்றேன். இப்பொழுது கோடி பவுன் கொடுக்கின்றேன். அத் தொகையை இவ்வருஷத்திற் செலவிட நிர்ணயித்திருப்பதால், நான் சொல்லியனுப்பும் பொழுதெல்லாம் லக்ஷம் லக்ஷமாகக் கொடுத்து வருவீர்களா?" என வினவினான். செட்டியாரும், மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸம்மதித்து அத்தொகையைப் பெற்றுக்கொண்டு ஒரு சீட்டு எழுதிக்கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்டு செல்லச் சித்தமாயிருந்த வேந்தனை வீரன், வாயில் வரையிற் பின்றொடர்ந்தான். பல்லக்கில் அரசனுட்கார்ந்த பிறகு, போகிகள் அப்பல்லக்கைத் தூக்கினின்றார்கள். மிகுந்த மரியாதையோடு தூரத்தில் நின்ற வீரனை நோக்கிய மன்னன், "செட்டியாரே ஒரு விஷயம் மறந்துவிட்டேன். உங்களிடம் இரண்டு குதிரைகளிருக்கின்றனவே; அவைகளை விற்க மனமுண்டோ?" எனக் கேட்டான். "மஹாப்ரபு, தங்களிஷ்டசதை நிறைவேற்றுவதில் எனக்குத் தடையில்லை. ஆனால், என்பெண்சாதி மிகுந்தவாசையுடன் நூறு பவுனுக்கு வாங்கினாள். நான் தவறாமல், அக்குதிரைகளை வண்டியிற்கட்டி ஸவாரி செய்கிறாள். ராஜபூஜித சரவணர் வீட்டுப் பெண்டுகளும் கூடச்செல்வதுண்டு. அதனால் கொஞ்சந் தியங்குகின்றேன்" என வீரனளித்த விடையைக் கவனித்த வேந்தன், "எல்லாம் பணத்தைக்கண்டால் ஸரியாய்ப் போம்; இந்தாரும்." எனச்சொல்லி இருநூறு பவுன்களைக் கொடுத்து, அக்குதிரைகளையும் வாங்கிச்சென்றான்.

கடையிலிருந்து வீட்டிற்குச்சென்ற வீரன், தன்மனைவி யாது சொல்வாளோ எனப் பயந்து, அவளண்டையிற் சென்று, இருநூறு பவுன்களையும் காணிக்கை செலுத்துபவன்போல் எதிரில் வைத்துவிட்டு நின்றான். உடனே, அவன் மனைவி, "இதென்ன?" எனப் பயங்கரமான குரலோடு வினவினாள். நடுக்கங்கொண்ட வீரன், "அடீ மாயாவதீ, கோபிக்காதேடீ, பணத்தையெடுத்துக் கொள்ளடீ!" என்றான். இம்மொழிகளைக் கவனித்து, கோபாவேசங் கொண்ட மாயாவதி, "என்ன முழிக்கறயே! எதையாவது தொலைத்தாயோ?" எனச் சொல்லிக் குதித்தோடி வந்து பணத்தை வாரியெறிந்தாள். "கோபித்துகொள்ளாதேடி, குதிரைகளை நூறு பவுனுக்குத்தானே வாங்கினாய், இரட்டிப்பு விலைக்கு விற்றுவிட்டேன். அரசன் கேட்கும்பொழுது யான் என் செய்வேன்? எடுத்துக்கொள்ளடீ!" எனச் சொல்லி, வீரன் செட்டியாரவர்கள், மனையாட்டியாகிய மாயாவதியின் ஸந்நிதானத்தில் நின்றார். மாயாவதியின் கோபத்திற்குக் காளியும் ஒப்பாவாளோ? "இந்த நாறப் பணத்தைக் கொடுத்துவிட்டுக் குதிரைகளை வாங்கிவா; இன்று ஸாயந்தரம் காமினியும், நானும் இந்தப் பணத்திலா ஸவாரிசெய்வோம்? மதி கெட்டவனே, யாரைக் கேட்டு வ்யாபாரஞ் செய்தாய்? ஓடு" என மாயாவதி கத்தினாள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

தெய்வத்தைத் தொழாமல் கணவனையே அத்தெய்வமாக மதித்திருக்கின்ற பதிவ்ரதையான ஒரு ஸ்த்ரீ, வானத்தை நோக்கிப் பெய்யெனக் கட்டளையிட்டால், உடனே மழைபொழியும் எனத் திருவள்ளுவர் தமது குறளில் செப்புகின்றார். இம்மாதிரியான மாதர் துர்லபமானதால், மாதம் மும்மாரி பொழிந்து செழித்த விப்பரதநாட்டில், வருஷம் மும்மாரி பொழிவதற்கும் வருண ஜபம் செய்யவேண்டியிருக்கின்றது!

மாயாவதியின் கோபத்தைத் தணிக்க வேறுவழி யறியாத வீரன் செட்டியார், உடனே வெளியிற்சென்று, பொன்மண்டல மன்னன் ஸந்நிதானமடைந்து, கைகளைப் பிசைந்துகொண்டு நின்றார். இவரை யோராஸநத்திலிருத்திய அரசன், "யாது

விசேஷம்? தங்களது முகம் வாட்டமாகக் காணப்படுகின்றதே!" என வினவினான். "ராஜாதிராஜா, தங்களிடம் விற்ற குதிரைகள் என் மனைவி வாங்கியவையென முன்னமேயே விண்ணப்பித்திருக்கின்றேன். இந்நாட்டின் தலைவரது பெண்சாதியாகிய காமினியம்மாளும், என் மனைவியும் வழக்கம்போல் இன்று அந்தியிலும் ஸவாரி செய்ய வேண்டுமாம். அவளது ஸம்மதமின்றி யான் விற்றதால், வீட்டில் கலகஞ் செய்கிறாள். இக்கொந்தரைக்குச் செய்வது யாது?" எனச் செட்டியாருரைத்தார். கருணையுள்ள வரசன், இதனைக்கேட்டு, தான் கொடுத்த இருநூறுபவுன்களையும் கடையிலுள்ள கணக்கில் வரவுவைக்கச்செய்து, குதிரைகளைத் திருப்பிக் கொடுத்தார்.

## அத்யாயம் உ௰.

## போலி நட்பு.

வீட்டிற் படுத்துறங்கும் ஒவ்வொருவரும், இருண்ட இரவுகளில் ஏதேனும் ஓர் ஒலி கேட்டால், உடனே எழுந்து விளக்கேற்றிச் சுற்றிப் பார்த்து, கள்வர் பயத்தால் உறக்கமின்றி யவ்விரவைக் கழிக்கின்றார்கள். கள்வர் கன்னம்வைக்கு மிரவுகளில், அவ்வொலி கேட்டவர், எலியெனவே நிச்சயித்து எழுந்திருப்பதுமில்லை. இரவெல்லா மிருமிக் கோழை கக்குங் கிழவனும் கள்வர் நுழையுங் காலத்தில் மயங்கிப்போவதையும், பலமாய்த் தாளிட்ட கதவுகளைத் திறக்குஞ் சக்தி யிக்கள்வர்களிட மிருப்பதையும், நோக்குங்கால், நாமறியக்கூடாத யாதோ ஒரு சக்தி யிவர்களுக்குளதெனத் துணிகின்றோம்.

பெருந்துறை வீதிகளிலொன்றில், ஒருநாள் அந்திமணி ஐந்துக்கு, பார்த்தோரஞ்சக்கூடிய உருவங்கொண்டவோர் மனிதன், நின்று, இரண்டு குதிரைகள் பூட்டி விரைவாய்ச் சென்ற ஓர் வண்டியின்மேல் யாதோ பச்சையிலையைக் கசக்கி வீசி எறிந்தான்.

உடனே, அக்குதிரைகள் வெருண்டு, பொன்மண்டலமன்னனி ருக்கும் மாளிகையின் வாயிற்படியிலேறி, வண்டியையும் அதி லிருந்தவர்களையுந் தலைகீழாகத் தள்ளின. எல்லோரும் அலறிக் கீழே விழுந்தார்கள். இப்பயங்கரமான சத்தங் கேட்டவுடன், மாடியிலிருந்த வரசன், கீழிறங்கு முன்னமேயே, அங்கிருந்த ஸேவகர், அவர்களை ஓர் அறைக்குளிட்டுச் சென்றனர். பல கண் ணாடிப் பெட்டிகளில் விதம்விதமான மருந்துகள் வைக்கப்பட்டி ருந்தன. அவ்வாறு அவ்விடம் வந்தவர்களின் காயங்களையும், மயக்கத்தையும் ஆறுவதற்குத் தகுந்த மருந்துகளை, மன்னன் தன் கைகளினாலேயே கொடுத்தான். எல்லோருந் தெளிந்து, வண்டியிலிருந்து வீழ்ந்த காயங்கள் தென்படாததுகண்டு, மன் னனை வியந்து பல வந்தனமொழிகள் சொல்லிச் சென்றனர்.

இவர்கள் சென்ற கொஞ்ச நேரத்திற்கெல்லாம், மாடியில் உல்லாஸமாயுலாவிய மன்னனை, “சாமி, யசமாங்க, ஒரு பச்சிலே செய்த வேலெயெப் பாத்தீங்களா! அவுங்க ஆருங்க?” என மாமுண்டி வன்னிமுண்டான் வினவினான். இதனைக்கேட்ட வர சன், “நண்பா, ஒருத்தி வீரனது பெண்சாதியாகிய மாயாவதி, சரவணனுடைய மனைவியாகிய காமினி மற்றொருத்தி” எனச் சொல்லியவுடன், “இவுங்களெச் சும்மா வுடுவாங்களா!” என் றுரைத்த மாமுண்டியைநோக்கி, “இவ்விடத்தில் அவர்களை யாது செய்யக்கூடும்? மேலும், அவர்களா நமக்குக் கேடுசெய்தவர்கள்? கீழே விழுந்து காயம்பட்டவர்களுக்கு மருந்துகள் கொடுத்து மயக்கந்தெளியச் செய்தேனல்லவா? அந்நன்றியை நன்குமதித்து அவ்விருவரும் தங்கள் தங்கள் வீட்டிற்கு என்னை அழைத்திருக் கிறார்கள். குருநாதன் ஸ்நேகத்தால் குமரன் வீட்டிற்குப் போக்கு வரத் துண்டாயிற்று. இப்பால், வீரன், சரவணன் இவ்விருவர் வீடுகளையும் வைத்யம் செய்யும் வ்யாஜத்தால் அடிக்கடி பார்த்து வரலாம்” என விடையளித்த மன்னன், தன் முகத்தில் புன்சிரிப் போடு விளங்கினான்.

## அத்யாயம் உக.

### விஷப்ரயோகம்.

கலிங்க நாட்டுத் தலைவனாகிய சரவணனது வீட்டின் உட்புறம் போடப்பட்டிருந்ததோர் நாற்காலியில் எண்பது வயது சென்றதோர் கிழவனுட்கார்ந்தான். மங்கைப் பருவமடைந்த ஒரு பெண் அவ்விடம் நின்று, "தாத்தா, இன்று எனக்கு என்னமோ மயக்கமாயிருக்கின்றது! நடக்கவும் பேசவுங் கஷ்டப்படுகின்றேன்! ஐயோ, நான் என்ன செய்வேன்!" என முறையிட்டு அழுதாள்.

கிழவன்:—"குழந்தாய், க-ம-லா-க்ஷி, பதினைந்து வருஷங்களாக நீடித்திருக்கிற ஓர் ஜீத பலக்குறைவால் நான்படும்பாட்டைச் சொல்லவும் வேண்டுமோ! யார் செய்த தீவினையோ! அல்லது இவ்வீட்டிற்கு வந்த வேளைதானோ!"

கமலாக்ஷி:—"ஆனால், நாம் குடியிருந்த வீடு வேறோ?"

கிழவன்:—"நான் கட்டிய பெரிய அரண்மனைக்கொப்பான வீடு கிழக்கு வீதியிலிருக்கின்றது."

கமலாக்ஷி:—"பெரிய வீடொன்று எப்பொழுதும் பூட்டப்பட்டுக் காலியாயிருக்கின்றதே; அதுதானோ?"

கிழவன்:—"காட்டெருக்கு முளைத்துக் காலியாயிற்று அவ்வீடு! கண்ணே, பதினாறு வருஷங்களுக்குமுன், நான் அவ்வீட்டிலிருந்தேன். அப்பொழுது அயல் வீட்டில், யாரோ ஒரு தட்டுவாணியிருந்தாள். உன் தந்தை சரவணன், அவளுடன் நேசித்து வந்தான். இதனை நானறிந்துவிட்டதால், இவ்வீட்டிற்குக் குடிமாற்றினான். உன் தாய் இறந்தபிறகு, உன் தந்தை, அவ்வீட்டைப் பூட்டுவதும் திறப்பதும் வழக்கமாயிருந்தது. ஆனால், பத்து வருஷங்களுக்குமேலிருக்கலாம்; அவன், அவ்விடம் போவதை முற்றிலும் வெறுத்து

விட்டான். அங்கிருந்தவரையில் எல்லோரும் க்ஷேமமாய் இருந்தோம்."

கமலாக்ஷி:—"சென்ற அமாவாசை தினம் கங்கையில் மூழ்கச் சென்றேன். அவ்விடம் யாரோ ஒருவர்,—அதிகாரமென்றால், ஆதிநாராயணர்போல் யார் செலுத்தப்போகின்றார்கள்?--என்றார் இவ்வூரில் பெரியவதிகாரி, என் தந்தையைக்காட்டிலும் வேறு யார்? அவ்வாதிநாராயணர் யாரோ!'

கிழவன்:—'கண்ணம்மா, நான்தான் ஆதிநாராயணன். சோழர்கள் இந்நாட்டை யாண்டபொழுது அமைச்சனாயிருந்தேன் எனச் சரவணன் தந்தையாகிய வாதிநாராயணரும், அச்சரவணனுடைய மூத்ததாரத்தின் மகளாகிய கமலாக்ஷியும் சம்பாஷித்தார்கள்.

முன், மாமுண்டியினிடம் சொல்லியபடி, இச்சரவணன் வீட்டிற்கு அடிக்கடி போய்வந்த பொன்மண்டலமன்னன், அங்கிருப்பவருடன் ஸம்பாஷித்து, ஸகல ரஹஸ்யங்களையும் ஊகித்தறிந்தான். ஒருமுறை சரவணனது மனைவியாகிய காமினி, விஷயங்களின் வீர்யத்தைப்பற்றி நமது மன்னனை வினவினாள். இவளது எண்ணங்களை யுணர்ந்த வேந்தன், ஆரோக்யத்தை யுண்டாக்கத்தக்க ஔஷதங்களைச் சொல்லி, தான் சொன்னவைகளும் கொடூரமான நஞ்சென்றும், அவை திடீரென மரிக்கச் செய்து, கண்டோர்க்கு ஸந்தேஹத்தை விளைவிப்பனவல்லவென்றும், உட்சென்ற சில நாட்களுக்குப் பிறகு பலிக்குமென்றும் சொன்னான். இம்மொழிகளைக் கவனமாய்க் கேட்ட காமினியும் முகமலர்ச்சியோடு உள்ளே சென்றாள்.

மேற்கூறிய விஷயங்களைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்த மன்னனுக்குப் பலவெண்ணங்கள் தோன்றின. "என்ன அந்யாயம்! சரவணன் வீட்டிலுள்ள கிழவனும், கமலாக்ஷியென்ற தாயில்லாப் பெண்ணும் இளைத்துத் துரும்பாயிருக்க, மற்றவர் திடமாயிருக்கின்றனர்! ஆதிநாராயணர், மந்திரியாயிருந்தபொழுது மிகப்பொருள் ஸம்பாதித்ததை யான் அறிந்திருக்கின்றேன். அவரைத் தற்காலங் கவனித்துப் பாதுகாப்பவள் காமாக்ஷி. ஓ,

இப்படியிருக்கலாம்; இக்காமினி, தன்மாமனாருக்குச் சொந்தமான ஏராளமான பொருள்களைத் தன் மூத்தாள் மகளான கமலாக்ஷி யடையாவண்ணம் அக்கிழவருக்குப் பல மருந்துகள் வைத்தும் பயன்படாததால், விஷங்களின் வீர்யத்தைப்பற்றி என்னை விசாரித்திருக்கின்றாள்! எனதெண்ணங்களை முடிப்பதற்குப் பல வழிகளேற்பட்டன! இனி, சரவணனைச் சந்தியில் நிறுத்திவிடலாம்.—தீமை விதைத்தால் தீமைவிளையும்—என்ற முன்னோர் வாக்யம் பொய்க்குமோ? பாதகர்களான குமாரனையும் வீரனையும் சும்மா விடக்கூடாது. அவ்விருவருக்கும் குடுமி முடிந்துவிடுகின்றேன்.

## அத்யாயம் உ௨.

### நாரதர்.

நமது மன்னன் ஓர் முறை கோவர்த்தனன் வீட்டில் அவனுடன் ஸம்பாஷித்தபொழுது, "ஐயா, குலசேகரரே, வீரன் செட்டியாரின் கடையில் ஸ்வல்பப் பணம் வட்டிக்கு யான் போட்டிருக்கிற விஷயம் தாங்கள் அறிந்திருப்பீர்கள். நேற்று அவர் கடையிலுட்கார்ந்திருந்தபோது, அங்கு ஒரு பெண் வந்தாள். அவ்வாறு வந்த அப்பெண்ணைச் செட்டியார்,--கலாவதி--என்றழைத்துப் பக்கத்திலுட்காரச்செய்தார். அப்பெண் அவரது மகளாயிருக்கலாமோ?" என வினவினான்.

குலசேகரன்:—"எனக்கும், ராவ்பஹதூர் வீரன் செட்டியாருக்கும் பால்யஸ்நேஹமுண்டு. மேனகைக்கொப்பான ஒருத்தி தங்களிடம் இருக்கையில், யாதுகாரணம்பற்றி இப்பெண்ணை விசாரிக்கின்றீர்கள்?"

அரசன்:—"ஓஹோ, நன்றாயிருக்கின்றது! யான் விசாரித்தது என்னைப்பற்றியல்ல. நமது குருநாதனுக்கு இசைக்கலாமோ, என்று எண்ணினேன்."

குலசேகரன்:—“ குழந்தை குருநாதனுக்குக் கட்டாயம் கல்யாணஞ் செய்துவிடவேண்டும். மஹாராஜாவின் இஷ்டப்படியே யான் செட்டியாரிடஞ் சென்று அப்பெண்ணைக் கேட்கின்றேன்.”

எனச் செப்பினன். பொன்னடலமன்னனுந் தன்னிருப்பிடஞ் சென்றான்.

பிறகோர்நாள், குலசேகரன், வீரன் செட்டியாரின் ஏகபுத்திரியாகிய கலாவதியைத் தன் மகனை குருநாதனுக்குக் கேட்கவென்று புறப்பட்டுச் செட்டியாரின் வீட்டையடைந்தார். ஞானசுந்தரியும் தன் கணவனைப் பின்தொடர்ந்து சென்று, மாயாவதியிருக்கும் அறைக்குட்புகுந்தாள். வீரன் செட்டியார் மிகுந்த மரியாதையோடழைத்து, ஓரிடத்திலுட்காரச் செய்து தானும் பக்கத்திலுட்கார்ந்தார். பிறகு இவ்விருவரும் ஸம்பாஷிக்கின்றார்கள்:—

வீரன்:—“ பால்யத்திலிருந்த நட்பை நாம் தற்காலம் பாராட்டவில்லை. போனதுபோகட்டும். குமரா, மாதுமி வேலைக்கு ஆசைப்பட்டேனே, இப்பொழுது எனது நிறைந்த செல்வத்தைப் பார்த்தாயா? உனக்குத்தான் யாது குறை? ஞானசுந்தரியோடு இன்புற்று வாழ்கின்றாய்!”

குமரன்:—“ தடையென்ன, வீரா! நான் ஒரு வேலை செய்யவாரம்பித்தால் நிறைவேற்றாது விடுவதேது.”

வீரன்:—“ அபிராமன் பயல் பட்டபாட்டைப் பார்த்தாயா?”

குமரன்:—“ நீ யாது செய்தாய்? இவ்வாறு சொல்லிவிடுவது ஓர் பெருமையோ, புகழோ!”

வீரன்:—“ யான் என்ன செய்தேனா? மறந்துவிட்டாயோ, சரவணனது தகப்பனாகிய ஆதிநாராயணருக்குக் குணகன் எழுதிய கடிதத்தை அபிராமன் வீட்டிலிருந்து எடுத்தது யார்?”

குமரன்:—“ உன்னை அபிராமன் வீட்டிற்கு அன்றிரவு அழைத்துச் செல்லாவிடில், கடிதத்தைக் கண்டெடுப்பது எப்படி? உன் வார்த்தை நிரம்ப அழகாயிருக்கின்றதே!”

வீரன்:—"நன்றிகெட்ட பயலே, ஞானசுந்தரியைக் கட்டியணைக்குமபோதெல்லாம் நான் செய்த உபகாரத்தை நினைக்கவேண்டிய நீ, இவ்வாறு பேசுகின்றாய்! புதுமையிலும் புதுமை!"

குமரன்:—"ஞானசுந்தரியை மணந்துகொண்டதற்குக் காரணமானவன் நீயோ, நான் ஸம்பாதித்த அளவிறந்த பணமோ? யோசித்துப் பேசடா! வாயில்வந்தபடியெல்லாம் உளறுகே!"

வீரன்:—"தெரியுமடா பயலே! நீ ஸம்பாதித்த விஷயம்! தெற்கில் யாரோ ஒரு ஜமீன்தாரின் பொருள்களைக் கொள்ளை கொண்டிருக்கிறாய்!"

குமரன்:—"உதயமார்த்தாண்டர் கண்களிலும் வாயிலும் மண்ணையள்ளிப்போட்டுக் கொள்ளையடித்தவன் நீயோ நானோ? மரியாதையில்லாமல் மளமளவென்று பேசுகின்றாயே! சிரஞ்சீவி குருநாதனுக்கு உன் பெண்ணைக் கேட்கலாமென வந்தேன்; நல்ல சகுனமாயிற்று!"

வீரன்:—"என்ன சொன்னாய்; கேட்கிறவன் நீதானோ? என் கண்மணி கலாவதியைக் குருநாதனுக்குக் கொடுப்பதா? ரொம்ப அழகு! சீ, சீ, பேய்பயலே! போடா எழுந்து" எனச் சொல்லியதைக் கேட்ட குமரன், வெட்கமடைந்து ஞானசுந்தரியுடன் வீடுபோய்ச் சேர்ந்தான். மேற்குறித்த ஸம்பாஷணை யனைத்திற்கும் செவிகொடுத்திருந்த ஞானசுந்தரி, தன் கணவன் அபிராமனுக்குக் கேடு விளைவித்ததையும், அந்யாயமாய்ப் பொருள் ஸம்பாதித்ததையு மறிந்து, அன்று முதல் குலசேகரனிடம் பக்ஷம் பாராட்டாதிருந்தாள். அப்பொழுது வந்த மாதாந்தப் பத்திரிகையில் குமரனைப் பற்றிய எல்லா விஷயங்களும் எழுதப் பட்டிருந்தன. அதனைப் படித்ததால், குருநாதனும் தன் தந்தையிடம் மரியாதைக் குறைவாக நடக்கத் தலைப்பட்டான்.

## அத்தியாயம் ௨௩.

### ரஹஸ்யம்.

"கீழ்வீதி நாலாநம்பரு வீடு ஏலம் போடறாங்கோ, ஏலம்!" எனக் கத்திக்கொண்டும், பறைபறைந்துகொண்டும் ஒருவன் வீதி வழியே சென்றான். இதனைக் கேட்ட பொன்மண்டல மன்னன், "ஸத்யவந்தா, யாதோ பறையறைவித்தார்கள்! போய் விசாரித்து வா" என ஒருவனுக்குக் கட்டளையிட்டான். சில விநாடிகளுக்குப் பிறகு, முப்பது வயதாம், ஸத்யவந்தனென்ற பெயருக்கேற்றபடி காணப்படுகிற முகவிலாஸமுங்கொண்ட வொருவன், அரசன் முன்னிலையில் நின்று, "ராஜாதி ராஜா, இந்நகரின் கிழக்கு வீதியிலுள்ள நாலாவது நம்பர் வீட்டை இன்று அந்தி மணி ஐந்துக்கு ஏலம் போடுகிறார்களாம்" என்றான். இம்மொழியைச் செவியுற்ற மன்னன், "நல்லது, எவ்வளவு விலையாயினும் அந்நியருக்கு விடாமல் ஏலத்தில் எடுத்துவிடு" எனக் கட்டளையிட்டான்.

ஸத்யவந்தன் என்பவன், பெருந்துறையில் நெடுநாளாய் வளர்ந்தவன். மன்னனிடம் பல வேலையாட்களிருந்தும், உள்ளூரான் ஒருவன் இருக்கவேண்டியது கட்டாயமானதால், ஸத்ய சீலனான இவனை மாதம் பத்துப் பவுன் சம்பளங்கொடுத்துத் தன்னிடம் அமர்த்தியிருக்கின்றான். மன்னன் கட்டளையிட்டவண்ணமே அவ்வீடு ஆயிரம் பவுன்களுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது.

மறுநாட் காலையிலெழுந்த வரசன், ஸத்யவந்தனை நோக்கி, "நமதாட்களிற் சிலருடன் உடனே சென்று, அவ்வீட்டைச் சுத்தப்படுத்திவை. ஸாயங்காலம் நான் அவ்விடம் வருகின்றேன்" என்றான். இதனைக் கேட்டவுடன், "மன்னா, மன்னிக்கவேண்டும். அவ்வீட்டிற்குள் போகவேமாட்டேன். மனிதர் நுழையக்கூடிய வீடாயிருந்தால், இதுகாறும் காலியாயிருந்திருக்குமோ? அவ்வீட்டைப்பற்றி நினைக்கும்பொழுதே, எனது நெஞ்சும் மார்பும் படபடவென் றடித்துக்கொள்கின்றன!" எனக் கொ

பிய ஸத்யவந்தன், கைகால் நடுக்கமுற்று நின்றான். இவ்வலங்கோலத்தைக் கண்ட காவலன், அவனைத் தேற்றித் தானும் அவனுடன் வருவதாகச் சொன்னான்.

அந்தி மணி நான்குக்கு அவ்வீட்டு வாயிலில் வேந்தனும் ஸத்யவந்தனும் நின்றார்கள். அவ்வீட்டின் கதவு திறக்கப்பட்டது. அரசன் உள்ளே சென்றபொழுது, பின் தொடராமல் நின்ற ஸத்யவந்தனை, வாவென்றழைத்தான். சட்டெனத் திடுப் படியவேண்டியவன், “ஆ, மன்னா! என்னையுமழைக்கின்றீர்களே!” எனச் சொல்லி நடுங்கிக்கொண்டுள்ளே சென்றான். பிறகு அவ்விருவரும் அவ்வீட்டைச் சுற்றிப்பார்த்துப் பின்புறம் போய், சுற்றிலும் பெரிய சுவர் எழுப்பப்பட்டிருந்த விஸ்தாரமானவொரு கொல்லையைக் கண்டார்கள். இவர்கள், அக்கொல்லையின் ஓர்புறஞ் சென்றபொழுது, ஸத்யவந்தன் அதிகம் நடுங்கினதைக் கவனித்த காவலன், “அடாடா! ஏன் நடுங்குகின்றாய்? பாழ் வீட்டில் நுழைவதற்கு இப்படிப் பயப்படுவாருமுண்டோ!” என்றாச்சர்யத்தோடு வினவினான்.

ஸத்யன்:—“மன்னவா, இஃது பாழாயிருந்தது மாத்திரமல்ல!”

அரசன்:—“பயத்திற்குக் காரணம் வேறுண்டோ?

ஸத்யன்:—“நினைக்கும்பொழுதே நடுங்குகின்றேன்!”

அரசன்:—“எல்லாவற்றையும் விளங்கச் சொல்; பயப்படாதே.”

ஸத்யன்:—“மஹாராஜா, வஞ்சகமின்றிச் சொல்லிவிடுகிறேன். இதனைச் சொல்லுவதால், யான் பெருங் குற்றவாளி யாவேனாதலால் இதுகாறும் வெளியிட்டவனல்லன். மன்னா என்னைக் காப்பாற்றுங்கள்.”

அரசன்:—“ஒன்றுக்கும் அஞ்சாமல் ஸத்யவந்தனென்ற பெயருக்கேற்றபடி உண்மையைத் துரிதமாய்ச் சொல்; நேரமாகின்றது.”

ஸத்யன்:—“அரசே, இந்நகரத்தலைவரான ராஜபூஜித சரவணர், எனக்குப் பெருங்கேடு செய்தார்! நிரபராதியான எனக்குப் பத்துப் பவுன் அபராதம் போட்டார்! அச்சரவணர் தனது

இளையாளாகிய காமினியம்மாளை மணக்கும்பொழுது, என்னைக் கூலிவேலைக்கழைத்தார். இழிதொழில்களைச் செய்வது என் குடும்பத்தாரின் வழக்கமல்லவாதலின் நான் மறுத்தேன்! நான் அபராதியானதற்குக் காரணமிஃதேயன்றி வேறல்ல. எனக்கும் என் குடும்பத்தார்க்கும் அந்யாயமாய் அவமானஞ் செய்வித்த அவனைத் தண்டிக்க ஸமயம் பார்த்துவந்தேன்.

" இவ்வீட்டிற் குடியிருந்த அவ்வயோக்கிய சிகாமணி, தற்காலங் குடியிருக்கும் வீட்டிற்குப் போய்விட்டான். அதோ, தெரிகின்றதே அவ்வீட்டிலிருந்த ஒரு தட்டுவாணியும், தத்தாரித் தலைவரும் இக்கொல்லையிற் கூடுகிற விஷயம், எனக்குத் தெரிந்திருந்ததால் ஓரிரவு தடியுங் கையுமாக இவ்விடம் காத்திருந்தேன். எனக்கிருந்த வயிற்றெரிச்சலை யாற்றக்கூடவில்லை! நடுநிசியில் ஒரு சிறு பெட்டியுங் கையுமாகச் சரவணன் இங்குவந்தான்! எனக்குக் கோபம் விஞ்சியிருந்ததால் கொஞ்சமும் அஞ்சாமல் தடியினால் ஒரே அடியா யடித்தேன்! அப்பாதகன், ஐயோவென் றலறிக்கொண்டு வீழ்ந்தான்! நான் அவனைப் புரட்டிப் புரட்டியடித்த பிறகு, இறந்திருப்பானென வெண்ணியும், யாராவது கண்டுகொள்வார்களோ எனப் பயந்தும், கீழே கிடந்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு வீடுவந்துசேர்ந்தேன். என் கோபமும் ஒருவாறு ஆறிற்று. அப்பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது, ஆச்சர்யம்! ஒரு சிறு ஆண்குழந்தை களைப்புற்று அழவுஞ் சக்தியற்றுக் கிடந்தது! என் வீட்டில் என் தமக்கையுமிருந்தாள். வாலிபத்திலேயே கைம்பெண்ணான வவளுக்கு ஸந்ததியில்லாமையால், அக்குழந்தையை வளர்க்க வாரம்பித்தாள். என் பயத்திற்குக் காரணமெல்லா மிதுதான்."

அரசன்:—"இந்த மதியீனனையா தலைவனாகத் தெரிந்தெடுத்தார்கள்! நிரம்ப அழகு! இவனுடன் கூடிய அம்மாதின்பெயர் யாதெனத்தெரியுமோ? அக்குழந்தை அவளுக்குத்தான் பிறந்திருக்கும்."

ஸத்யன்:— "மஹாராஜா, மாயாவதியெனச் சொல்வார்கள். அக்குழந்தை யாருக்குப்பிறந்ததோ, யான் எவ்வாறு நிச்சயமாய்ச் சொல்லக்கூடும்?"

என ஸம்பாஷித்த பிறகு, அவ்வீட்டின் வாயிற்கதவைப் பூட்டித்தங்களிருப்பிடஞ் சென்றார்கள்.

ஓர் நாட் காலையில், மேற்குறித்த வீட்டினுள் பதினெட்டு வாத்தியங்களும் முழங்கின. அவ்வீடு மங்களகரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்நகரத்திலுள்ள கனதனவான்களனைவரும் அங்கு வந்திருந்தார்கள். கொலுமண்டபம்போல் விளங்கிய கூடத்தின் மத்தியில் வீற்றிருந்த மன்னன், அங்கிருந்த கூட்டத்தை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்:—

“ஸபையோர்களே, யாரோ அபிராமன் என்ற ஓர் மாலுமி, வாங்கிக்கட்டிய வீட்டைச்சில மாதங்களுக்கு முன்நான் ஏலத்தில் எடுத்திருக்கின்ற விஷயம் எல்லோருமறிந்திருக்கலாம். அவ்வீட்டை ஏலத்திலெடுக்கும்பொழுது, என் ஆட்களிலொருவனான ஸத்யவந்தனென்பவன், அவ்வீட்டை வாங்கியவன் பாழாய்ப்போய்விட்டானென்றும், அதில் வஸிப்பவர்களுக்கு ஒரு நாளும் நன்மை யுண்டாகாதென்றும் சொல்லித் தடைசெய்தான். இவ்வீட்டைப்பற்றியும் உள்ளூரானான அவனுக்கு அநேக அபிப்பிராயந்தான். க்ஷத்ரிய ஜாதிக்கு உரிய ஓர் முரட்டுத்தைரியத்தால் துணிந்து இவ்வீட்டையும் வாங்கினேன். நண்பர்களே, கவனியுங்கள். இதனைப்பழுது பார்த்தபொழுது, ஒரு சிறு பெட்டியில் குழந்தையின் எலும்புகள் காணப்பட்டன!” என்றுரைத்தான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டிருந்த வெல்லோரும், சரவணன் மிகச் சற்குணனென்றும், அவனுக்குச் சொந்தமாயிருந்த இவ்வீட்டில் வேறு யாரோ சிசுஹத்தி செய்திருக்கவேண்டுமென்றும், சொல்லிக்கொண்டே சென்றார்கள்.

## அத்யாயம் உச.

### மித்ரபேதம்.

வேந்தன் வாங்கிய புதிய வீட்டில் க்ருஹ ப்ரவேசம் நடந்தேறியவன்று, அம்மன்னன் சரவணன் வீட்டிற்குச்சென்றான். அங்கிருந்த காமினி, "மன்னா, தாங்கள் எனக்கு, முன் சொல்லிய விஷயங்களைப்பற்றி யோசித்த பொழுது, அவைகளுக்கு அவ்வளவு வீர்யமில்லையெனத் தோற்றுகிறது." என்றாள்.

அரசன்:—"அப்பொழுதே யான் சொன்னேனே. அம்மருந்துகள், மிகமெதுவாய் வேலை செய்யக்கூடியவை. அப்படியல்லாமல், உடனே கொன்றுவிட்டால் குற்றம் வெளிவந்துவிடாதா? அது இருக்கட்டும்; நீ கவலைப்படவேண்டியபல விஷயங்களிருக்க, வைத்யத்திலாசை வைத்திருக்கின்றாயே, உன்னைப்போல் பேதையை யான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!"

காமினி:—"யாதொரு காரணம் பற்றியும் நான் கவலைப்படவேண்டியதில்லையே!"

அரசன்:—"ஐயோ, பரிதாபம்! இக்காலத்துப் பெண்கள், இப்படியே மாற்றப்படுவதை யான் பார்த்ததில்லை!"

காமினி:—"அரசே, என்ன விஷயம்? எனக்குக் கொஞ்சமேனும் விளங்கவில்லை."

அரசன்:—"உன்னிடமிருக்கிற இரக்கத்தால், இப்பொழுதுக்ருஹப்ரவேச முகூர்த்தம் நடந்தவுடனே புறப்பட்டுவந்தேன். அவ்வேலையில் வந்திருந்த உன் கணவனும், மாயாவதியும் மத்தியில் ஓடிவிட்டார்களே! நீ கவனிக்கவில்லையா? எங்குச் சென்றார்கள், ஏன் போனார்கள்; இதனை ஊகிக்கவியலாத வுனக்கு, நான் சொல்லலாமோ?"

காமினி:—" எனக்கொன்றுந் தோன்றவில்லையே! என் தோழியாகிய மாயாவதி யாது செய்தாள்?"

அரசன்:—"தோழியா! மாயக்காரியாயிற்றே, அம்மாயாவதி! நீங்களிருவரும் ஸவாரி செய்வதும், நெருங்கிப் பழகுவதும், வெகு நேர்த்தி! அவள், உன் கணவனை வசப்படுத்திக்கொண்டாள்!"

காமினி:—"அடி பாதகி, இது உண்மையாயிருக்குமாயின், அவளைச் சும்மா விடுவேனோ!"

அரசன்:—"ஆனால், ஸந்தேகமோ? இன்று அந்தி ஆறு மணி முதல் உன் கணவன் தங்கும் அறைப் பக்கம் நின்றுபார். நீயே தெரிந்துகொள்வாய்."

காமினி:—"என்னமோ ஸர்க்கார் கார்யஞ் செய்கின்றார், என நினைத்து, அந்த அறைக்குள் இதுகாறுஞ் சொல்லாமலிருந்தேன். மாயாவதியுடன் மன்மதனுடைய மகிமைக்கச்சேரியா நடக்கின்றது!"

எனச்சொல்லிக் கோபாவேசத்தோடு உள்ளே சென்றாள்! அரசனும் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

காமினிக்குக் கவலைமேலிட்டது. பெட்டியையும் அஸ்திகளையுங் கண்டதாகச் சொன்ன மன்னனது வசனத்தால் மாயாவதிக்குப் புத்ரசோகம் மேலிட்டது. இவ்விஷயத்தைக் குறித்துத் தன் ஆசை நாயகனாகிய சரவணனிடம் முறையிட வேண்டிய ஆவலுடன் அந்திப் பொழுதை இவள், எதிர்பார்த்திருந்தாள்.

கச்சேரியிலிருந்து வந்த சரவணன், வழக்கம் போல் தன்னறைக்குள் உட்கார்ந்து, "இஃதென்ன தொந்தரை! மாயாவதியிடம் அவளது மகன் உயிரோடிருப்பதாகச் சொன்னேனே. நானும் அப்படியே நம்பியிருந்தேன். என்னையடித்துத் தள்ளிப் பெட்டியை யெடுத்துச் சென்றவன், மறுபடியும் அவ்விடத்தில் புதைத்திருக்கலாம். இல்லாவிடில், அக்குழந்தையைக் கண்டுபிடிக்க யான் பட்டபாடெல்லாம் வீண்போமோ! பொன்மண்டல மன்னன் சொல்வது பொய்யாகாது?" எனச்சிந்தித்துக் கொண்

டிருந்தபொழுது, அவ்வறையிற் போட்டிருந்த கட்டிலின் அடிப்புறத்திலோர் பலகை தானாகவே நகர்ந்ததும், சிறு படிகளின் வழியாகக் கண்ணுங் கண்ணீருமாய் மாயாவதி அங்குவந்து நின்று, "பாபி, அந்யாயமாய் என் கண்ணான குழந்தையைப் புதைத்ததுமல்லாது பேதையாகிய என்னிடம் பொய்யுஞ் சொன்னாயே! கொலைபாதகனான உன்னை என் ஆசை நாயகனாக நம்பியிருந்தேனே! நான் ஒரு மதிகெட்டவள்!" எனப் புலம்பிக்கொண்டே மொழிந்தாள். மாயாவதியை சமாதானஞ் செய்யச் சரவணன் எப்பாடுபட்டும், அவள் ஓயாது தேம்பித்தேம்பி யழுதுகொண்டு, "என் கண்ணப்பா, மண்ணுக்கா இரையானாய்!" எனச் சொல்லித் துடிதுடித்துக் கீழே வீழ்ந்தாள்.

நெடுநாளாய்த் தான் நேசித்த மாயாவதி படும் புத்ரசோகத்தைக் கண்டும், தானிழைத்த குற்றத்தையுணர்ந்தும், "அயி, ப்ராண நாயகி, நான் வஞ்சகமாகச் சொல்லியது வாஸ்தவம். இப்பொழுது, உண்மையைச் சொல்லிவிடுகின்றேன், கர்ப்பிணியாயிருந்த உன்னை ஆறமத்தம் ஒளித்துவைத்திருந்து, நீ ப்ரஸவித்ததுடன், என் பதவிக்குக் குறைநேர்ந்து, அபவாதம் பிறவாதிருக்கவென்று, அக்குழந்தையை புதைத்துவிடத் துணிந்தேன். இவ்வெண்ணத்தோடு, குழந்தையை வைத்துமூடியிருந்த பெட்டியுடன் அவ்வீட்டின் பின்புறஞ் சென்ற பொழுது, யாரோ ஒரு கடியன் என்னைக் தடியாலடித்தான். நான் கீழேவீழ்ந்து இறந்தவன்போற் கிடந்தேன். அவன் பெட்டியைத்தூக்கிக்கொண்டு ஓடினான். வலது கன்னத்திற்கரிய ஒரு மச்சமுள்ள அக்குழந்தையின் அடையாளத்தைக் கவனித்துத்தேடினேன். எவ்வளவு ப்ரயாஸைப்பட்டும் என் முயற்சிவீணே போயிற்று! அக்குழந்தை எவ்வாறு அகப்படும்? பெட்டியைத்தூக்கிச் சென்றவன், சிசுவைக்கண்டு பயந்து, மறுபடியும் அவ்விடத்திலேயே புதைத்திருக்க வேண்டும்! யான் என் செய்வேன்!" எனச் சொல்லிய சரவணன், மாயாவதியின் கால்களில் வீழ்ந்து கெஞ்சினான். இதனைக் கண்ணுற்ற மாயாவதி, "பாதகா, உன்னை நம்பி என் பெற்றோரையிழந்தேன்! ஒருவருமறியாமல் பல நாள் பாழ் வீட்டிலிருந்ததாலும், கர்ப்ப காலத்திலென் சரீரம் மாறி

விட்டதாலும் ஏற்பட்ட புதிய வேஷத்தோடு, உதயமார்த்தாண்டனை செட்டியாரை மோசஞ்செய்த பந்துத்ரோஹியாகிய வீரன் செட்டியாரை யறுகினேன். அவ்வாறு குறுதிசயங்களை யெல்லோருமறிந்திருந்தால், விவாஹமில்லாமலிருந்த ஆசிசெட்டியார், என் குலத்தையும் வயதையுங் கவனியாமல் என்னை மணந்து கொண்டார். ஐயோ! என்னருமைப் புதல்வனைப்பற்றியல்லவா தினந்தோறும் உன்னிடம் வந்துபோனேன்! மண்ணிற் போன என் கண்மணியை மறுபடியும் அழைப்பதாகச் சொன்னையே! மஹாபாபி," எனப் புலம்பிப் பலவாறு நிந்தித்தாள்.

“ ஒருகுல மகளை மலர்மிசைத் தேவும்
உணர்த ராக்காட் டிடை மறைந்தான்.
அருகுறு நுண்ணிடைநிற் கஞ்சியே யன்றோ!”

“அம்மா, பார்வதி, சிறிய இடையோடு பக்கத்திலிருக்கிற உனக்குப் பயந்து, வேறு ஒருத்தியை (கங்கையை) சிவபிரான், தாமரையில் வீற்றிருக்கிற நான்முகக்கடவுளும் அறியவொண்ணாத காட்டில் ஒளித்து வைத்திருக்கின்றார்!” எனப் பொருள் படுகிற மேற்குறித்த செய்யுளை, திரிசிரபுரம் மஹா வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்களியற்றியுள்ள ‘அகிலாண்ட நாயகி மாலை’ என்ற நூலில் காண்கின்றோம். நான்முகக் கடவுள் அன்னப்பறவை யுருவெடுத்து உயரப் பறந்தும் பார்க்கவியலாத ஜடா பாரத்தைக் காடென்றார். அந்யஸ்திரீயை யடைந்திருக்கிற விஷயத்தில், எல்லாம் வல்ல ஈசனே பயந்திருக்கின்றாரென்றால், சரவணனுடைய வதிகாரம் காமினியிடஞ் செல்லுமோ?

தினந்தோறும் சரவணன் மாயாவதியை ஸந்திக்கும் ரஹஸ்யத்தைப் பொன்மண்டல மன்னன் வெளியிட்டுவிட்டதால், கதவண்டையில் நின்றிருந்த காமினி, அங்கு நடந்ததையெல்லா மறிந்தாள். மாயாவதியின் நிந்தனைகளும், சரவணனது வந்தனைகளும் இவளுக்குக் கோபத்தை விளைவித்தன. அடக்கக்கூடாத ஆவேசத்துடன், “யாரடி அங்கே! குச்சுக்காரி முண்டே! உன் உச்சந்தலையில் சாணத்தைக் கரைத்துக் கொட்டுகிறேன்!” எனக் கதறிக்கொண்டு கதவைப் படபடவென்றடித்தாள். இச்சத்தங் கேட்டவுடன், மாயாவதி மிகுந்த பரபரப்புடனெழுந்து,

திருட்டு வழியின் மூலமாயிறங்கிச் சென்றாள். காமினி, ஓயாமல் கதவைத் தட்டிக்கொண்டு நின்றதால், சரவணன், "அடீ, பேய் முண்டே! ஏன் அலறுகின்றாய்? உனக்குப் பிசாசா பிடித்திருக்கின்றது?" எனக் கோபத்தோடுரைத்துக் கதவைத் திறந்தான். மிகுந்த அவசரத்துடன் உள்ளே நுழைந்த காமினி, அங்கு வேறு ஒருவரையுங் காணாது திகைத்து, "அடே, மோசக்காரா! என் உண்மையான கணவனானால், கடவுளையுங் கையெடுத்துக் கும்பிடாத நீ, மாயாவதியை,—உன் ஆசை நாயகியை—விழுந்து, விழுந்து நமஸ்கரிப்பாயா? இக்கண்களாற் கண்டேனே! இங்கு படுத்துக்கொண்டு புரண்டவள் எங்கு போவாள்! என்ன புதுமை! ஏதோ மாயஞ் செய்துவிட்டாளே, அந்த மாயாவதி! இனி நான் உன்னை மதிப்பேனோ! உன் அதிகாரத்தால் வந்த தலையெடுப்பா இந்த அக்ரமம்! அடே, பாதகா, ஒரு மனிதனா நீ?" எனப் பலவாறு நிந்தித்தாள்.

சரவணனுடைய மனக்லேசம் யாருக்குண்டு? இவன் அனுபவித்துவந்த மாதரிருவரும் இவனது தீச்செயல்களை யறிந்துவிட்டதால் நீங்காத் துயரடைந்தான். ரஹஸ்யம் வெளியாயிற்று!

## அத்யாயம் ௨௫.

### சித்ரசேனன்.

"அப்பாடா, ஒரு வேலை நிறைவேறிற்று! நகரத்தலைவனிடம் ஒரு ஆணும், பணக்காரனான செட்டியினிடம் ஒரு பெண்ணும் பெற்று, அவ்விருவரையுங் கைவிடாது நேசித்துவந்த மாயாவதியல்லவோ கெட்டிக்காரி! இம் மாயாவதியும் வீரன் செட்டியுமிருக்கும் அந்யோந்யம்,—குதிரை வ்யாபாரத்தில் கையைப் பிசைந்துகொண்டானே,—அப்பொழுதே தெரிந்துளேன்! ஞானசுந்தரியும், குருநாதனும் குமரனிடம் வைத்திருந்த ப்ரியத்தைக் கல்யாணப் பேச்சினாலும், பத்திரிகையில் யான் எழுதிய

விஷயங்களாலும் குலைத்துவிட்டேன். சரவணன் கதையைக் கேட்கவும் வேண்டுமோ! புத்ரசோகத்தால் மாயாவதியும், கள்ளப் பெண்சாதியைக் கண்ணுற்கண்ட காமினியும் அவனைக் கைவிடுவது திண்ணம். எனக்காகாதவர் மூவருக்கும் வீட்டில் இன்பமில்லாது செய்தது எனது முதலாவது வேலை. இதனோடு இவர்களை விட்டுவிடுவதா! ஸத்யவந்தன் ஸஹோதரியை ஸந்தித்து, அவள் வளர்த்து வருகிற பையனைப்பற்றிக் கேட்டுச் சரவணனைச் சந்தியில் நிறுத்தவேண்டும்." எனப் பொன்மண்டல மன்னன், ஒரு நாள் சிந்தனை செய்துகொண்டிருந்தான்.

"நகரெங்கும் உலவுகின்ற உத்தம மன்னன், நமது மனைக்கு வருவானோ!" எனப் பல நாள் எதிர் நோக்கியிருந்து அவ்வேந்தனையழைக்கக் கூசியிருந்த வேலைக்காரனான ஸத்யவந்தனை மன்னன் அழைத்து, "இன்று மணி ஐந்துக்கு உனது வீட்டிற்கு வருகின்றேன். உனது முகஜாடையால் என்னை நீ, அழைப்பதாகத் தெரிந்துகொண்டேன்." எனக் கூறினான். "ராஜாதிராஜா, மிக வறியனான நான், எவ்வாறழைப்பதென்றிருந்தேன், என் பாக்யமே பாக்யம்!" எனச் சொல்லிய ஸத்யவந்தன், விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்கேகி, அரசன் வரவையெதிர்பார்த்திருந்தான்.

அந்திமணி ஐந்தடித்தபொழுது, வேந்தன் அவ்வீட்டினுள் நுழைந்து, அன்போடு அவன் கொடுத்த சில தின்பண்டங்களைத் தின்ற பிறகு ஸந்தோஷமாய்த் தாம்பூலந்தரித்துக் கொண்டிருக்கையில், ஸத்யவந்தனை நோக்கி, "பெட்டியிற் கொணர்ந்த பிள்ளையை உன் தமக்கை வளர்ப்பதாகச் சொன்னாயல்லவா; அப் பையன் எங்கே? அவன் வைக்கப்படிருந்த பெட்டியையும், என்புகளையும் யான் கண்டதாகச்சொல்லியது, அவைகளைச் சோதிக்கவென்றே!" என வினவினான். இதனைச் செவியுற்ற ஸத்யன், "அரசே, அவனால் நானடைந்த அவமானம் போதுமானது! என் தமக்கையின் ஸ்வீகாரபுத்ரனென்றும், மஹா அயோக்யனென்றும் எல்லோரும் தூற்றும்படி செய்கிறான்! பலகாலாடிப்பயல்களுடன் சேர்ந்து, கொள்ளையடிப்பதற்காக வேறு நாட்டிற்கு அவன் சென்றிருக்கவேண்டும்: இனி, அவன் வருவது துர்லபம்! எனக்குப்பளுவிட்டது!" என

சந்தோஷத்தோடுரைத்தான். இதனைக்கேட்ட வேந்தன், "நன்றாயிருக்கின்றது. இஃதோராச்சர்யமா? அவன் சாவணனுக்குப் பிறந்தபிள்ளைதானே! மறந்து விட்டாயோ? விதையொன்று போடச் சுரையொன்று காணுமோ? அஃதிருக்கட்டும்; உனக்கென்ன, கவலையற்றிருக்கின்றாய்! வளர்த்தவனுக்கல்லவா வருத்தம்! எங்கே உன் தமக்கை?" என்றவுடன், கிலேசத்தாற் குறைந்து, சலைதப்பற்றில்லாத சரீரத்தோடு ஒரு கைம்பெண் அவ்விடம் வந்து மிகுந்த நாணமுற்று நின்றாள். அவளைக்கண்டவுடன், "அம்மா, மிகப்பரிதாப நிலையிலிருக்கின்றீர்களே! பையனைப்பிரிந்த கவலைதான்! தெரிந்து கொண்டேன்." என அரசன் செப்பினன். பிறகு, அக்கைம்பெண், தனது கதையைச் சொல்லத் தொடங்குகின்றாள்:—

"ஸ்வாமி, குழந்தை விக்ரமஸேனனைக்காணாத துக்கத்தை யாரிடம் சொல்லியாற்றுவேன்! ஐயோ! சிறு குழந்தை, யாது ...ந்தாற் பசிவாராதோ! எனக்கொன்றும் ஓடவில்லை! மூன்று மாஸமாயவனைக்காணமற் கவலையுறுகின்றேன்! இனி அவனைக் காணாவிட்டால் என் உயிர் தரியாது! இம்மாதிரி அவன் ஒருபோதும் ஓடியதுமில்லை. சில இரவுகளில் மறைந்திருப்பானே தவிரப்பல நாள் என்னை விட்டுப்பிரிந்ததுமில்லை! அவன் இப்படி மறைந்துபோய்விட்டது புதுமை! தம்பி ஜயன், அவனை வெருட்டி விட்டான்! நான் என் செய்வேன்?

"மன்ன, நான் என் புருஷன் வீட்டிருந்துச்சென்று, சில நாட்களின் வாழ்வதற்குள் என் கணவன், என்னைப்பறக்கவிட்டுப் பரலோகஞ் சென்றார்! தம்பி ஜயனுக்கும் எனக்கும் வேறு யாருமில்லாமையின், அநாதிகளாகிய நாங்களிருவரும் அவ்வீட்டிலேயே தங்கினோம்.

"மஹாப்ரபு, புருஷனையிழந்த பெண்களில் என்னைப்போல முன்றவள் ஒருத்தியுமிராள்! விடியற்காலத்திலெழுந்து வீட்டு வேலையையுமே செய்ய வேண்டும், அப்பொழுது என் முகத்திலொருவரும் விழிக்கக்கூடாதாம்! நானும் பயத்துடன் தூங்கித் தூங்கிக்காரியங்களைச் செய்வது வழக்கம். ஒரு நாள், என் கணவனுடைய தம்பி, என் முகத்தில் விழித்ததோஷத்தால், பாட

சாலையிற் பிரம்படிபட்டானும். அவன் வீட்டிற்கு வந்தவுடன் தன் தாயையழைத்து—அம்மா இந்த மொட்டைச்சி முகத்தில் விழித்து இன்றையான் பட்டபாடு போதும், போதும்!—என முறையிட்டழுதான்.

“வீட்டிற் படிக்காமல் பாடசாலைக்குச்செல்லும் மாணாக்கன், உபாத்யாயரால் தண்டிக்கப்பட்டால், தான்படிக்காமற் சென்ற குற்றத்தை மறந்து பூனை குறுக்கிட்டது, யாரோ ஒருவர் தும்மினார், எனப் பல அபசகுனங்கள் தனக்கு நேர்ந்ததாகச் சொல்வது வழக்கமல்லவா?”

“மகன் அழுவதைக்கண்ட மாமியார், அநாதையான என் தலையில் நறுக்கெனக் குட்டி,—மூதேவி, தொலையடி வீட்டை விட்டு! நீ வந்து நுழைந்தது முதல் என் கண்ணான குழந்தைகளுக்கெல்லாங் கஷ்டமே! பரதேசி முண்டே!—எனப் பற்களைக் கடித்துக்கொண்டும் என் கன்னங்களிலிடித்துக்கொண்டும் சொன்னாள். யாதொரு தீங்குஞ் செய்யாத நான், நாளொன்றுக்குப் பலமுறை யடிபடுவேன். இவ்வாறு படாதபாடெல்லாம் பட்டு, முடிவில், நானும் என் ஸஹோதரனும் இவ்வூர் வந்து சேர்ந்தோம். ஸத்யவந்தன் ஒரு கடையில் கணக்கு எழுதியதாற் கிடைத்த சம்பளத்தைக்கொண்டு எங்கள் காலத்தைக் கழித்தோம். மன்னவர், என் தம்பி, தங்களை யண்டிய பிறகு, எங்களுக்கோர் குறையுமில்லை. ஆனால், சித்ரஸேனன் வந்துவிட்டால் மனக்கவலையற்று இன்புற்று வாழ்வேன். அவன் பிரிந்த பிறகு, இதோ தொங்குகிற அவன் உருவப் படத்தையும், அவனைக் கண்டெடுத்த அப்பெட்டியையும் பார்த்துப் பார்த்துப் புலம்புகின்றேன். சித்ரனும், ஸத்யனுந்தானே எனக்குக் கதி!” என மொழிந்து அழுதாள். துக்ககரமான இச்செய்திகளைக் கேட்ட மன்னன், “அம்மா, நீங்கள் வளர்த்த பையன், நாளை இரவுக்குள் வந்துசேரும்படி என் ஆட்களை இப்படத்தோடனுப்புகின்றேன். பிறகு, அவனை என்னிடம் வைத்துக்கொள்கிறேன்.” எனச் சொல்லி, சித்ரஸேனன் படத்தைக் கையிற்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

"பரிதாபம்! கைம்பெண்களின் கஷ்டம் மிகப் பரிதபிக்கத் தக்கது! கால வித்யாஸத்தாலும், ஜனங்களின் மதியீனத்தாலும், நமது மத ஸம்பந்தமான நூல்களில், ஸ்திரீகளை நிர்பந்திக்கக்கூடிய நிபந்தனைகள் அந்யாயமா யேற்பட்டனவென்று நினைப்பதற்கிட முண்டாயிற்று! பன்னிரண்டாவது வயதில் ருதுவான பெண்ணுக்கும், பதினைந்து வயதுள்ள ஆணுக்கும் பிறக்கிற ஸந்தானம் எங்கும் பரவிவிட்டதால், ஏறக்குறைய வெல்லோருக்கும் ஆயுள் அற்பமாயிற்று. முன்னோர்களின் வயதும், பலமும் நமக்கில்லாத தற்குக் காரணம் இஃதன்றி வேறில்லை. பெண்களின் ருதுகாலம் பதினாறாவது வயதென வைத்ய நூல்கள் கூறுகின்றன. ஆனது பற்றி, பதினாறாவது வயதிற சாந்தி செய்தால், பிறக்குங் குழந்தைகள் நீண்ட ஆயுளுடையனவாயும், புத்தியுள்ளனவாயுமிருக்கும். அப்பொழுது, தற்காலம்போல் அவ்வளவு விதவைகளிருக்கமாட்டார்களாதலின், கைம்பெண் கல்யாணத்தைப்பற்றிப் புதிதாய் நூலாராய்ச்சி செய்வதற்கு இடமிராது.

"இவ்விஷயத்தைக் குறித்துப் பலர் கூடிப் பேசுகின்றனர். அந்ய மதங்களைப்போலல்லாது என்றுமழியாப்பெரும் புகழ் பெற்ற நமது இந்துமதம் நிலை நிற்குமோ! அல்லது, தந்தையின் பெயர் தெரியாத பிள்ளைகள் இப்பரிசுத்தமான நாட்டில் உலவுவார்களோ! விளங்கவில்லை." என வீட்டிற்குச் சென்ற மன்னன், சில நேரஞ் சிந்தித்தான்.

பிறகு, தன் அந்தரங்க நண்பனை, மாமுண்டி வன்னிமுண்டானை யழைத்து, "இதோ பார்த்தாயா, படத்தை! இப்பையனால் நமதெண்ணங்களை நிறைவேற்றலாம். இப்பையன் இவ்விடத்திலில்லை, எங்கேயோ ஓடிவிட்டான். ஜகந்நாதத்தில் தற்காலம் உத்ஸவமானதால், நீயும் உன் பரிவாரங்களிற் சிலரும் உடனே சென்று, எப்படியாவது அவ்விடத்தில் இவனைக் கண்டுபிடித்துக் கப்பலிலேற்றிக்கொண்டு வாருங்கள். நாளை அந்திக்குள் வந்து சேருமாறு துரிதமாய்ச் செல்லுங்கள்." எனக் கட்டளையிட்டான். இக்கட்டளையை வணக்கத்துடனேற்றுக்கொண்ட வன்னிமுண்டான், "சாமி, நாளை காலமேயே வந்துடுவேங்க; நம்ம பயல்கள் வேலையில்லாமலே கொளுத்துட்டாங்க. இந்தப் பயல்

ஆருங்க?" என வினவினான். "இவனா? வெட்கக்கேடு! அன்று வண்டியிலிருந்து விழுந்தார்களே பேர்வழிகள்; அவர்களில் ஒருத்தியான, வீரன் பெண்சாதியாகிய மாயாவதியம்மாள், தனக்குக் கல்யாணமாவதற்கு முந்தியே சரவணனைப் புணர்ந்து பெற்ற பிள்ளை! பலேதிருடன்." என மன்னன் மொழிந்ததைக் கேட்டு, புன்சிரிப்புடன், "யஜமாங்களே, ஊருக்கு நாட்டாமெக்காரரு ரோக்கியதே நல்லா இருக்குதுங்க!" எனச் சொல்லிய மாமுண்டி வெளிக்கிளம்பினான்.

மறுநாட் காலை எட்டுமணிக்கு, பதினாறு வயதுள்ள வோர் பையனுடன் வந்த மாமுண்டி, மன்னன் முன்னிலை சென்றான். மன்னனும், அவன் சிக்ரஸேனனெனக் கணித்து, "சிக்ரஸேனா, வா, உன்னை வளர்த்தெடுத்த இருவர் மனதையும் புண்படுத்தியவனாய் ஏன் திரிகின்றாய்? இனி அவ்வித நடத்தையை முற்றிலும் மறந்துவிடு; தினந்தோறும் உன் செலவு என்னாகும்?" எனக் கேட்டவுடன் பையன், "எனக்குப் பத்து ரூபாயிருந்தால் போதும்." எனச் சொன்னான். எண்ணிலகப்படாப் பொருள் படைத்த அவ்வேந்தன், அப்பையனுக்கு மாதம் நூறு பவுன் கொடுத்து வருவதாயும், செலவிட்டதுபோக மிகுதியாயிருக்குந் தொகையை வீரன் செட்டியாரின் கடையில் வட்டிக்குப்போட வேண்டியதென்றும், எப்பொழுதும் தன்னிடமே இருக்க வேண்டுமென்றும் சொல்லியனுப்பினான்.

பிறகு, மாமுண்டி, மன்னனை நோக்கி, "மவராசா, இந்தப் பயல் திருட்டுங்க! எஞ்சாமி! எனக்குக்கூடத் தெரியாதுங்க! எத்தனை நவையுங்க! ஒரு ஆபத்தல்லா வந்துட்டுது; ஆரோ நாலு பேரு, இவனைப் பிடிக்க வந்தாங்க! அவுங்களுக்குள்ளே ஒருத்தன் நீக்குச்சி இருக்குதுங்களே, தலைமேலே சேப்பா! அது மாதிரி நிண்டாங்க! பாத்தேனே இல்லையோ, அவுங்களே ஒரே தள்ளாத் தள்ளிகிட்டு, கப்பல்லே ஏறிக்கிட்டு, வேகு வேகு இன்னு ஓடிட்டேங்க!" எனச் செப்பினான். "இவையனைத்தும் உன் மனதிலிருக்கட்டும்; ஒருவரிடமும் வெளியிடாதே." என அரசன், மாமுண்டிக்குச் சொல்லியனுப்பிய பிறகு, தன் ஸங்கல்பத்தை நிறைவேற்றவேண்டிய மார்க்கங்களைக்குறித்து யோசித்துக்கொண்டிருந்தான்.

## அத்யாயம்–௨௬

# அநுபவம்

"குமரன் யோக்யதை யாருக்குத் தெரியாது? வெறுங்குடியன், என் கண்மணி கலாவதியைக் கேட்டானே! என்ன நெஞ்சுகனம்! இவன், தெற்கிலெங்கேயோ இழிதொழில் செய்து பிழைத்தானெனக் கேள்வியுற்றிருந்தேன். மாஸம் பதினைந்து ரூபாய் சம்பளமென்றும் ரத்நகிரியரசனிடம் வேலையென்றும் இவனே என்னிடஞ் சொல்லியிருக்கிறான். என்ன மாயமோ திடீரெனப் பணக்காரனாய் விட்டான்! அவன் ஸங்கதி தெரிந்தயானும், கொள்ளையோ, கொலையோ செய்திருப்பானென்றே நினைத்திருந்தேன். மேலும், அன்று வந்த பத்ரிகையில் எழுதப்பட்டிருந்த அவனது மோசச் செய்திகளையும்படித்தேனோ பிழைத்தேனோ! இல்லாவிடில் அவனுடன் ஸம்பந்தஞ் செய்திருப்பேனே!" எனத் தனக்குள் ஆலோசித்திருந்த ராய்பஹதூர் வீரன் செட்டியார், தன்மனைவியாகிய மாயாவதியை அழைத்தார்.

ஓரிடத்தில் நடந்த கல்யாணத்திற்கு எல்லாப் பந்துக்களும் வந்திருந்தார்கள். கணவனுக்கு மாலைபோடும் பொழுது, மணப பெண்ணைத் தோள்களிற் சுமந்து நிற்கவேண்டியதாய் மாமன் மாத்திரம் வரவில்லை. அங்கிருந்த வொருவர், "அம்மான் எப்பொழுது வருவார்? லக்னம் வந்துவிட்டதே" எனப் பெண்ணின் தந்தையைக் கேட்கவும், 'மாமா வராததைப்பற்றி யென்ன ஸந்தேஹம்? எந்தக்காரியம் எப்படிப்போனாலும், அலறிப்புடைத்துக் கொண்டு கல்யாணப்பந்தலில் வந்து நிற்கமாட்டாரா?' எனப் பெண்ணைப் பெற்றவனுரைத்தான். அலறியடித்துக்கொண்டு விழுவது எதற்கோ விளங்கவில்லை!

இக்கதையைப் போலவே, விவாஹ ஸம்பந்தமாய்ப் பேசுவதற்கென்று கணவனாலழைக்கப்பட்ட மாயாவதியம்மாள், 'என்ன இழவு என் அழைத்தீர்?' எனச் சொல்லிக்கொண்டே அவ்விடம் வந்து நின்றாள்.

வீரன்:—"அடி மூதேவி, குழந்தையின் விவாஹ விஷயமாய்ப் பேசவென்று உன்னையழைத்தால், அசுபமாக வாயாடிக் கொண்டு வந்து நிற்கின்றாயே! முதல் முதல் பெண்ணைக் கேட்கவந்த குமரனும் நானும் அன்று சண்டையிட்டுக் கொண்டோம்! இன்று நீ இழவு எனச் சொல்லி நிற்கின்றாய்! ஐயய்யோ, குழந்தைக்குச் சுபமாக முகூர்த்தம் நிறைவேற வேண்டுமே!'

மாயாவதி:—"உங்கள் வார்த்தை சுபமாயிருக்கின்றதோ? எல்லா மழகுதான்; சிறுத்துப்போ போகும்! ஐயய்யோ குழந்தைக்குக்கல்யாணமா! என்றீர். அது போகட்டும். யாரைப் பற்றியோசித்தீர்கள்?'

வீரன்:—பொன்மண்டல மன்னனிருக்கின்றாரே, அவருடைய வேலைக்காரர்களிலொருவன் ஸத்யவந்தன்; அவனைத் தெரியுமோ? அவனது தமக்கை மகன் ஒரு பையனிருக்கிறான் றான்; அவனைத்தான் யோசித்தேன்.'

மாயாவதி:—'ஐயோடி! இந்தப்புத்திவந்ததே! உங்கள் மூஞ்சி போலவிருக்கின்றது மாப்பிள்ளை பார்க்குமழகு! வயதாயிற் றே குட்டிச்சுவர்போல!'

வீரன்:—"போடி, பைத்யக்காரி, மஹாராஜா அரண்மனையில் வேலையென்றால் கூலி வேலைபோல் நினைத்துவிட்டாயே! அந்தப் பையன் நமது கடையில் ஏராளமான பணம் வட்டிக்குப் போட்டிருக்கிறான். அவன் கொண்டுவருவதெல்லாம் பவுனுக்கும்!"

மாயாவதி:—"அவன் பெயர் என்ன?"

வீரன்:—"சித்ரஸேனன்!"

மாயாவதி:—"பெயரே வெகு சித்ரமாயிருக்கின்றதே! உங்களுக்கு ஸம்மதமானால், எனக்கென்ன ஆக்ஷேபனை. வேந்தன் உங்களுக்கிஷ்டமானவர்; அவர் சொல்லிவிட்டால் விவாஹம் நிறைவேறுவதில் தடையென்ன?"

என மொழிந்த மாயாவதியின் சொற்களுக்கிணங்கிய வீரன் செட்டியார், பொன்மண்டல மன்னனிருக்கிறவரண்மனையிற்

புகுந்து, மன்னன் கொடுத்தவோராஸனத்திலுட்கார்ந்தார். பிறகு வேந்தன், அவன் வந்த காரணத்தை வினவினதால், தன் மகள் கலாவதியைச் சித்ரஸேனனுக்குக் கொடுப்பதாகச் செட்டியாருரைத்தார். இம்மொழியைக் கேட்ட மன்னன், மிக ஸந்தோஷத்துடன் ஸம்மதித்து, ஸத்யவந்தனை அவனது ஸஹோதரியுடன் வரவழைத்து, அவ்விருவரும் ஸம்மதித்தால், முகூர்த்தம் வைக்கத் தீர்மானித்தான். அம் முகூர்த்தமும் மறுநாட் காலையிலேயே நிர்ணயிக்கப்பட்டது.

கல்யாண கார்யங்கள் துரிதமாய் நடந்தன. ஸத்யவந்தன் வீட்டு வாயலில் பெரிய கொட்டகையொன்று போடப்பட்டது. அவ்வீட்டில் வாத்யகோஷங்கள் முழங்கின. அன்று இரவிலேயே வீரன் செட்டியாரின் மகளாகிய கலாவதியை ஸத்யவந்தனில்லத் திற்கழைத்தார்கள். மிகக் குதூஹலத்துடன் எல்லோரும்விருந்துண்ட பிறகு, மறுநாட்காலையிலாகவேண்டிய முகூர்த்த காரியங்களை உபய ஸம்பந்திகளும் செய்துகொண்டிருந்தார்கள்.

நிமிஷநேரமும் ஓரிடத்தில் நில்லாது உலகெலாங் கங்காணிக்குங் கதிரவன், அண்ணனுந் தங்கையுஞ் செய்துகொள்ளப்போகிறவிந்தையான விவாஹத்தைக்காண ஆவலுடன் வருபவன்போலுதயமானான். மங்கள ஸ்நானஞ் செய்து மாப்பிள்ளைக் கோலத்தோடிருந்தான் சித்ரஸேனன். ராவ்பகதூர் வீரன் செட்டியாரின் மகளுக்கு நடக்கப்போகின்ற கல்யாணத்தை வர்ணித்து முடியுமோ! அவ்வூர் கனதனவான்களனைவரும் அங்கு கூடினார்கள். நூதன வஸ்த்ரங்களையும், ரத்னாபரணங்களையும், பழம், புஷ்பம் முதலிய மங்கள வஸ்துக்களையுங் கொணர்ந்து, கல்யாணப் பந்தலைப் பலர் நிரப்பினர்; வைர நகைகளைப் பூட்டிப் பட்டாடைகளணிந்த பல மாதர் ஓர் புறம் நின்றார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் ஊசலில் உட்கார்ந்தார்கள். ப்ரோகிதர் ஹோமஞ்செய்தனர். அங்கிருந்த முதியோர் ஒவ்வொருவராய்க் கைநிறைய வக்ஷதையெடுத்துத் தம்பதியினெதிரில் நின்று ஆசீர்வதித்தபிறகு, சித்ரஸேனன் தாலியைக் கையிலேந்திப் பெரியோரை நமஸ்கரித்துக் கலாவதியின் ஸமீபஞ் சென்றான்.

சுபகரமான அவ்வேலையில், கையும் விலங்குமாகப் பல ஸேவகர் அவ்வீட்டில் நுழைந்தார்கள். அங்கிருந்தவர் அவ் வீரரைக் கண்டு திரும்புமுன், கையிலிருந்த தாலியைக் கீழே எறிந்து, ஓடினான் சித்ரஸேநன். அங்குவந்த வீரர்கள், "பிடி! விடாதே!" எனக் கத்திக்கொண்டு அவனைப் பின்றொடர்ந் தார்கள்.

விபரீதமாய் விவாஹத்திற்கு விக்நம் விளைந்த காரணத்தை யுணராமல், தனக்கு நேர்ந்த அவமானத்தால் முகத்தை மூடிக் கொண்டு, மாயாவதி, கலாவதி இவ்விருவரோடும் வீட்டிற்கு ஓடிய வீரன் செட்டியாரைத் துக்கங்கேட்ட பிறகு எல்லோருந் தத்தமிருப்பிடஞ் சென்றனர். வீட்டில் நுழைந்த வீரன் செட்டி யார், தனது பொருளனைத்தையுஞ் செலவிட்டாவது அவ்விவா ஹத்தை யன்றே நிறைவேற்றுவதாகச் சபதஞ் செய்து, நாட்டுத் தலைவரான சரவணருடைய ஸபையை நாடிச் சென்றார்.

ஸத்யவந்தனது ஸஹோதரியும் வேந்தனிடஞ் சென்று "மன்னா, குழந்தைக்குக் கல்யாணமென்று ஸந்தோஷித்தேனே, எனக்குக் கொடுத்துவைக்கவில்லையே! அவனைத் துரத்திச் சென்ற ஸேவகர்கள் யாது செய்கின்றார்களோ!" எனப் புலம் பிக் கண்ணீர் சொரிந்து நின்றாள். சித்ரஸேநனைக் காப்பதாக வாக்களித்த வேந்தன், இப்பரிதாபத்தைக் கண்டு, "அம்மா, அழ வேண்டாம். காசு பணமுங் கொடுத்துக் கல்யாணத்திற்கும் ஏற் பாடு செய்தேன். ஒரு ஸமயம் அப்பயல் செய்த வேலையைக் கேளுங்கள்! ஓரிவு குடிகாரனை குணசீலனுடன் சேர்ந்து, என் மனையிற் புகுந்து கொள்ளையிடத் துணிந்தான்! இருண்ட அவ் விரவில், எனது வேலையாட்கள் இவ்விருவரையும் பிடிக்க முயன் றார்கள். அப்பொழுது, என் வேலைக்காரர்களிலொருவனென நினைத்துக் குணசீலனையடித்துக் கொன்றுவிட்டான் தங்கள் பை யன்! உடனே இவனும் பிடிக்கப்பட்டான். பார்த்தால் சித்ர ஸேநன்! இக்கொலையை வெளியிட்டேனோ? குணசீலனது சரீரத்தை யடக்கஞ் செய்து இவனுக்குத் தக்க புத்திமதிகள் புக ட்டினேன். கொலையுங் களவுஞ் செய்யப் பழகியவிவன் சீர்திரு த்தமடைவது துர்லபமல்லவா? எப்படியிருந்தாலும் உங்கள்

பையனை நான் காப்பாற்றுகின்றேன். தக்க வயது அடையாத அவனைக் கடுந்தண்டனைக் குள்ளாக்கமாட்டார்கள்.'' எனச் சொல்லியதைக் கேட்ட ஸத்யவந்தனது தமக்கை வீடுபோய்ச் சேர்ந்தாள்,

தலைவரது ஸபைக்குச்சென்ற செட்டியார், ஜகந்நாதம் சென்றிருந்த சித்ரஸேநன் அவ்விடத்திற் கொலை செய்த செய்தியை யறிந்துவிட்டதால், துக்கஸாகரத்தில் தத்தளித்தவராய்த் தன் வீட்டினுள் நுழைந்து, கலாவதியை யழைத்தார். அங்கு அவளைக் காணாததால், கோவெனக் கதறிக்கொண்டு, "ஐயையோ! கலாவதீ, என் கண்மணீ கலாவதீ! நீ எங்கே ஓடினாய்! மானத்திற்குப் பயந்து உயிர் விட்டாயோ! பாபி, மாயாவதி, இங்கு வாடி மூதேவி முண்டே, அன்று அழைத்தபொழுது இழவு என்று வந்தாயே! இழவாகவே முடிந்ததடீ சண்டாளி!'' எனத் தன் மனைவியை நினைத்தவாறு நிந்தித்தார். துக்கத்தோடு கோபமுங் கொண்ட மாயாவதி, "என்னடா குதிக்கிறாய்! உனக்குத்தான் க்லேசமோ? வாயை மூடு!'' எனச் சொல்லி, பத்ரகாளியைப் போலோடிவந்து, வீரனை யறைந்தாள். இவ்வாறடிபட்ட வீரன், புண்பட்ட மனதோடு வெளிப்பட்டுச் சென்றான்.

தனக்கருமையாய்ப் பிறந்த ஒரே மகளாகிய கலாவதியைக் கொலைபாதகனான சித்ரஸேநனுக்குக் கொடுக்கத் துணிந்தாரே நமது செட்டியார், இஃது விந்தையிலும் விந்தை! சித்ரஸேநனைக்கண்ட கலாவதி, மிகப் பயந்தாளேயன்றிக் கொஞ்சமேனு மவனை விரும்பவில்லை. மேலுமிவள், பலர் அவனைப் பிடிக்கவந்ததைக் கவனித்திருந்தாளாதலின் அவனிடம் முற்றிலும் வெறுப்புற்றாள். பிறகு தந்தையாகிய செட்டியார், அவனுக்கே இவளை மணப்பதாகச் சபதஞ் செய்ததைக் கண்டு எங்கேயோ ஓடிவிட்டாள். சித்ரஸேநனுடன் காலத்தைக் கடத்துபவர் செட்டியாரா? கலாவதியல்லவோ? துஷ்டனுக்கு வாழ்க்கைப்பட்டுக் கஷ்டப்படவேண்டுமே! இக்கலாவதி தக்க வயதடைந்தவளாதலின் இவ்வாறு வெறுப்புற்றோடினாள்.

வாழ்வினின்பத்தை யறியாத சிறுவயதிலேயே மக்களுக்கு மணஞ் செய்விக்கும் பெற்றோர், முன் பின் யோசியாமல், யேன

கைக்கொப்பான வொருபெண்மணிக்குக் குரூபமுள்ள வொருவனைக் கணவனாக்குகின்றனர். வயதடைந்த பிறகு, அப்பெண் தனதழகைக் கணவனுருவத்தோடொப்பிட்டு ஓயாக் கவலையடைகின்றாள். ஸ்வாஹா தேவி என்ற தேவ கன்னிகை சிறு வயதில் யமனுக்கு வாழ்க்கைப்பட்டாள். வயது முதிர்ந்த பிறகு இவள் அக்நி தேவனை யடைந்தாள். இதனை யொப்பப் பலர் வேறு வேறு கணவனை வரிக்கக் காரணமுண்டாயிற்று! கலியின் கோலம்!

வீரன் செட்டியார் ஓடியதும், கலாவதி காணாமற் போனதும் மாயாவதியின் மனத்தைப் பிடிக்கவில்லை. முதல் நாள் அந்தியில், கலாவதியோடு ஸத்யவந்தன் வீட்டிற்குச் சென்றவிவள், சித்ரஸேநனைக் கண்டாளல்லவா? அவனது சரீர அமைப்பும், கன்னத்திற்கரிய மச்சமும் இவளுக்கு ஸந்தேஹத்தை விளைவித்தன. அப்பையன் இன்னானெனத் தேர்வதிலாசைகொண்ட இவளுக்கு ஓர் யோசனை ஜனித்தது. தனது கண்யத்தையும், நேர்ந்திருக்கிற அவமானத்தையும், மகளையும் கணவனையும் பிரிந்த துக்கத்தையும் மறந்து, வேகமாக நடந்து, பொன்மண்டல மன்னன் முன்னிலையில் நின்ற இவள், "கருணையுள்ள காவலா, பெண்ணாகிய என்மீது கருணை வைக்க வேண்டும். என் பெண்ணை விவாஹம் செய்துகொடுக்க யத்தனித்ததில், அளவிறந்த அவமானங்கள் வந்தன. மானத்துக்கஞ்சிய என் மணவாளன், மனம் புண்பட்டு ஓடிவிட்டார். எனது மகளையும் காணோம்! அவள் ஒரு ஸமயம் சித்ரஸேநனை நாடிச் சென்றிருக்கலாம். அவனை வரவழைக்க வல்லவர் தாங்கள்தான். பெற்ற வயிறுபற்றி எரிகின்றதே! மன்னா, வேறு கதியும், ஆடவர் துணையுமற்ற யான் அவனை......அல்ல அவளை, எவ்வாறு கண்டறியக்கூடும்? காவலா, என்னைக் காப்பாற்ற வேண்டும்" என வணங்கி நின்று மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்.

மாயாவதி, மனவருத்தத்தோடு சொல்லியவைகளைக் கவனித்த வேந்தன், இவளது முகக்குறியாலும், பேச்சினாலும் சித்ரஸேநனைத் தன் மகனோவென ஸந்தேகிக்கின்றாளென்றும், இவளது குற்றத்தை யொப்புக்கொள்ளச் செய்யவேண்டிய ஸமயம்

இதுதானெனக் கருதியும், "அம்மா, யான் சொல்லப்போகிற விஷயம் வெளியிடக்கூடியதல்ல. இப்பொழுது தாங்கள் என்னிடம் அடைக்கலம் புகுந்துவிட்டதாலும், சித்ரஸேநன் என்னிடமயேயிருந்தாலும் அதனை வெளியிடத் துணிகின்றேன். சித்ரஸேநன் சிறு குழந்தையாய்ப் பிறந்தவுடன் சரவணாற்றுப் புதைக்கப்படுந் தருணத்தில் ஸத்யவந்தன் தூக்கிவந்து வளர்த்த செய்தி, எனக்கு இப்பொழுதுதான் தெரியும். இதனை முன்னமேயே அறிந்திருந்தால், தங்களது மகளாகிய கலாவதியோடு கல்யாணஞ் செய்விக்கக் காணபேனோ? போனது போகட்டும் ஏதோ கடவுள் கருணையால் அண்ணனுந் தங்கையுஞ் செய்துகொள்ளும் அந்யாய விவாஹத்திற்குத்தடை நேர்ந்து விட்டது. கவலைப்படாதேயுங்கள். தங்களது மகளையும் மகனையும யான் காப்பாற்றுகின்றேன்." என்றான். இம்மொழிகளைக்கேட்ட மாயாவதி, தான் செய்த பெரும் பிழையை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், வெட்கத்தை வெளியிடுகிற முகக்குறியோடு கண்ணீர் சொரநின்று, "கருணாகரா, யான் யாது சொல்வேன்? இரு குழந்தைகளையும் வரவழைத்து என்னைக் காப்பாற்றவேண்டும்" என வேண்டிய பிறகு, வீடு போய்ச் சேர்ந்தாள்.

பெருந்துறைக்கு எட்டு மைல்களுக்கப்பால் ஓர் சாவடியுண்டு. வழிப்போக்கர் தங்குவதற்கென்று அச்சாவடியிற் பல அறைகள் கட்டப்பட்டிருந்தன. பகலில் அதிகமான உழைப்பிராதவர்களும் அயர்ந்து தூங்கக்கூடிய இரவுமணி ஒன்றுக்கு, நெடுந்தூரம் நடந்து களைத்து, அச்சாவடியின் வெளிப்புறத் திண்ணையில் படுத்திருந்த வழிப்போக்கர்கள் நன்றாய்த் தூங்குவதைப் பற்றிச் சொல்லவும்-வேண்டுமோ? பயங்கரமான அவ்வேளையில் ஒருவன், அச்சாவடியினோர்புறம் கன்னம் வைத்து, ஓரறையினுட்புகுந்தான். அவ்வறைக்குள் யாரோ ஒரு பெண்மணி படுத்திருந்தாள். பயத்தையுண்டாக்கு முருவமும், பால்யமும் பொருந்திய அக்கள்வன், அவளுக்கெதிரில் நின்றான். அங்கு தங்குபவரின் நன்மைக்கென்றே பல விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. அவ்வாறே அவ்வறையிலிருந்த விளக்கு அக்கள்வனாலணைக்கக் கூடாதபடி அதிகமான உயரத்தில் எரிந்துகொண்டிருந்தது. எதி

ரில் நின்ற அத்திருடனை நோக்கிய பெண், "அடா பாபி! இங்கும் வந்துவிட்டாயா? என்னைப் பிடித்த சனியன் இன்னும்விடவில்லையே! ஐயோ!" எனக்கதறினாள். இதனைக் கேட்டு மிக நடுங்கிய அவ்வாலிபன், "அடீ, கலாவதீ, நீ என்னை மணந்து கொள்ள ஸம்மதித்தாயே! கணவனை மதிக்கக்கூடிய வென்னைக் காட்டிக்கொடுக்காதே. கையிற் காசில்லாமல் கன்னம் வைத்த விடத்தில் நீயா உட்கார்ந்திருக்கவேண்டும். அடீ, நீ கூச்சலிட்டாயானால், நான் சிக்கிக்கொள்வது நிச்சயம் கத்தாதே, உன் கால்களைப் பிடித்துக்கொள்கின்றேன்." எனச்சொல்லி ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். கலாவதிக்குக் கோபமும், பயமும் மேலிட்டிருந்ததால், கோவெனக் கதறினாள். இக்கூக்குரற் கேட்டவுடன் அங்கிருந்தோர் திடுக்கிட்டெழுந்து, சத்தம் பிறந்தவிடத்தைக் கவனித்தார்கள். அப்பெருஞ் சத்தத்திற்குப் பிறகு எல்லாம் நிச்சப்தமாயிருந்தது. அங்கிருந்தவர் அக்கட்டிடத்தைச் சுற்றிவந்த பொழுது, கன்னவாயிலின் வழியாகச் சித்ரஸேநன் வெளிக்கிளம்பினான். இதனை யுற்றுநோக்கியவோர் வழிப்போக்கன், "அகப்பட்டான்! பிடியுங்கள்" எனக்கத்திக்கொண்டு அவனைப் பிடித்தான். தனது பலத்தினால் திமிறிக்கொண்டோடச் சித்ரஸேநன் முயல்வதற்கு முன் வேறு பலர் சூழ்ந்து கொண்டனர். அவர்களில் இரண்டு வீரர்கள், "அகப்பட்டான் பயல்! பந்வா, இனி உன்னைவிடுவதேது?" எனச் சொல்லி, அவன் கைகளில் கனத்த விலங்குகளைப் பூட்டிப் பெருந்துறைக்குச் சென்று அவனைச் சிறையிட்டனர்.

வேறு சிலர், கன்னவாயிலின் வழியாக அறையில் நுழைந்து பார்த்தபொழுது, கொண்டை வரையில் துணியடைக்கப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த கலாவதியைக் கண்டவுடன் வாயிலிருந்த துணியைப் பிடுங்கினார்கள். களை தீர்ந்த பிறகு, அப்பெண், "ஐயா, உபகாரிகளே, இன்னுங் கொஞ்ச நேரம் நீங்கள் வாராதிருந்தால், நான் இறந்திருப்பேன்!" எனச் சொல்லிக் கண்ணீர் பெருகக் கதறினாள். அங்கிருந்தவொருவர், "பெண்ணே, பயப்படாதே. நீ யார்?" எனக் கேட்டவுடன், "ஐயா, நான் பெருந்துறை நகரத்து வீரன் செட்டியாரின் மகள். இங்கு

வந்தானே, கொலை பாதகன்! அவனுக்கு என்னைக் கொடுப்பதாக, என் தந்தை தீர்மானித்தார். விவாஹத்தை நிறைவேற்ற எல்லாஞ் சித்தமாயிருந்தது. தாலி கட்டுந் தருணத்தில், பல வீரர் இவனைப் பிடிக்க வந்தார்கள். அதனைக் கவனித்த இத்தடியன் தாலியை யெறிந்துவிட்டோடினான். பிறகு, என் தந்தை, இக்கொடும்பாவிக்கே என்னைக் கொடுத்துக் கெடுப்பதாகத் தீர்மானித்துத் தலைவரிடஞ் சென்றார். பணத்தாலாகாதது உண்டோ! அப்பணத்தின் மகிமையால் ஒரு வேளை விவாஹச் சடங்கை நிறைவேற்றுவாரோ வெனப் பயந்து ஒருவருமறியாமல் இங்கிருந்தேன்." எனக் கலாவதி யுரைத்தாள். பொன்மண்டல மன்னனுடைய ஆட்களிற் சிலர், அவ்வேந்தனது கட்டளையின்படி அங்கு இக்கலாவதியைக் கண்டு, இவளைப் பெருந்துறைக்கு இட்டுச் சென்றனர். மன்னன் இவளை யன்போடழைத்து, மாயாவதிக்கு ஓர் கடிதம் வரைந்தான்.

"ஸ்ரீமதி மாயாவதியம்மாளுக்கு:—

தங்களுடைய குமாரியாகிய கலாவதியை எனதாட்களின் மூலமாய் வரவழைத்து, அவ்விடம் அனுப்பியிருக்கின்றேன். சித்ரஸேநனோ வென்றால், பல பழிகளுக்கு ஆளாய்ச் சிக்கியிருக்கின்றான். என்றாலும், யான் இனிச் சொல்லுமாறு செய்தால் அவனையும் அழைத்துக்கொள்ளலாம். ஏராளமான பொருளோடும், இரண்டு மக்கள்களோடும் இன்புற்று வாழலாம்."

இங்ஙனம்,

பொன்மண்டல மன்னன்.

இக்கடிதத்தையும் கலாவதியையுங்கண்ட மாயாவதி, அளவிறந்த மகிழ்ச்சியடைந்து, கலாவதியைக் கட்டியணைந்து, "என் கண்ணே, உன் தந்தை ஓடிவிட்டாரமே! நீயுமில்லாவிட்டால். நான் வாழ்வதெப்படி?" எனக் கண்ணீர் வார்த்தாள். கலாவதியும் தன் தாயை நோக்கி, "அம்மா, என்னைக் கொடுப்பது கொலை பாதகனுக்கா?" எனச் சொல்லவும், மாயாவதி, "என்னருமைச் செல்வி, அவனை நிந்திக்காதே," எனச் செப்பி, சித்ரஸேநனையும் வரவழைத்துக்கொள்ள ஸமயம் பார்த்துப் பார்த்திபன் வார்த்தையின்படி நடக்கக் காத்திருந்தாள்.

ஞானசுந்தரியும், குருநாதனும் குமரனை யலக்ஷியஞ் செய்கிற செய்தியை முன்னமேயே சொன்னோம். வீட்டில் இன்பமில்லாமல் துன்புற்றிருந்த திவான்பகதூர் குலசேகர கோவர்த்தனர், ஓர் நாள் கூடத்திலுட்கார்ந்து பலவாறு சிந்தனையிலாழ்ந்தபொழுது, அந்யநாட்டுப் போர்வீரர் பலர், படபடவென்றவ்விடம் வந்து, “பயலே, கொள்ளைக்காரா, கொலைத் தொழில் புரிந்தஉன்னைப் பிடிக்க இவ்வளவு வருஷங்களாயின! வாடா வெளியில்! வீட்டைப் பாரடா, உங்கள் பாட்டனுடையதா?” எனச் சொல்லி யிழுத்தார்கள். மிக நடுங்கிய குமரன், “ஏன், யாது காரணம், நீங்கள் யார், என்னையா தடபுடல்?” என அவர்களை வினவியதால், “துஷ்டா, இதோ பார்த்தாயா, ரத்நாசலபதியின் கட்டளை:” எனச் சொல்லி, ஓர் கடிதத்தை நீட்டினார்கள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

“கலிங்க தேசத்தைச் சார்ந்த பெருந்துறையில், திவான்பகதூர் குலசேகர கோவர்த்தனன் எனப் பொய்ப்பெயர் வைத்துக்கொண்டிருக்கிற குமரனுக்குப் பிறப்பிக்கப் பட்டது.

அந்ய நாட்டின் வழக்கத்தை யொப்ப ஸ்ரீமான் ராஜபூஜிதரின் அநுமதி பெற்று, அவனையிவ்விடம் அழைத்துவரவேண்டியது.”

ரத்நாசலபதி.

“இக்கட்டளையிற் காட்டிய குற்றவாளியாகிய குமரனையுடனே பிடித்து, ரத்நாசலமனுப்பவேண்டியது. அங்ஙனம் ராஜாங்கத்தார், இவன் செய்த குற்றங்களையும், ஏற்கத்தக்க தண்டனையையும் குறிப்பிட்டு, அவனை இவ்விடம் அனுப்புமாறு கோரப்படுகின்றனர்.”

ராஜபூஜித சரவணன்.

மேற்குறித்தபடி இரண்டு ராஜஸபைகளிலும் தன்னைப்பிடித்துக் கொள்ளக்கட்டளை யிட்டிருப்பதால் யாதொன்றுஞ் செய்யவியலாமல், வீட்டினுள்ளிருந்த பெண்சாதியையும் பிள்ளையையும் மிகப்பரிதாபக் குரலோடு குமரனழைத்தான். அவ்விருவரும் இப்பாவியை முற்றிலும் வெறுத்தவராதலின் இவ்வநுபவம் இவனுக்குத்தகுமெனப் பேசாதிருந்தனர். பிறகு அங்கிருந்தவீரர், குமரனது கைகளில் விலங்குகளைமாட்டி, வெளியில் இழுத்துச்சென்றனர்.

இவ்வலங் கோலத்தைக் கண்ணுற்ற யாவரும், “இக்குலசேரன் பணக்காரனான காரணம் இப்பொழுதல்லவா வெளியாயி

ற்றே! பெரியமோசக்காரன்! பலநாள் திருடன் ஒருநாள் சிக்கு வான்" எனச்சொல்லி அக்குமரனை நிந்தித்தார்கள். குலசேகரகோ வர்த்தனரும் ரத்நாசலம் சென்று சிறைச்சாலையினுள் வாசஞ் செய்தார்.

அத்யாயம்-உஎ

## பிள்ளைக் கொலை.

மிகுந்த ஏழையானவோர் வைதீகர், விபூதி ஸம்புடத்தில் வைத்திருந்த பணத்தை மூழ்கும்போது ஆற்றில் விழுந்து, "ஐயோ! நேற்று இருபது நாழிகை வரையில் காத்திருந்து பூரி தக்ஷிணை வாங்கினேனே! அந்யாயமாய்ப் போயிற்றே!" எனத் தூக்கிக் கின்றார். நாட்டுப்புறங்களிலுள்ள தெருத் திண்ணைகளிற் கூடும் வம்பர் மஹாஸபையோர் "என்ன ஐயா, ஆயிரங்காணியி ருந்தது அண்ணாஸாமி ஐயருக்கு! எல்லாம் போய் விட்டதே!" எனச் சொல்லி, மூக்கில் விரல் வைக்கின்றார்கள். உண்மையை யாராயுங்கால், வைதீகரிழந்த பணம் ஆற்றிலிருக்கின்றது. அஃதெங்கும் பறக்கவில்லை! அண்ணாஸாமி ஐயர், உரிமை பாரா ட்டிய நிலங்கள் கப்பலில் ஏறி, நெட்டால், மொரீஸ் முதலிய அயல்நாடுகளுக்குப் போகவில்லை! ஆனால், இவ்விருவரும் தங்க ளெதனைப் பாராட்டிய பாத்யதையை மாத்திரமிழந்தார்கள். தாயின் வயிற்றிலிருந்து வரும்பொழுது கொணர்ந்ததும், மற்றெ ல்லாப் பண்டங்களிலும் மேலாகக் கருதப்பட்டதுமான காயத் தைக் கொண்டு செல்பவருண்டோ? உரிமையனைத்தும் இறக்கும் வரையிலல்லவா?

பெரும்பணக்காரராய் விளங்கிய உதயமார்த்தாண்டன் செட்டியார், தனக்குச்சொந்தமெனப் பாவித்திருந்த எண்ணிறந்த பணத்தையும், ஏகபுத்ரனான சங்கரனையும், அருமையாய் எண்ணெ தேய்த்து வளர்த்த உடலையும் இவ்வுலகில் விட்டு, வேறுலகஞ் சென்றார். இவரிறந்த ஓராண்டிற்குப் பிறகு சங்கரன், தனது

வாழ் நாட்களைக்கடத்த வேண்டுவதற்கு இன்றியமையாததான குடும்ப வாழ்க்கையில் மனத்தை நிலை நிறுத்தித் தனக்கேற்றவோர் பெண்மணியை விசாரிக்கத் தலைப்பட்டான்.

ஒரு நாட் காலை எட்டு மணிக்குத்தன் வீட்டு மாடியில் போடப்பட்டிருந்த நாற்காலியில், நெற்றியில் திருநீறு பூசி, நமது சங்கரன் உட்கார்ந்திருந்தான். அவ்விடம் போடப்பட்டிருந்த பல மேஜைகளினெதிரில் அநேகர் உட்கார்ந்து, கணக்கு வழக்குகள் எழுதிக்கொண்டிருக்கத் தன் லாப நஷ்டங்களைப் பற்றிச்சங்கரன் கேட்டுக்கொண்டிருந்த பொழுது, அவன் விலாஸத்திற்கோர் கடிதம் வந்தது. அதனையுடைத்துப் பின் வருமாறு படிக்கலானான்:—

அன்புள்ள ஐயா,

என் பாட்டனார் ஆதிநாராயணருக்கு மரணந்த காலங்கிட்டியிருக்கின்றது. முதிர்ந்த வயதுற்ற இவர், தங்களைக் காண விரும்புகின்றார். ஆதலின் தாமதிக்கமாட்டீர்களென நம்புகிற, தங்களுக்குச் சொந்தமாகப் போகிற, கமலாக்ஷி

இச் செய்தியைப் படித்தவுடன் சங்கரனுக்குப் பலஎண்ணங்கள் தோன்றின. "இக்கமலாக்ஷி ராஜ ஸ்ரீதருடைய மகள். எப்படி யெனக்குச் சொந்தமாவாள்? ஸம்பத்திலெனக்கு ஸமமாயினும் அவள் வேளாள ஜாதியாயிற்றே! யாதோவிசேஷமிருக்கின்றது மரணந்த காலத்தில் ஒருவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது தர்மமாதலின், கட்டாயஞ் செல்கின்றேன்." எனத் தீர்மானித்த சங்கரன், இரண்டு குதிரைகள் கட்டிய வண்டியிலேறிப்போய்க் கமலாக்ஷியின் வீட்டில் நுழைந்து, முன் பின் பழகியவன் போல் மளமள வென்று பின்புறமுள்ள கட்டிடத்துட் சென்றான். அங்கு போடப்பட்டிருந்த கட்டிலில் ஆதிநாராயணர் சயனித்திருக்கக் கமலாக்ஷி ஸமீபத்தில் நின்று விசிறிக்கொண்டிருந்தாள்.

பருவமடைந்தவிப் பெண் ப்ரகாசிக்கின்ற முகவிலாஸத்துடன் விளங்கினாள். இவளது சிற்றன்னையின் ஔஷத ப்ரயோகங்களால் இவளது சரீரமிளைத்திருந்தது. காமினியின் எண்ணங்

களனைத்தும் நமக்குத் தெரிந்திருக்கின்றன. இக்காமினியைச்சந்தித்த பொன் மண்டல மன்னன், விஷயங்களுக்குப் பதிலாக ஔஷதங்களைச்சொல்லி ஏமாற்றியிராவிடில் பல மாஸங்களுக்கு முன்னமேயே கமலாக்ஷி பரலோகஞ் சென்றிருப்பாள்! தனக்கு ஒரே துணையாயும், தைர்யத்திற்கும் ஸம்பத்திற்குங் காரணமாயுமிருந்த ஆதிநாராயணரது தேஹஸ்திதி, இவளுக்கு மனக்கவலையுண்டாக்கிற்று. இவைத்தும் க்லேசிதத்துமிருக்க போதிலும், இவளது அழகு மாத்திரம் பழுதுபடவேயில்லை!

இங்ஙனம் நுழைந்துவந்த சங்கரனைக்கண்டு, "தாத்தா, செட்டியார் வந்துவிட்டார். என்னமோ சொல்லவேண்டுமென்றீர்களே" எனக் கமலாக்ஷி பாட்டனாரிடம் சொல்லியவுடன், "சங்கரா, உட்காரு. என் குழந்தை அநாதையாகின்றாள்! இவ்வூரில் வேறு ஒருவரிடமும் எனக்கு விருப்பமில்லை. ஆனதுபற்றி நீயே இக்கமலாக்ஷியை மணந்துகொள்ளவேண்டும்" என ஆதிநாராயணர் உரைத்தார்.

சங்கரன்:—"ஐயா பெரியோரே, தங்களது வார்த்தைக்குத் தடைசொல்வது உசிதமல்லவென்றாலும், யான்செட்டியாயிற்றே!"

கிழவர்:—"அப்பா, ஸங்கடத்திற் சிக்கவைத்தாயே! எனக்குப் பேசவுஞ் சக்தியில்லையே! குழந்தாய், நீ சிறுபிள்ளை. உலகெலாம் படைத்த கடவுளுக்கும், முதிர்ந்த ஞானிகட்கும் ஜாதி பேதமுண்டோ? மற்ற நாடுகளிலுள்ளோர் ஒரே ஜாதியாயிருந்து எவ்வளவோ நன்மையடைகின்றார்கள். மிக ப்ராசீன காலத்தில் நமது நாட்டிலும் இவ்வளவு ஜாதிகளிருந்திராதென்பது ஸர்வ நிச்சயம். உதாரணமாக அந்தணரெல்லோரும் ஒரே ஜாதியார். அவர்களுள் கோத்ரம் என்றொன்றுளது. அஃது ஒவ்வொரு வம்சத்தினரும் மறக்கக்கூடாதவாறு, நித்யகர்மாநுஷ்டானத்தில் பல மந்திரங்களோடு சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஒரே கோத்திரத்திற் பிறந்த பெண்ணுக்கும் பிள்ளைக்கும் அவர்கள் விவாகஞ் செய்வதில்லை. அவ்வாறு ஒரே கோத்ரத்திற் பிறந்தவர் ஸகோதரர் என்பது அவர்களுடைய துணிபு. அத்திரி ரிஷியின் வம்சத்திற்கு ஆத்ரேய கோத்ரம் எனப் பெயர். இக்

கோத்ரக்காரரனைவரும் ஒரு காலத்தில் தாயாதிகளாயிருந்திருத்தல் வேண்டும். இப்படியிருக்கத் தற்காலம் பல ஜாதிகளாகப் பிரிந்திருக்கின்றார்கள். அந்த ஜாதிகளின் பெயர்களைப்பற்றி யோசித்தால், அவ் வந்தணர் நீண்டநாளாகத் தங்கியிருந்த ஊர்களின் பெயர்களாகவே யிருக்கின்றன. ஒரே ரிஷியின் வம்சத்தினர் எனத் தெரிந்திருந்தும் வெவ்வேறு ஜாதிகளாகப் பிரிந்திருப்பது எத்தனைய மதியீனம்! ஸகல கலைகளிலும் வல்லவரெனப் புகழப்படுகிற விப்ரர்கள், யாதொரு காரணமுமின்றி இவ்வாறு பிரிக்கப்பட்டிருப்பது போலவே, நாமும் பற்பல தொழில்களை ஜாதிகளாக மதித்துவிட்டோம். சங்கரா, நன்றாக யோசித்துப்பார்! செட்டு என்றால் வ்யாபாரம். இத்தொழிலைச் செய்பவன் செட்டி. வேளாண்மைத் தொழிலாளியே வேளாளன். தங்கத்தைத் தட்டுபவன் தட்டான். இந்துக்களாகிய நமக்குள் ஒற்றுமையிருக்கலாகாதெனச் சதிசெய்தவர் யாரோ! நீ மயங்காதே. நான் சொல்வதைக் கேள். குழந்தை ஸௌபாக்யவதியை மணந்துகொள்வதால் சேரும் என்னுடைய அளவிறந்த பொருளாலும், உனக்குச் சொந்தமான மிகமிஞ்சிய பணத்தாலும், பெருஞ் சீமானாகக்கூடிய உன்னை அவமதிப்பவர் யார்? மயானத்திற் பிணத்தைச் சமைக்குஞ் சண்டாளனும் பணமுள்ளவன் என்றால், பிள்ளைப் பட்டம் பெறுகின்றான்! ஆதலின், சங்கரா, யான் சொல்லியவாறு கமலாக்ஷியைக் கல்யாணஞ் செய்துகொள்ளுவதாக எனக்கு வாக்களித்து மனக்கவலையில்லாமல் யான் இவ்வுலகைவிட்டு விலகும்படி செய்யவேண்டும்."

எனச் சொன்னார். இம்மொழிகளைக் கேட்ட சங்கரன், வயதில் முதிர்ந்தவரும், கல்வியில் வல்லவருமான ஆதிநாராயணர் சொல்லியதை மறுக்க மனமில்லாமல், அவ்வாறே செய்வதாய் ஒப்புக்கொண்டான். பிறகு அக்கிழவர், தான் நிச்சயித்திருக்கிற சங்கரனைத் தவிர்த்து வேறொருவனுக்குக் கமலாக்ஷியைக் கல்யாணம் செய்வித்த போதிலும், தனக்குச் சொந்தமான பொருள்களனைத்தையுஞ் சங்கரன் அடையவேண்டியதெனக் குறி

த்து, மரண சாசனத்தை யெழுதியபொழுது, கமலாக்ஷி, நாணமும் மடமையும் வெளிப்பட நெயத்தோடு நின்றாள். பிறகு சங்கரன் கிழவரிடம் விடைபெற்று வீட்டிற்கேகினான்.

மேற்சொல்லியவாறு நடந்தேறிய மரண சாசனத்தின் ஸங்கதியை யறிந்த காமினிக்குப் பல வெண்ணங்கள் விளைந்தன. தன் கணவனும், மாயாவதியும் ஒன்றாயிருந்ததைக் கண்ணுற்ற இவளுக்குச் சரவணனிடம் வாஞ்சையிராதென்பதை விவரிக்கவும் வேண்டுமோ? மாமனாருக்குச் சொந்தமான ஸொத்துக்களைத் தன்னிரு குழந்தைகளும் ஆளவேண்டுமென்கிற ஆசையால், கிழவனுக்குங் கமலாக்ஷிக்கும் இவள் மருந்து வைத்தாள். அஃது பலிக்காததாலும், அந்யனான சங்கரன் அப்பொருள்களை யடையும் அதிகாரம் பெற்றுவிட்டதாலும், அளவிறந்த பொறாமைகொண்ட விக்காமினி, பின்வருமாறு சிந்திக்கலானாள்:—

"இதென்ன வந்யாயம்! வீட்டிற்குப் பேரனிருக்கும்பொழுது பணத்தைப் பெண்ணா அடைவது? என் குழந்தைகளிரண்டும் ஆண்டிகளாய் விடுவார்கள். கடன்காரனான சரவணனையும், அவன் ஸம்பாத்யத்தையும் நான் நம்பவில்லை. பொன்மண்டல மன்னன் சொல்லிய மருந்துகளாலல்லவோ மோசம்போனேன்! இருக்கட்டும்; இன்று இரவு கிழப்பிணத்தோடு கமலாக்ஷியை யமனுக்குப் பக்ஷணமாக்குகின்றேன்." எனத் தனக்குள் தீர்மானித்து அவ்விருவருக்கும வழக்கமாய்க் கொடுக்கும் பாலில் கொடூரமான விஷத்தைக் கலந்தனுப்பினாள். இந்த ஸமயம் கமலாக்ஷி, வீதியில் வந்த பெருமாளைத் தரிசிக்க வெளியே சென்றிருந்ததால், அப்பாலைக் குடித்த கிழவன், இவ்வுலகத்தைப்பால் சென்றான்!

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவ்விடம் வந்த கமலாக்ஷி இறந்துகிடக்கும் கிழவர் தூங்குவதாகவெண்ணி, அவ்விடமுட்கார்ந்து ஓர் புஸ்தகத்தைக் கையிலெடுத்தாள். காமினியின் குழந்தைகளிரண்டும் அவ்விடம் வந்து, "அக்கா, பொம்மை காட்டுகிறாயா?" எனச்சொல்லிக் கொண்டு இவளைச் சூழ்ந்து நின்றன. கமலாக்ஷி புஸ்தகத்திற் கவனமாயிருந்ததால், இவளுக்கென்ற

வைக்கப்பட்டிருந்த விஷங்கலந்த பாலை யக்குழந்தைகள் கண்டு, எனக்கு, எனக்கெனச் சச்சரவு செய்து குடித்தவுடன் சுருண்டு கீழே விழுந்திறந்தன! கமலாக்ஷி இப்பரிதாபத்தைக் கண்ணுற்று, "ஐயய்யோ! குழந்தைகள் போயினவே!" எனக் கதறினாள். வீட்டின் முன்புறமிருந்த சரவணன், கோவெனக் கதறிக்கொண்டோடிவந்து அவ்விரு குழந்தைகளையும் வாரியெடுத்து, "என் கண்மணிகளே, ஹா ஹா! நீங்களிருவரும் ஏககாலத்திற் சாகலாமோ! ஐயய்யோ, பெரும்பாபம்! அடி கமலாக்ஷி, யாது செய்தாயடி, பாதகி?" எனச் சொல்லித் தன் மகளைக் கோபத்தாற் கொன்றுவிடுபவன் போற் பார்த்தான். நடு நடுங்கிய கமலாக்ஷி, "ஐயோ அப்பா! எனக்காகப் பால்வைக்கப்பட்டிருந்தது! நான் புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்ததால், படுக்கும்பொழுது குடிக்கலாமென்றிருந்தேன். குழந்தைகள், படங்களைக் காட்ட வேண்டுமென என்னை வேண்டின. யான் கவனியாமலிருந்தபொழுது, அப்பாலைக்குடித்தன; ஒரு விநாடி கடக்குமுன் இறந்து போயினவே! ஐயோ! தாத்தாவின் பக்கத்தில் பாத்திரங்காலியா யிருக்கின்றது! தாத்தா, தாத்தா, அந்தோ! அவருமிறந்தார்! அப்பா, இப்பாதகமுண்டோ? தாத்தா இன்றோர் மரணசாஸனமெழுதித் தன் பொருள்களனைத்தையும் எனக்குக் கொடுத்தார். பணத்திற்குப் பேயாய்ப் பறக்கும், என் சிற்றன்னை எங்களிருவரையுங் கொல்லத் துணிந்து தங்களிரு குழந்தைகளையுங் கொன்றாள். குற்றமுள்ள அப்பாபி வெளிப்படவில்லை பார்த்தீர்களா? என்னுடன் தினந்தோறும் விளையாடிப் பொழுதைப் போக்குவித்த அழகுள்ள குழந்தைகளிறந்தனவே! ஐயய்யோ! தாயில்லாது வளர்ந்த யான், துணையுமற்றவளானேனே!" எனப் பதறித் துடி துடித்துக் கீழே வீழ்ந்தனள். சரவணன் சேஷ்டைகளை யெதற் கீடாகச் சொல்லக்கூடும்? தலையிலும் வயிற்றிலுமறைந்து கொண்டான். உள்ளே சென்று, காமினியைப் பல அறைகள் அறைந்து, "அடி பாபி! இப்பாதகமிழைப்போருமுண்டோ, கிராதகி, உன்னைக் கொன்றாலுந் தோஷமில்லையடி!" எனக் கத்திக்கொண்டு குழந்தைகளிடம் ஓடினான். குற்றஞ்செய்த காமினி யாது செய்வாள்? பேசாமலுட்கார்ந்தவிவள், "யான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று செய்ததே! இவ்வுலகில் எனக்கிருப்

பதி யாது ? கணவன் விரோதி ! குழந்தைகளிறந்தன !" எனச் சோகமுற்றிருந்தாள். இவ்வங்யாயம் வெளிப்படலாகாதெனக் கருதி அவ்விரவிலேயே எல்லாச் சரீரங்களேயும் ரஹஸ்யமா யடக்கஞ்செய்தார்கள்.

மறுநாட் காலையில் சரவணன், வழக்கம்போல் சபையை நாடிச் சென்றான். அங்கிருந்தவர்களிற் சிலர், இவனது முகம் வாட்டமடைந்திருக்கின்றதென்றும், வீட்டில் நடந்த விசேஷங்களையறிந்து, வெறுப்புறறும், பேசிக்கொண்டிருந்தனர். ஆஸனத்திலுட்கார்ந்த சரவணன், "குற்றவாளி யெங்கே ?" என வினவினவுடன், இரண்டு ஸேவகர்கள் கையும் விலங்குமாகச் சித்ர ஸேனனைக் கொணர்ந்து நிறுத்தினார்கள். அங்கிருந்தவர்கள், சரவணனையுங் குற்றவாளியையும் உற்றுப் பார்த்து, "இருவர் ஜாடையும் ஒன்றாயிருக்கின்றதே" எனப் பேசிக்கொண்டிருந்த பொழுது விசாரணை தொடங்கலாயிற்று.

தலைவர்:—"அடே, நீ யார் ?"

சித்ரன்:—"யான் ஓர் அகதி !"

தலைவர்:—"உன்னை யீன்றோர் யாவர் ?"

சித்ரன்:—"எனக்குத் தெரியாது !"

தலைவர்:—"வளர்த்தவர்தான் யார் ?"

சித்ரஸேனனுடைய முகத்திலிருந்த கரிய மச்சத்தைக் கண்டது முதல், சரவணனுக்கு ஸந்தேஹமுண்டாயிற்று. "ஐயோ, உண்மை வெளிவராமல் இருக்கவேண்டுமே ! அகதியென்று சொலலிப் பெற்றோரை யறியாதவிவன், என் மகனென்பதிற் றடையில்லை ! இவனது விஷயம் இவனுக்கே தெரியாமற் போகாதோ ! நேற்றிரவு நடந்த சாக்காடு போதாதோ ! கஷ்டம், கஷ்டம் !" எனப் பயந்திருந்தான்.

இவ்விசாரணை நடக்குமெனத் தெரிந்திருந்த ஸத்யவந்தனும், அவனது தமக்கையும் ந்யாய ஸபையில் மறைந்து நின்றார்கள். சித்ரஸேநன் பிறந்தவுடன், புதைப்பதற்கு வைக்கப்பட்டிருந்த பெட்டியும், சரவணனெழுதிய பல கடிதங்களுங்கொண்டு மாயா

வதி வந்திருந்தாள். மானமழிந்தாலும் பிள்ளையை மீட்டுக்கொள் வதில் மாயாவதிக்கிச்சை! ஸத்யவந்தனுக்கோ யஜமானனிடம் அபிமானம். இவனது தமக்கைக்குத் தான் வளர்த்த பையனிடம் ப்ரமை. இம்மூவரும், பொன்மண்டல மன்னனாற் போதிக்கப் பட்டு, ஸபையில் நுழையும் ஸமயத்தை எதிர்நோக்கி நின்றனர்.

“வளர்த்தவர் யார்?” எனத் தலைவர் கேட்டவுடன், முன் வந்த ஸத்யவந்தன், “ஸ்வாமி, நான்தான்” என்றான்.

தலைவர்:—“உன்னை ஸபைக்கு வரும்படி யழைத்தது யார்?”

ஸத்யன்:—“என்னை விசாரியாது யாது, செய்யக்கூடும்?”

தலைவர்:—“அழைக்கப்படாமல் இவ்விடம் நுழைந்து, மரியாதையில்லாமல் நிற்கும் உன்னைச் சிறைப்படுத்துவேன்.”

ஸத்யன்:—“நான் குற்றவாளியல்ல; என்னைத் தண்டிப்பதெங்ஙனம்? பெருங் குற்றவாளியாகிய தாங்களல்லவோ சிறைக்குச் செல்லவேண்டும்! ஓகோ! தலைவரே, நிதானமாய்ப் பேசும்”

என்றவுடன், ஸபையிலுள்ள வொருவரெழுந்து, “ந்யாய ஸாமாஜிகர்களே, இச்சரவணன் நேற்று இரவில் தன் வீட்டினுள் நடந்த கொலைகளை மறைத்துக் கொலை செய்த வொருவனைத் தண்டிக்கவந்தது ஓர் விந்தை!”

எனச்சொல்லியவுடன், அங்கிருந்த ந்யாயவாதிகளனைவரும், “இச் சரவண எவ்வாறு குற்றவாளி?” என ஸத்யவந்தனை வினவினார்கள். உடனே அவன், “பெரியோர்களே, இவன் ஒரு காலத்தில், நிரபராதியான எனக்கு அபராதம் விதித்து மானபங்சப்படுத்தினான். யான் கடுங்கோபங்கொண்டு இவனை நன்றாய்ப் புடைக்கவேண்டுமெனத் தீர்மானித்து, ஸமயம் பார்த்துவந்தேன். இவன், தனது தந்தை கட்டிய கிழக்குவீதியிலுள்ள பெரிய வீட்டைக் காலி செய்து, அவனுக் கயல்வீட்டிலிருந்த ஒரு பெண்ணை வசப்படுத்தி அங்கு ஒளித்து வைத்துத் தினந்தோறும் போய்வந்த செய்தியை யானறிந்ததால், ஓரிரவு அவ்வீட்டின் கொல்லையில் தடியுங் கையுமாகக் காத்திருந்தேன். அன்று நிசியில், இப்பா

தகன் ஏதோ ஒரு பெட்டியைக் கையிற்கொண்டு அவ்விடம் வந்தான். இவனைக் கண்டவுடன் யான், வீராவேசத்தோடு வீசியடித்தேன். அடிபட்ட இப்பாவி, கீழே வீழ்ந்த பிறகு, இறந்திருப்பானெனப் பயந்து, பெட்டியைத் தூக்கிக்கொண்டு வீடுபோய்த் திறந்துபார்க்கையில், பிறந்த ஈரம் உலராத ஓர் சிசு, அழவும் சக்தியற்று அதனுள் கிடந்தது. ஸந்ததியில்லாமல் கைம்பெண்ணான என் தமக்கை, அக்குழந்தையை வளர்த்தாள். வளர்த்த பையன் இதோ நிற்கின்றானே சித்ரஸேநன்! இவன் தான்! அஸத்தாகிய தந்தைக்குப் பிறந்த ஒரு காரணத்தாலேயே, எப்படிப்பட்டும் சீர்திருத்தமடையாது, இவனது நெறி தவறியது!" எனச் சொல்லி முடித்தான்.

ஸத்யவந்தன் பேசி முடிந்த பிறகு, பரபரப்புடனங்குவந்த மாயாவதி, "அப்பா, என் மகனே, பெற்றதாயாகிய என்னையறியாமல் வளர்ந்தாயே! என்னிடமிருந்தால் உன் குணம் கெடாதடா! சரவணா, மஹா பாபி! நீ நன்றாயிருப்பாயா? உனக்கு நல்லுலகேது! ஒருமுறை குழந்தையை வளர்க்கிறேனென்றாய்; பிறகு யாரோ புதைத்தானென்றாய். என்னைக் கெடுத்ததுமல்லாமல் பல வழிகளிலுமென்னைப் புண்படுத்தினையே!" எனக் கண்ணீர் சிந்தக் கதறிச் சித்ரஸேநனைக் கட்டியணைத்தாள். சித்ரஸேநனும், பசுவின் கன்றுபோல், அம்மா, அம்மாவென்றலறினான். இக்காட்சியைக் கண்டால், யார் மனம் தான் இளகாது! கண்ணிழந்தவன் அடைந்த கண்களைப் பிடுங்குவதுபோல், இவள் பெற்ற பிள்ளையைத் தண்டித்துப் பிரிக்கலாகாதெனத் தீர்மானித்த ஸபையோர், அங்கு கூடியிருந்த ஜனங்களின் ஆரவாரத்தையடக்கி, மாயாவதியையும், அவளது மகனையும் வீட்டிற் கனுப்பினார்கள்.

ந்யாயஸபையில் மாயாவதி நுழைந்தவுடனே, சரவணன் எழுந்து, முகத்தை மூடிக்கொண்டு வீட்டிற்கோடினான். உள்ளே சென்று, கமலாக்ஷியைப் பலமுறை யழைத்தும், அவளைக் காணாமலேக்கங்கொண்டு காமினியிருந்த வறையைத் திறந்து பார்த்தான். அவள், கயிற்றைக்கட்டித் தொங்கிக்கொண்டிருந்தாள். "அடிமுண்டே, என்னடி ஊஞ்சலாடுகின்றாய்? கமலாக்ஷியையுங் கொன்றாயோ!" எனச் சொல்லிய சரவணன், அவளண்டை

சென்று முகத்தைப்பார்த்த பொழுது, அவளது இருவிழிகளும் கன்னங்களில் தொங்கின! நாவோ, தானடங்கப்போகிற மண்ணின் ருசியைப் பார்ப்பதுபோலக் கீழ் நோக்கிற்று! இப் பயங்கரமான காட்சியைக் கண்ணுற்ற தலைவர், "அந்தோ, தெய்வமே! என்னைக்கண்டித்தாயே! போதும்--போதும்! ஐயோ, மதியற்ற ஜனங்களே! இனி, ஒருவருக்குந் தீங்கு நினையாதிருங்கள். நான் படும் பாட்டைப் பார்த்தீர்களா? நிரபராதியான அபிராமனைச் சிறையிட்டேன்! அப்பாதகம் இப்பிறவியிலேயே என்னைப் பற்றிக் கொண்டது! எனக்குச் சேரவேண்டிய அளவிறந்த பொருள்களைச் செட்டி ஜாதியிற் பிறந்த சங்கரனடைந்தான்! கண்ணான குழந்தைகளையும், செல்வத்தையும், கண்ணியத்தையுமிழந்தேன்!" எனக்கதறிக் கீழேவிழுந்து, புரண்டு புரண்டு புலம்பிய பொழுது ஸபையோர்களின் கட்டளைப்படி, பலவீரர் அவ்வீட்டினுள் நுழைந்தார்கள்.

"அடா பாபி! ஹா ஹா! நேற்றிரவு நடந்த மூன்று கொலைகள் போதாமல், பெண்சாதியையுங் கொன்றாயே!" என அவ்வீரர்கள், ஈச்சரவணனைப் பலவாறு வைது, அக்கொலைகளுக்குக் காரணமிவன்தானென நினைந்து, இவனது கைகால்களிற் கனமான விலங்குகளை மாட்டிச் சிறையினுள் தள்ளினார்கள்.

## அத்யாயம் ௨௮.

### வீரன்.

மனைவியான மாயாவதியினிடமடி பட்டோடிய வீரன் செட்டியாரை மறந்துவிட்டோம். இவன் பெருந்துறைக்குச் சிலமைல்களுக்கப்பாலுள்ள ஓர் நகரத்தில் தான் ஆபத்தனமாகக் கொணர்ந்த பணத்தைச் செலவிட்டுக் காலக்ஷேபஞ் செய்தான். வீட்டையும், மனைவி மக்களையும், செல்வத்தையும் விட்டு ஸந்யாஸியைப் போல் வெளிவந்த இச்செட்டியார் கடவுளை வணங்கத் தொடங்கி

னூர். தினந்தோறும் இவன் அங்கிருந்த தேவாலயத்திற்குட் சென்று, "கடவுளே, யான் செய்ததீச் செயல்களை மன்னித்து, எனக்கு நற்புத்தி புகட்ட வேண்டும்." எனத் துதிப்பது வழக்கம். அவ்வாறு, ஓரிரவு கோவிலிலிருந்து திரும்பியபொழுது, வெளிப்புறமிருந்த மண்டபத்தில் யாரோ ஓர் துறவி உட்கார்ந்திருப்பதைக் கண்டான். பணமில்லாதவர்களும், ஸங்கடத்திற் சிக்கியவரும் தெய்வ பக்தியையும், துறவிகளிடமன்பையும் அடைவது வழக்கமல்லவா? இந்த ஸாதுவைக் கண்ட வீரன், அவர் ஸமீபஞ் சென்று, கைகட்டி வாய்புதைத்து நின்றான். உடனே அப்பெரியவர், "தம்பீ, வா, நீயிருப்பது பெருந்துறையல்லவா? உன் பெயர் வீரன் செட்டியார்" என்றுரைத்தார். முன்னறியாத் தவரைக் கண்டதாகக் கருதாத செட்டியார், தன் பெயரையும், ஊரையுஞ் சொல்லியவுடன் அத்யாச்சர்யமடைந்து, "ஸ்வாமி, நமஸ்கரிக்கின்றேன்." எனக்கண்ணீர் ததும்ப மொழிந்து, அவர் கால்களில் வீழ்ந்து கும்பிட்டு நின்றான்.

ஸாது:—"ஆசீர்வாதம். அப்பா, எவ்வளவோ இன்பமநுபவித்த நீ, தற்காலம் தனியே திரிகிறாயல்லவா?"

வீரன்:—"கருணாகரா, தாங்கள் சொல்லியதெல்லாம் வாஸ்தவம்: எனக்கு நேர்ந்திருக்கும் ஸங்கடம் நீங்குமோ?"

ஸாது:—"வீரா, ரஹஸ்யம் எனக்குத் தெரியும்; அதனை வெளியிட்டால் எல்லாந் துறந்த ஸந்யாஸியாகிய யான் பாபத்திற்குள்ளாவேன். பாபமும், புண்யமும் பலருக்கு விளங்குவதில்லை. காலையிலெழுந்து காக்கைபோல் முழுகி, பட்டை பட்டையாய் நாமங்களோ, விபூதியோ அணிந்து, மனதிற் பற்பல எண்ணங்களோடுட்கார்ந்து, ஜபம் செய்பவர்போல் முணுமுணுத்த பிறகு அந்யருடைய செல்வத்தைக் கவர்வதிலும், பொய் ஸத்யஞ் செய்வதிலும் மனஞ்சலியாது திரிபவர், புண்யசாலிகளாய் உலகோரால் மதிக்கப்படுகின்றனர்! சித்த சுத்தியோடு கடவுளை முக்காலத்தும் பணிபவன், அநாசாரமுள்ளவனாகக் காணப்பட்டால், அவனைப் பாபியெனச் செப்புகின்றனர்! கங்கை முதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்

பவநக்கு மோக்ஷமென்றால், அவ்வாறுகளில் ஸதா ஸர்வ காலமும் மூழ்கிக்கொண்டேயிருக்கும் மீன்களுக்கெல்லாம் மோக்ஷங்கிடைக்குமே! மோக்ஷத்திற்குச் செல்லத்தக்க அம்மச்சங்கள், வலைஞர் கையிற் சிக்கப்படும் பாட்டை யார் தானறியார்? மூழ்குவதாலும், வெளிவேஷத்தாலும் ஸ்வர்க்கம் கிட்டுவதானால், நம் ப்ராசீன ரிஷிகள், எல்லாப் போகங்களையுந் துறந்து, காட்டிற் கஷ்டப்பட நேர்ந்திராதல்லவா? முக்காலத்தையுங் கண்டறியத்தக்க அப்பெரியோர், நாட்டில் வஸித்தால் அந்யரைப் புண்படுத்த நேருமோவெனப் பயந்தே காட்டிற் சென்று காலங்கழித்தனர். தம்பி, உன் பெண்சாதியின் ரஹஸ்யத்தை யான் வெளியிடில், அவள் வருத்தமுறுவாளல்லவா? அஃதுதான் பெருங்கொடுமை! என் வார்த்தைகளில் இன்னும் நம்பிக்கையுண்டாகவில்லையோ? நீ உன் மனைவியோடு இன்புற்று வாழ்வாய்."

வீரன்:—"தங்களைத் தெய்வமாக மதித்தேன்! எனக்கு நற்புத்தி புகட்டவேண்டும்."

ஸாது:—"நல்லது, எனக்கு யோகஞ் செய்ய நேரமாயிற்று."

வீரன்:—"ஸ்வாமி, பணமில்லாது ஏழையாயிருக்கும் ஸமயத்தில், தங்களை ஸந்தித்தேனே! இத்தகைய சக்தியுள்ள தங்களுக்கு ஆயிரம் பவுனாலுங் கொடுப்பேன்."

ஸாது:—"நன்றாயிருக்கின்றது! எனக்கு உன் பவுன் வேண்டாம். எல்லாம் துறந்த எனக்குப் பவுன் வேண்டுமோ? மேலும், நீ வெறுங் கையனாயிருப்பது எனக்கா தெரியாது! காசுள்ளவர்களுக்கு என்போல் துறவிகளிடம் அன்பும், பக்தியும் பிறக்குமோ? அடி பகவதீ, பாபநாசினீ"

எனத் துதித்த ஸாது, தன் கையிலிருந்த விலையேறப்பெற்ற ஒரு பதக்கத்தை வீரனுக்குக் கொடுத்து, "அப்பா, இதனை விற்றுச் சில காலம் காலக்ஷேபஞ் செய்யடா தம்பி" என்றவுடன், வீரன் அதனைப் பெற்றுக்கொண்டு, அந்த ஸாதுவை நமஸ்கரித்துச் சென்றான்.

நமது வீரன் செட்டியார், மறுநாட் காலையிலெழுந்து அப் பதக்கத்தைக் கையிற்கொண்டு கடைவீதிக்குச் சென்று, ஓர் வ்யாபாரியின் கடையில் நுழைந்தபொழுது, வெளிப்புறமிருந்தவோர் வேலைக்காரன், "யாரடா உள்ளே போகிறது? நில்" என்றதால், வட்டிக் கடை வைத்து நன்றாக வாழ்ந்த வீரன் செட்டியார், வெளியே நின்றார். மேலும் அவ்வேலையாள், "முகத்தையும் வேஷத்தையும் பாரடா! இக்கடையிலுள்ள நகைகளைப் பூட்டியல்லவா, உன் அழகைப் பார்க்கவேண்டும்!" என்றான். வீரன், "அப்பா, யான் ஒரு பிச்சைக்காரனல்ல; ஓர் பதக்கம் வைத்திருக்கின்றேன்; அதனைக் காட்டிச் செல்லலாமென வந்தேன்" எனச் சொல்லியதைக் கேட்டுக் கடையினுள்ளிருந்த வர்த்தகன், இவனையுள்ளே வரச்சொல்லியழைத்தான். வீரனும் உள்ளே நுழைந்து, தான் வைத்திருந்த பதக்கத்தை யக்கடைக்காரனிடங் கொடுத்தான். அதனைக் கண்டவுடன் அவ்வணிகன், "ஹா! இஃதல்லவா ரத்நம்! இதனைக் கண்ட என் கண்கள், என்னிடமுள்ளவைகளைச் செங்கற்களாகத்தான் இனி மதிக்கும்! இஃது, எவ்வாறு இப்பரதேசியின் கையிற் சிக்கியதோ?" என வியந்து, கண்கொட்டாமற் பார்த்திருந்தபொழுது, அவ்வூரதிகாரி அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்ட கடைக்காரன், "ஐயா, வாருங்கள், உட்காருங்கள். இதோ தங்களுக்குத் தகுந்த நகை! பாருங்கள்" எனச் சொல்லியப் பதக்கததை யவனிடம் கொடுத்தான். அதனைப் புரட்டிப் பார்த்த அவ்வதிகாரி, அது எவ்வாறு கிடைத்ததெனெ வினவியதால், கடைக்காரன், வீரனைக் காட்டினான். அதிகாரிக்குக் கண்கள் சிவந்தன. மீசை படபடத்தது. மஹா கோபாக்ராந்தனாய் வீரனை நோக்கி, "அடே பயலே, அடிபட்டுச் சாகாதே! இதனைத் திருடியதெப்படி? உண்மையைச் சொல்லிவிடு!" எனக் கடுமையான குரலோடுரைத்தான். கைகால் நடுக்கங்கொண்ட வீரன், "ஐயா, இப் பதக்கத்தை யான் திருடவில்லை. நேற்று இரவில், ஓர் ஸாது, என் நிலைமைக்கிரங்கி, இதை இனாமாகவெனக்களித்தார்" என்றான். இதனைச் செவியுற்ற அவ்வதிகாரி, "நிரம்ப அழகு! ராஜாதி ராஜாக்களணியும் இந்த ஆபரணத்தை ஒரு பரதேசியா இனாங்கொடுத்தார்?" எனச் சொல்லிப் பற்களைக் கடித்துக்கொண்டு, வீரனது இருகன்னங்களிலும்

மாறிமாறிப் பல அடிகள் அறைந்தார். கடைக்காரன், "ஐயா, இவ்வேழை, சாகிறவன்போலிளைத்திருக்கின்றான்! அடிக்கவேண்டாம்; விசேஷம் யாது?" என அவ்வதிகாரியை வினவியவுடன், "ஐயா, கடைக்காரரே, கேளும் அநியாயத்தை; பெருந்துறையில் தங்கியிருக்கின்ற மஹாராஜாவாகிய பொன்மண்டல மன்னனுக்குச் சொந்தமானது இப்பதக்கம்! இதன் அடையாளங்களைப் பற்றியும், பின்புறம் 'ஸ்ரீமந்தன்' என்று எழுதப்பட்டிருக்குமென்றும், இத்திருட்டைக் கண்டுபிடிப்பவர்க்குப் பெருத்த பரிசளிக்கப்படுமென்றும் இன்று காலையில் அவ்வேந்தன், எனக்கு எழுதியிருக்கின்றார். இப் பயலைச் சிறையிலிட்டு, அம்மன்னனளிக்கும் பரிசுகளைப் பெற்று வருகின்றேன்" எனச் சொல்லி, வீரனையிழுத்துச் சென்று, பெருந்துறைச் சிறையிலடைத்தான்.

குமரன், ரத்நாசலம் சென்றானல்லவா? அவ்விடம் இவன் வேலையிலமர்ந்ததும், ஞாநசுந்தரியை மணப்பதிலாசை வைத்து, அச்சிற்றரசனையும், அவனது மனைவியையும் ஒருவருமறியாது கொன்று, அரண்மனையிலுள்ள ஏராளமான பொருள்களைக் கவர்ந்து, அச்சீமானது ஒரே மகளையுந் தூக்கிக்கொண்டு பெருந்துறைக்கு வரும் வழியில் அப்பெண்ணை விற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த ரஹஸ்யமனைத்தும் வெளிவந்ததுமன்றிக், குற்றவாளியாகிய குமரனும் ஒப்புக்கொண்டான். இவன், கொலை செய்யப்படவேண்டியதெனத் தீர்மானத்தோடு அனுப்பப்பட்டு, பெருந்துறைச் சிறையில் சரவணன், வீரன் இவ்விருவருக்குந் துணையானான். குற்றஞ் செய்த அம்மூவரும், அவரவரிழைத்த தீங்குகளை நினைந்து நினைந்து, மனம் நொந்து, ஒருவரோடொருவர் பேசாமலும், முகத்தை மூடிக்கொண்டும் ஊமை போலும், குருடர் போலு முடங்கார்ந்திருந்தார்கள்.

## அத்யாயம் உக.

## மஹாராஜா.

சரவணனைத் தலைவனாக்கியதாற் கலிங்க நாட்டில் நடந்த அக்ரமங்களும், அத்தலைவனே தன்னிறுமாப்பினாற் செய்த வநீதிகளும் எல்லோர் மனத்தையும் புண்படுத்தின. அவனைச் சிறையிட்ட பிறகு, ந்யாய ஸபையிலிருந்த வொருவரெழுந்து, பின்வருமாறு சொல்லலுற்றார்:—

"ஸபையோர்களே, நமது நாட்டில் நடந்த வேறுபாடுகளின் பயனைப் பார்த்தீர்களா? ஒருவனுக்கு ஏற்படும் மேம்பாடுகள் யாவும் அவனது பிறவியை யொத்திருக்குமென்பது அநுபவஸித்தாந்தம். பிறவியினாலேயே பெருந்தன்மை பொருந்திய யானை, பாவுத்தனாற் குத்தப்பட்டுச் சங்கிலிகளாற் பிணைக்கப்பட்டிருப்பினும், தனக்கென்று தலையிற் சுமந்து போடப்படு மாஹாரத்தைத் தரித்ரர்போல் ஆவலோடுண்ணாமல், அங்குமிங்கு மெறிந்துகொண்டும், கம்பீரமாய்ப் பார்த்துக்கொண்டு நின்கிறது. கேவலமாய்ப் பிறந்த நாயோவென்றால், எச்சிலையில் வீசியெறியப்படும் பருக்கையைத் தன் வாலையாட்டிக்கொண்டும், பற்களைக் காட்டிக்கொண்டு நின்று, அவ்விடம் விட்டு விலகாமற் காத்திருக்கின்றது! ஆதலின், பிறவியினாலும், படிப்பினாலும், பழக்கத்தினாலுந்தான் நற்குணங்களும், கௌரவமும், கீர்த்தியுங் காணப்படுகின்றன! இத்தகைய குணாதிசயமுள்ளவன் தான் ராஜ்யத்தை வஹிக்கத்தக்கவனாகின்றான். பிறவியின் மேன்மையும், கல்வியிற் சிறந்த அமைச்சர்களினாலோசனைகளாற் படிப்பின் பெருமையும், ராஜஸபையிற் பழகுபவரின் சேர்க்கையால் ஸந்மார்க்கங்களும பரம்பரையாய் அரசராயிருப்பவரிடமே காண்கின்றோம்! இனி நாம், குடியரசு என்ற பதத்தை மறந்துவிடவேண்டும்! க்ஷத்ரிய மரபிற் பிறந்து, மஹாக்யாதிபெற்றிருக்கின்ற பொன்மண்டலமன்னர், நமது நாட்டை யாள்வதற்கென்றே கடவுளால் அனுப்பப்பட்டிருக்கின்றார்! பெரியோர்களே, கல்விக் கடலின் கரைகண்டவர்

களே! நாமெல்லோரும் புறப்பட்டுப்போய் அவரை யழைத்து வந்து, குணகனுக்குப் பிறகு காலியாயிருக்கும் ஸிம்ஹாஸனத்திலேற்றவேண்டும்! மனனாராயிருக்கு மவர், ஆக்ஷேபிக்கவே மாட்டார்" எனச் சொல்லி முடித்தார்.

அங்கிருந்தவெல்லோரு மவ்வாறே நிர்மாணித்திருந்ததால் ஸரியென்றொப்புக் கொண்டார்கள்.

பெருந்துறை ராஜவீதியில், அலங்கரிக்கப்பெற்ற பல யானைகள் போய்க்கொண்டிருந்தன. பிறகு நூறு நூறான குதிரைகளும், படைகளும் ஒழுங்காகச் சென்றன. இதன்பின், செவிகள் செவிடுபடும்படி வாத்ய கோஷங்களும், திருச்சின்னங்களும் இன்னிசையோ டொலித்தன. வெள்ளிக் கொடி தங்கக் கொடிகளைத் தோள்களில் தாங்கிப் பலர் சென்றனர். பொன்மயமான கைப்பிடியோடு கூடிய சாமரம் வீசப்பட்டது. நகரத்து மஹா ஜனங்கள் முன்னே செல்ல, நவரத்னமயமான நகைகளால் அலங்கரிக்கப் பெற்றதும், முகத்து, வைரம இழைகளால் ஒளிவீசுகிற அம்பாரியை முதுகில் தாங்கியும் பெரியதோர் யானை பின்னே சென்றது. அழகிய அவ்வம்பாரியில், கோடிமன்மதர்போற் பொன்மண்டலமன்னன் விளங்கினான்! இவ்வாறு அவ்வூரை வலமாகச் சென்ற அக்கூட்டம் பழய வேந்தர்கள் கட்டிவைத்த அதிரமணீயமான அரணமனையின் முன் நின்றது. அக்கட்டிடத்துள் அலங்கரிக்கப்பட்டிருந்ததோர் மண்டபத்தில் நவரத்நகசிதமான ஸிம்ஹாஸனம் போடப்பட்டிருந்தது. மன்னன் அதிலுட்கார்ந்தான். உடனே, அந்தணர்பலர் வேதமந்திரங்களை யுச்சரித்துக்கொண்டும், -ஸாம்ராஜ்யே நாபிஷிஞ்சாமி-எனக் கம்பீரமாய்ச் சொல்லிக்கொண்டும் கங்காதி தீர்த்தங்களால் நராதிபனுக்கபிஷேகஞ் செய்தார்கள். கலிங்கநாட்டிற் கதிபனாகிய நராதிபன், நன்றாயலங்கரிக்கப்பட்டு அவ்வாஸநத்தில் வீற்றிருந்தான். அப்பொழுது, விப்ரர்கள் காந்தியால் ஜ்வலிக்கிற க்ரீடத்தையும், கேயூரம், புஜவலயம் முதலிய ஆபரணங்களையும அவ்வேந்தனுக் கணிந்தார்கள். அந்நாட்டின் கனதனவான்களனைவரும் புதிய மன்னனுக்குப் பல காணிக்கைகளைக் கொடுத்துக் கொண்டாடினார்கள். அளவற்ற பணமும், பசுக்களும் ப்ராம்மணர்களுக்குப் பரிசளிக்கப்பட்டன.

ஏழைகளுக்கு அன்னவஸ்திரங்களையபரிமிதமாக வழங்கினர். அநந்தரம், அவரவர் நிலைமைக்குத் தக்கபடி வேந்தனிடம் விடைபெற்றுச் சென்றார்கள்.

அந்நகரத்திலுள்ள குழந்தை முதற் கிழவனீறாகயாவரும். ஆநந்தக் கடலிலாழ்ந்தனர். மந்தமாருதம் மெதுவாய் வீசியபொழுது, ஆடிய மரக்கிளைகள் ஆநந்தக்கூத்தாடுவன போற்காணப்பட்டன! வானத்தில் விளங்கியநக்ஷத்ரங்கள் வெண்மையான பற்களைத்திறந்து சிரிப்பனபோற் ப்ரகாசித்தன!

அவ்விரவு துரிதமாய்ச் சென்றது. பிறகு, தாமரை முதலிய மலர்கள் மலர்ந்தன. அம்மலர்களைச் சுற்றிவண்டுகள் இன்னிசை பாடின. புதிய வேந்தனைப்பார்க்க வருபவன் போல் பகவான் பானுமூர்த்தி உதயகிரியிலேறினார். மஹாராஜாவாகிய புண்ய புருஷனும், சிங்காஸனமேறினான். உதயமார்த்தாண்டன் செட்டியாரின் மகனாகிய சங்கரன் செட்டியார், அமைச்சருக்குரிய உடைகளணிந்து அருகில் நின்றார். மாமுண்டி வன்னிமுண்டானது பரிவாரங்களாயிருந்தவனைவரும் போர் வீரரானார்கள். படைத்தலைவனுக்குரியவுடையோடு வன்னிமுண்டான் நின்றான். நகரத்து மஹாஜனங்கள் அங்கே கூடினர். அப்பொழுது வேந்தன், எல்லோரையும் நோக்கி, "அன்பார்ந்த ப்ரஜைகளே, நீங்களெல்லோருங் கூடி, எனக்கு மகுடாபிஷேகஞ் செய்வித்தீர்கள்! ஸாதாரண மனிதர், இவ்வேந்தன் பதவியை மேலாகக் கருதுவார்கள். பணக்காரனாயிருப்பவன், காலிற் பாதரக்ஷையும், கையிற் குடையுங்கொண்டு சென்றால், மற்ற ஏழைகள் அவனைக்கண்டு அவனது பதவியை விரும்புவது வழக்மல்லவா? ஆனால் பாதரக்ஷை, காலைக்கடிப்பதனாலும் கை நோவக் குடைபிடிப்பதனாலும உண்டாகக் கூடிய துன்பத்தை இவ்வேழைகளறிந்திருப்பாராயின் அவ்வாடம்பரத்திலாசை வைப்பரோ? எல்லோரும் விரும்பக்கூடிய பெரும் பதவிபெற்ற கொற்றவன், பன்மடங்கான கவலைகளை யடைகிறான். கல்வியிற் சிறந்த ஸபையோர்களே இக்கலிங்க நாட்டை யாளும் பாரத்தை என் தோள்களிற் சுமத்தினீர்கள்! இந்நாட்டிலுள்ளவெல்லோருமின்புற்று. வாழுமாறு யானும் மநுநெறி தவறாதிருக்கத் தலைப்பட்டிருக்கின்

றேன். எனக்கு மகுடஞ்சூட்டிய மகிழ்ச்சியை யெல்லாரும் பெற்றிருக்கச் சிலர் வியாகுலப்படுதல் தகுமோ? ஆதலின், சிறைச்சாலையிலடைபட்டிருக்கிற வெல்லோரையும் மன்னிக்க வேண்டும். அவர்களுள், பெருங் குற்றவாளிகளாகிய, சரவணர், குலசேகர கோவர்த்தனர், வீரன் செட்டியார் என்ற இம்மூவருக்கும் தக்க புத்திமதிகளும் அபயமுஞ் சொல்லி யனுப்பல் உசிதமென நினைக்கிறேன்" என்றான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு, மேற்கூறிய மூவரும் மஹாராஜாவின் ஸந்நிதானத்தில் நின்றார்கள். இக்குற்றவாளிகளையும், ஸபையில் நிறைந்திருந்த ஜன ஸமூகத்தையும் நோக்கிய மன்னன், "எனதன்புள்ள குடிகளே, யான் சொல்லப்புகும் விஷயங்களைச்சற்று கவனியுங்கள். பெருஞ் சீமானாய் வாழ்ந்த உதயமார்த்தாண்டரை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்! அவரது பல கப்பல்களிலொன்றாகிய சின்முகத்தை ஓட்டியிருந்த மாலுமியாகிய அபிராமனென் றழைக்கப்பட்டவொரு வாலிபன், இதோ நிற்கிற குலசேகரகோவர்த்தனரது மனைவியாகிய ஞானசுந்தரியம்மாளை விவாஹஞ் செய்துகொள்ள நிச்சயித்து, முகூர்த்தம் வைத்திருந்தான். இக்குலசேகரரைக் குமரன் என்றழைப்பது வழக்கமாயிருந்தது. ஞானசுந்தரியைத் தான் மணக்க விருப்பங்கொண்ட இக்குமரன், அவ்விவாஹத்தை யெவ்வாறு தடுக்கலாமெனக் கவலையுற்றான்! அதே ஸந்தர்ப்பத்தில், உதயமார்த்தாண்டருடைய மாமன் மகனான வீரன் செட்டியார், அபிராமனடைந்திருந்த மாலுமித்தலைவன் வேலையிலாசை வைத்து, அவ்வபிரா
க்குக் கேடு செய்யத் தக்கணங் கட்டிக்கொண்டு இக்குமரனோடு கூடினான். ஸபையோர்களே, உங்களால் வெருட்டப்பட்டுக் கருங்கோட்டையிலடைபட்டிருக்க குணகன், இத்தலைவரது தந்தையாகிய ஆதிநாராயணருக்கோர் கடிதமெழுதி, நீர் நிரப்பிக்கொள்வதற் கத்தீவில் கப்பலை நிறுத்திய அபிராமனிடம் அக்கடிதத்தைக் கொடுத்தனுப்பினான். இவ்வூருக்கு வந்த பிறகு, குடியரசு நியமனத்தைப்பற்றியும், கருங்கோட்டைக்குச் செல்வதே பெருங் குற்றமெனப் பறையறைவித்திருந்த ராஜீக ப்ரகடனத்தைப் பற்றியும் அறிந்த வபிராமன், அக்கடிதமெழுதியவன்

குணகளையிருக்கலாமெனப் பயந்து, விலாஸகாரருக்கு இதனைச் சேர்ப்பிக்காது சட்டைப்பையிலேயே வைத்திருந்தான்.

சுந்தரியை மணந்து கொள்வதிற் பேராசை கொண்ட இக் குமாரனும், மாலுமிவேலையிலாவல் மிஞ்சிய வீரனும் ஓரிரவு அபிராமனது வீட்டில் நுழைந்து, அக்கடிதங்களைத் திருடிப்போய், நகரத்தலைவராய் விளங்கிய இச்சரவணனிடம் கொடுத்து, அபிராமனைக் கடினமாய்த் தண்டிக்குமாறு வேண்டிக் கொண்டார்கள். தலைவரும், அவ்வாறே ஒப்புக்கொண்டு, விலாஸகாரரை வெளியிடாமலிருக்குமாறு தாக்கீது செய்து, இவ்விருவரையு மனுப்பியபிறகு, அபிராமன் ஞானசுந்தரிக்குத் தாலிகட்டின சுபலக்னத்தை அசுபலக்னமாக்கி, நிரபராதியான வபிராமனைச் சிறையிட்டான்! பிறகு விசாரணை செய்யும்பொழுது, ரஹஸ்யம் வெளிவராமலிருக்குமாறு, அபிராமனையோர் அறைக்குளிட்டுச் சென்று, கடிதங் கொணர்ந்த விஷயம் வெளிவந்தால் கொலை செய்ய நேருமெனப் பயமுறுத்திச் சில மாஸங்கள் தண்டித்து விடுதலை செய்வதாகச் சொல்லிக் கருங்கோட்டைக்கனுப்பினான்! தானடைந்திருந்த அதிகாரத்தா லிச்சரவணன், செய்யத்தகாதன செய்தான்: முதலில் மாயாவதியைக் கெடுத்தான்! காணாற்ற குழந்தையாகிய சேகரஸேநனைக் காட்டுவதாகச் சொல்லிய இப்பாதகனுடைய ஆசைமொழிகளை நம்பிய மாயாவதியம்மாள், வீரனை மணந்து கொண்ட பிறகும் இவனது பழைய ஸ்நேஹத்தைக் கைவிடாமல் நினைத்தோறுமிவனைக் கண்டுவந்தாள்! இவ்வாறு நடந்தேறிய துர்நடத்தையை யறிந்த இவனது இளையதாரமாகிய காமினியம்மாள், இவனை வெறுத்தாள்! மேலுமிக் காமினி, தன் குழந்தைகளுக்கொன்றுமில்லாது போமோ வெனப்பயந்து, தன் மாமனருக்குச் சொந்தமான ஸொத்துக்களைத் தானடைய விரும்பி, வயது சென்ற அக்கிழவருக்கும, மூத்தாள் மகளான கமலாக்ஷிக்கும் விஷம வைத்து அவ்விருவரையுங் கொல்ல நிச்சயித்தாள். ஆதிநாராயணர், கமலாக்ஷியைச் சங்கரன் செட்டியாருக்குக் கொடுக்கும்படிக்கும், தனக்குச் சொந்தமான வனைத்தையுங் கமலாக்ஷியடைய வேண்டுமென்றும் மரணசாசனமெழுதினார். பேராசையாகிய பேயால் ஆட்டப்பட்ட காமினி, இம்மோசத்தை யறிந்து, அளவிறந்த பொறுமைகொண்டு கிழவருக்குங் கமலாக்ஷிக்கும் பாலிற் பாஷா

ஷம் கலந்து வைத்தாள் ! அதனைக் குடித்த கிழவர், உடனே யிறந்தார் ! கமலாக்ஷியோ, அதனைக் குடிக்காமலும், பாட்டனிறந்ததை யறியாமலும், படித்துக் கொண்டிருந்த ஸமயத்தில், காமினியின் ஆசைக்கிடமாயிருந்த அவளது குழந்தைகள் அதனைக் குடித்திறந்தன ! ஐயோ, பரிதாபம் ! சரவணன் யாது செய்வான்? அபவாதத்திற்குப் பயந்து ஒருவருமறியாதும், கொட்டு முழக்கம் முதலிய வாடம்பரமில்லாமலும் மூன்று பிணங்களையும் இரவிலேயே ரஹஸ்யமா யடக்கஞ் செய்தான் ! மறுநாள் ந்யாயஸபைக்கு வந்து சித்ரஸேநனை விசாரித்ததில், அவன் தன்னுடைய மகனென்ற விஷயம் வெளிவந்ததால் மானமழிந்து, மனமொடிந்து வீட்டிற் கோடினான் ! அங்கு, காமினி கயிற்றைக் கட்டிக்கொண்டு தொங்கியதையும், கமலாக்ஷி காணமற் போனதையும் நினைந்து மனம் நொந்து புலம்பியபொழுது, உங்களால் சிறைபிடிப்பட்டுப் பல பழிகளுக் காளாயிவ்விடம் நிற்கின்றான் !”

“அபிராமன், கருங்கோட்டைக் கனுப்பப்பட்ட செய்தியையும், அவன் உயிரோடு திரும்புவது அஸாத்யமென்றும், வாழ்நாளை வீணே கழிப்பது முழு மதியீன மென்பதையும் அடிக்கடி சுந்தரிக்குச் சொல்லிய இக்குமரன், அபிராமனிடம் திடமாயிருந்த அவளது மனநிலையைக் குலைத்தான். மேலுமிப்பாதகன், சுந்தரி தன்னையோர் பணக்காரனாக மதிக்க வேண்டுமெனப் பேராசை கொண்டு, ரத்நாசலஞ் சென்று, அங்கிருந்த வேந்தனிடம் வேலையிலமர்ந்து, அச்சிற்றரசனையும், பட்டமஹிஷியையுங் கொன்று, ஏராளமான பணத்தைக் கொள்ளைகொண்ட காரணத்தால் திவான் பஹதூர் பட்டம் பெற்று சுந்தரியை மனைவியாகத் திட்டம் செய்து கொண்டான் ! கொலை செய்த பாதகம் இவனைத் தொடர்ந்தது ! ரத்நாசலபதியின் மகளை இக்குமரன் விலைக்கு விற்றபொழுது, வேறு யாரோ ஒரு வேந்தன் அப்பெண்ணைவாங்கி வளர்த்து வருகின்றான் !” என்றான்.

இதனைச் செவியுற்ற ஸபையோரனைவரும், “மன்னவா, தங்களிடம் வளர்கிற ஜாநகியென்ற பெண், அவள்தானோ?” என வினவினார்கள். உடனே வேந்தன், முகத்திற் புன்சிரிப்புடன்,

" ஆமாம், இப்பெண்ணின் வழக்கால் இக்குமரன் சிக்கிக்கொண்டான்! இப்பாதகனிழைத்த பழிகளனைத்தையும் யானறிந்து, இவனது கதையைப் பத்ரிகையில் ப்ரசுரஞ் செய்தேன். ஜாநகி யென்னிடமிருப்பதால் ரங்காசலமு மென்னாலாளப் படுகின்றது. அகதிகளாய்க் கஷ்டப்படக்கூடிய சுந்தரியையுங் குருநாதனையு மென் வீட்டிலிருத்தியிருக்கின்றேன். குமரனது கதை ஒருவாறு முடிந்தது."

" ஆந்தைபோல் விழித்துக் கொண்டு நிற்கும் வீரனைக்கவனிப்போம். இப்பாவி மாலுமிவேலைக் காவல் கொண்டு அபிராமனைச் சிறையிடக்காரணமானவன்! இப்பாதகம் போதாமல் உதயமார்த்தாண்டரை மோசஞ் செய்து, அவரையேழையாக்கியபந்துத்ரோகி! வட்டிக்கடையல்லவா வைத்திருந்தான்? இவனது குணத்தையறிந்து இவனுக்கு ஒருவரும் பெண்கொடுக்க இஷ்டப்படாததால், தன்னிலும் வயதில் முதிர்ந்த மாயாவதியை மணந்து கலாவதியென்ற பெண்ணைப்பெற்று, இன்புற்று வாழ்ந்தான். முன்னமேயே இம்மாயாவதிக்குப் பிறந்த சித்ரஸேநனைப் பற்றியும், சரவணன் செய்தகொடுமைகளைப்பற்றியும் நீங்களறிந்திருக்கின்றீர்கள். சித்ரஸேநனைத் கண்டிக்காமல் விட்டது பெரும் புண்யம்! அநாதையான மாயாவதியாது செய்வாள்? அவளைக்கெடுத்தவன் நகரத்தலைவனல்லவா? சித்ரஸேநன் இன்றென்றறியாமல் நிச்சயித்தஸஹோதர விவாஹம்நின்று விட்டதாலும், மனைவியுடன் சண்டையிட்டடிபட்டதாலும் க்லேசித்தோடிய இவ்வீரன், அயலூரில் தங்கியிருந்தான். அப்பொழுது யாரோ ஒரு ஸாதுகொடுத்த விலையுயர்ந்தபதக்கத்தைத்கையிற் கொண்டு இவன் விற்கச் சென்றபொழுது, அவ்வாபரணம் என்னுடையதாகையாற் பிடிபட்டுச்சிறையிலடைபட்டிருக்கின்றான்! இக்கிராதனால் மோசஞ்செய்யப்பட்ட உதயமார்த்தாண்டன் செட்டியார், கடன்காரர்களின் தொந்தரைக்குப் பயந்து உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்தார்! அக்காலத்தில் பாலராம ஜோஸி யென்ற பம்பாய் நகரத்து வ்யாபாரியொருவன் ஸமயஸஞ்சீவியாய்வந்து உபசரித்ததால் இன்புற்று வாழ்ந்தார். நன்றிகெட்ட இப்பயல் மாத்திரம், தான் செய்த பாபங்களின் பயனைப் பார்த்துவிட்டான்."

"பெரியோர்களே, என் மகுடாபிஷேக மஹோத்ஸவத்தை முன்னிட்டு இம்மூவரையும் மன்னிக்கின்றேன்! தன் மனைவியோடும், மகனை குருநாதனோடும் குமரன் இன்புற்று வாழக் கடவன். வீரனும், மாயாவதியோடும், சித்ரஸேநன், கலாவதியிவர்களோடும், சிறுவயதிற் செய்த மனைவியின் பிழைகளை மறந்து களித்தல் வேண்டும். சரவணனது நிலைமைமிகப் பரிதாபமானது! மனையாட்டியையும் மக்கள்களையுமிழந்த இவன், யாது செய்வான்? கமலாக்ஷி பெருகுமோடவில்லை. என்னிடமிருக்கின்றாள். இனி, இச்சரவணன், அம்மகளை பராமரித்து வாழ வேண்டும். இவர்கள் யதேச்சையாய்ச் செல்லலாம்." எனச் செப்பினன்.

மஹாராஜா யாது செய்வாரோ எனப் பயந்து நடுங்கி நின்ற குற்றவாளிகள் மூவரும் மன்னிக்கப்பட்டதால் அவர்களடைந்த வாநந்தத்திற்களவேது! விடைபெற்று வெளியே செல்ல வேண்டிய இம்மூவரும், "வேந்தே, எங்களுக்குயிர்ப் பிச்சை கொடுத்த ஸந்நிதானத்தின் கருணையை யென்னென்றுரைப்போம்! காவலா, எங்களுடைய வஞ்சனைக்காளாயிருந்த அபிராமனது கதி யாதாயிற்றோ! அவனைப்பற்றி நினைக்கும்பொழுது, எங்களுக்குப் பச்சாத்தாபமுண்டாகின்றது!" என்றார்கள். சிங்காஸநத்தில் வீற்றிருந்த வேந்தன், "மனிதரெல்லோரும் பாபத்திற்குப் பயப்படவேண்டும். பாபிகள் துன்புறுவதையும், புண்ய புருஷர்கள் இன்புறுவதையும் நாமே கண்ணாரக் காண்கின்றோம். நமோ வாக்காயங்களால் யாதொரு குற்றமுமியற்றா வபிராமன் இன்புறுவதிற்குறையிருக்குமோ? அவனது கதையைக் கேளுங்கள். கருங்கடலின் நடுவிலிருக்கும் கருங்கோட்டைச் சுரங்கத்தில், அவன் தள்ளப்பட்டிருந்தான். அங்கு ஆதிசேஷனென்றவோர் கைதி இவனை நேசித்தான். பிறகு ஆதிசேஷனிறந்ததால், அவனது சரீரத்தை கடலில் எறிவதற்காகக் கட்டி வைத்தார்கள். அங்கிருந்த வீரர், நடுநிசியில் அப்பையைக் கடலிலெறிந்தனர். பையிற் கட்டுப்பட்டிருந்தவனபிராமன்! இவன், மாலுமியாயிருந்து கடலிற் பழகியவனாதலின், பையைக் கிழித்துக்கொண்டுமேலே வந்து, நீந்திப்போய் ஓர் கல்லைப்பிடித்துக்கொண்டான். மறுநாளிரவில் அவ்வழியே போய்க்கொண்டிருந்த

கப்பலிலேறித்தப்பிப் பிழைத்தான்! இவனுக்குக்கிடைத்த திரிவிக்ஷேபத்தால் ராஜாங்க மரியாதைகளோடு வேறு நாட்டில் தங்கினான். தீயர்களான அவனது விரோதிகளைத் தக்கவாறு கண்டித்தான். இவன், தங்கியிருந்த நாட்டார் அவ்வபிராமனை யே மன்னனாகப் பெற்று மகிழ்கின்றார்கள்! ஸபையோர்க ளே, பொன்மண்டலாதிபதியும், பாலராமஜோஸியும், வீரனுக் குப் பதக்கங்கொடுத்த ஸாதுவும், இப்பால் உங்கள் முன்னிலையிற் சிங்காஸனத்திலிருப்பவனும் அவ்வபிராமன்!" எனச் செப்பி னான்.

இதனைச் செவியுற்ற வெல்லோரும், ஆநந்த பரிதர்களாய், 'தர்மம் தலைகாக்கும்' என்ற பழமொழிக்கு லக்ஷ்யமான நமதபி ராமனை, மகுடாபிஷிக்தனாய்க்கண்டு களித்தார்கள். குற்றவாளி கள் மூவரும், "மன்னா, நாங்களிழைத்த பிழைகளெண்ணில வாயினும், எங்களை மன்னித்து விடுவித்த கருணாகராகிய தாங் கள், புத்ர பௌத்ர பரம்பரையாய் இந்நாட்டையாளக் கடாக்ஷி க்குமாறு, கடவுளைக் கையெடுத்துக் கும்பிடுகின்றோம்" எனச் சொல்லி யாநந்தக்கண்ணீர் சிந்தினார்கள். அரசனாகிய நமதபிரா மன், திருச்சின்னங்கள் முழங்கவும், பலர் சாமரம் வீசவும், பற்பல ராஜரீக வாடம்பரங்களோடு, அரண்மனைக்குச் சென்றான்.

---

## அத்யாயம் ௬௰.

## கல்யாண வைபவம்.

பற்பல கலைகளில் நிபுணர்களான பலர், இந்தப் பாரத நாட் டில் நிறைந்திருந்தனர். ஸங்கீதம், பரதநாட்டியம், வேதம், சாஸ் த்ரம், விகடம் ஆகிய இவ்வைந்தில் ஏதேனுமொன்றைக் கற்றுத் தேர்ந்தவர் எங்கிலுங் காணப்படுவர். இத்தகைய வித்வான்கள், அக்காலத்து வேந்தர்களாலும், ஸம்பந்நர்களாலும் ஸந்மானிக்கப் பட்டின்புற்று வாழ்ந்தனர். இக்காலத்திலோ, இவர்களுக்குக் காலக்ஷேபத்திற்கிடமில்லை. மேற்சொல்லிய வித்தைகள் கற்பவ ரற்று அழியத் தலைப்பட்டன. இவ்வித்தைகளின் அருமையை வியந்து அளவிறந்த பொருளளிக்கக்கூடிய வேந்தன் தானில்லை

யென்றால், பணக்காரர்களும் அவர்களைக் கவனிப்பதில்லை. ஆயிரக்கணக்காய்ச் செலவிடுகிற சுபமுகூர்த்தாதிகளிலும் இவர்களுக்கு ஒரு பைஸாவுங் கிடைப்பதில்லை! பணச்செலவிற்கும் பல வழிகளேற்பட்டதால் வித்வான்களைக் கவனிக்கும் வழக்கும் முற்றிலும் நின்றுபோயிற்று! ப்ரதிப்ரயோசனமில்லாக் கல்வியைக் கற்பவர் யார்?

வேதாஸ்ஸஞ் ஜாதகேதா: ஸ்ம்ருதிர பிம்ருதிமா
அஸ்திகிம் சாஸ்த்ரஜாலை: ஏபீஸீடீதி பாடோ
ஜகதிவிஜயதே ஸர்வதக்கால தோஷாத்—

என வடமொழியிற் சொல்லியவாறு, வேதங்கள் களைப்பையும், ஸ்ம்ருதிகள் சாவையும் அடைந்திருக்கிற இக்கொடிய காலத்தில், சாஸ்த்ரங்கள் உயிர்தரிக்கக்கூடுமோ? காலபேதத்தால் எங்கேயும் ஏ. பி. ஸி. டி. என்பதே பாடமாயிற்று! இப்பால் நடந்தேறுகிற விவாஹ சம்ப்ரமங்களைப்பற்றி வினவினால், செலவில் ஐயாயிரமிருப்பினும் வித்வத் ஸம்பாவனை யென்ற தலைப்பின் கீழ் இரண்டணாவுக்கு மேற்குறிப்பவரில்லை! ஆனால், வரதக்ஷிணை முதலிய ஸம்பந்திச் செலவுகள் நாலாயிரத்து எழுநூறுகின்றது! இப்பெருங்கொள்ளைக்கிடங் கொடுத்தவர் யாது செய்வார்? ஐயா, கலியின் வைபவமே வைபவம்!

பல வித்வான்களொன்று கூடிக தங்கள் தங்கள் வித்வத் ப்ரகடனத்தாற் பரிசு பெற்றுய்யும் பொருட்டுத் தேசாடனஞ் செய்தார்கள். இவர்கள் ஒரு நகரத்துட் செல்லும்பொழுது, அந்நகரம், அமராபுரிக்கு நிகராயலங்கரிக்கப்பட்டிருந்ததையும், எல்லோருங் குதூஹலத்துடன் விளங்கியதையுங் கண்டு அவ்வூரெங்குஞ் சுற்றினார்கள். ஓர் அரண்மனையின் முன்புறம் வாழை, கமுகு, ஈந்து, தென்னை முதலிய பழக் குலைகள் நெருக்கமாய்க் கட்டப்பட்டு விளங்கியவோர் கொட்டகை யிவர்களுக்குத் தென்பட்டது! பதினெட்டு வாத்யங்களும் முழங்கி ஒலித்த அக்கட்டிடத்துள் அவ்வித்வான்கள் நுழைந்தனர்.

இக்காலத்தில், பணக்காரர்களிற் சிலர் செய்யும் விவாஹங்களின் ஆடம்பரங்களுக்கொப்ப, பல வீரர்கள் வாயிலில் நிறுத்தப்படுவதால் ஒருவரும் உள்ளே செல்வதில்லை. உள்ளே செல்லு

முறையினரையும் அவ்வீரர் பிடித்துத் தள்ளும்பொழுது, அரையணுவுக்குப் பறக்கும் ஈளைகளா அங்கு நுழையக்கூடும்?

அவ்வாறல்லாமல், தடுப்பவர் யாருமின்றியுள்ளே சென்ற அப்பண்டித சிகாமணிகள், தகுந்த மரியாதைகளோடழைக்கப்பட்டு, அவ்விடம் விரிக்கப்பட்டிருந்த ரத்ந கம்பளத்திலுட்கார்ந்தார்கள். அங்கு இரண்டு விவாஹங்கள் நடந்தேறின. அவ்விரண்டு தம்பதிகளையும் உமாமஹேசுவரர்களென்றும், லக்ஷ்மீ நாராயணர்களென்றும் அங்கு கூடியவனைவரும் வர்ணித்து மகிழ்ந்தார்கள். அவ்விவாஹங்களின் அழகையும், அவை நடந்தேறிய வொழுங்கையும், அங்கு வந்தவரடைந்த மரியாதையையுஞ் சொல்லி முடியுமோ! அக்கட்டிடத்திற் கூடியவெல்லோரும், தக்க பரிசுகளைப் பெற்றுத் தூக்கமாட்டாத மூட்டைகளோடு அத் தம்பதிகளை வாயார வாழ்த்திச் சென்றார்கள். நேயர்களே, தங்கள் காலத்திற் கொஞ்சஞ் செலவிட்டுப் படித்த இப்பெருங் கதை, சுபகரமாக முடிவுபெறுகின்றது. மேற்சொல்லியபடி வித்வான்கள் நுழைந்த நகரம் பெருந்துறையென்றும், அங்கு நடந்தேறிய கல்யாணங்களிலொன்று, தசரத ஜநகர் செய்வித்த அபிராம ஜாநகி விவாஹத்திற்கீடான நமது கதாநாயகனாகிய அபிராமனுக்கும், அவனிடமிருந்த ஜாநகியென்ற கன்யா ரத்நத்திற்கும் நடந்த கல்யாணமென்றும், மற்றொன்று, உதயமார்த்தாண்டன் செட்டியாரின் மகனாகிய சங்கரன் செட்டியாருக்கும், கமலாக்ஷிக்கும் நிறைவேறிய விவாஹ மஹோத்ஸவமென்றும் விளங்கச் சொன்னோம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

ஓம் சுபம்: தர்மமே ஜயம்.

முற்றிற்று.

Purnananda Press, South main Street Tanjore.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 23 | விசாரி | விசாலி |
| 3 | 2 | மரணமடைடந்து | மரணமடைந்த |
| 5 | 6 | நின்றமிதுல்லை | நின்றதுமில்லை. |
| 7 | 20 | கூட்டத்தின் | கூடத்தின் |
| 8 | 25 | இவ்வயது | அவ்வயது |
| 14 | 11 | சென்ருன் | சொன்னான் |
| 19 | 19 | மானத்திற் | மானத்திற்குப் |
| 19 | 20 | என் வீட்டில் | என் அயல் வீட்டில் |
| 28 | 15 | இருந்தது | இருந்தன |
| 31 | 23 | அந்தப் | அந்தரப் |
| 42 | 14 | யத்தர்களின் | புத்தர்களின் |
| 48 | 3 | பொரிய | பெரிய |
| 60 | 7 | தருமங்க | தருமருங்க |
| 60 | 12 | நிவிலிருந்து | நிழலிருந்து |
| 62 | 26 | தூற்றுக்கு | நூற்றுக்கு |
| 66 | 5 | பொனுங்க | போருங்க |
| 67 | 6 | பூனூனுக்கு | பூனூலுக்கு |
| 78 | 27 | நாவலர் | காவலர் |
| 85 | 8 | வருங்களாக | வருஷங்களாக |
| 86 | 16 | விஷயங்களின் | விஷங்களின் |
| 86 | 32 | காமாக்ஷி | கமலாக்ஷி |
| 87 | 9 | முடிந்து | முடித்து |
| 94 | 21 | வெலையில் | வேளையில் |
| 101 | 7 | மன்னவர் | மன்னவா |
| 102 | 21 | சித்தித்தான் | சிந்தித்தான் |
| 104 | 11 | அவனுடம் | அவனுடன் |
| 107 | 1 | அவ்வேலையில் | அவ்வேளையில். |
| 114 | 17 | தங்களெதன | தங்களதென |
| 115 | 29 | பர்வ | பருவ |
| 116 | 2 | விஷயங் | விஷங் |